

தமிழ்க்குடி
மகனுக்குச்
சில
யோசனைகள்!

கல்கி

KALKI 25.5.97 ரூ. 4.00



கரும்பு சுவைக்க சன்மானமும் உண்டு!

'கல்கி' வார இதழும்

'ஸ்ரீராம் டிரஸ்ட்' நிறுவனமும்

இணைந்து அளிக்கும் மகத்தான முதலீட்டுத் திட்டம்

ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ.10,000 முதலீடு செய்யுங்கள்.
5 ஆண்டுகளில் ரூ.20,000 (இரு மடங்கு)
பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன்

● 4 இலக்கியப் பொக்கிஷங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள் ●



1. 'கல்கி' வார இதழ் 5 ஆண்டுகளுக்கு (260 வாரங்களுக்கு) உங்கள் இல்லம் தேடி வரும்.
2. 'கல்கி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.
3. பொன்விழாக் காணும் 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.
4. 'அமுதசுரபி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.

ரூ.10,000 (ரூ.பத்தாயிரம்) 'ஸ்ரீராம் டிரஸ்ட்' பெயருக்கு செக் / டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி:

'ஸ்ரீராம் டிரஸ்ட்', ஏ-7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை – 600 102. தொலைபேசி: 628 68 69, 628 78 79

---

1. முழுப்பெயர்: திரு / திருமதி / செல்வி..
   முகவரி:..
   ....
   ....
2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர்:
   முழுப்பெயர்:..
3. வாரிசுதாரர்:..
4. கல்கி, அமுதசுரபி இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:..
   ....
   ....

CHEQUE / D.D.No. DT. ON

இடம் .... 5 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.20,000 திரும்பப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன்

தேதி .... முதலீட்டாளர் கையொப்பம்



“எல்லா வழிகளையும் அடைத்து விட்டால் என்ன செய்வது?”

டாக்டர் கே. கிருஷ்ணசாமிக்கு சொந்த ஊர் உடுமலைப்பேட்டைக்கு அருகில் உள்ள மசக்கவுண்டன்புதூர். விவசாயக் குடும்பம். பூளவாடி கிராமத்தில் பள்ளிப் படிப்பு. கோவையில் மருத்துவப் படிப்பு.

“எனக்கு சிறு வயது முதலே, தீண்டாமைக் கொடுமை மீது ஒரு கோபமுண்டு. அதுவே கல்லூரி நாளில் சமூதாயப் பணியில் ஈடுபட ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது.

“எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது, நான் மருத்துவக் கல்லூரி மாணவன். வேடசந்தூர் அருகே குடகனாறு அணை உடைப்பு காரணமாக இருபது கிராமங்கள் தண்ணீரில் மூழ்கின. நான் கோவை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பலரையும் அழைத்துக் கொண்டு அங்கே போய் ஒரு வாரம் தங்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை புரிந்தேன்.

“எண்பதாம் வருடம் கடும் வெள்ளம் வந்தபோது, தீவுகளாகி விட்ட பல கிராமங்களுக்கும் இரண்டாயிரம் மாணவர்களுடன் சென்று, நூறு மூட்டை அரிசியும் இன்னபிற தேவையானவற்றையும் சேகரித்து, விநியோகித்தேன்.

“ஒரு டாக்டராகி, நான் வளர்ந்த கிராம மக்களுக்கு சேவை புரிய வேண்டும் என்பதே என் லட்சியமாக இருந்தது. ஆகவேதான் மருத்துவம் படித்தேன். என் லட்சியப் படியே, எம்.பி.பி.எஸ். முடித்தவுடன், எனது கிரா

— டாக்டர் கிருஷ்ணசாமி கேள்வி...

மத்தில்தான் பிராக்டீஸைத் துவக்கினேன். தீண்டாமைக் கொடுமை காரணமாக, எனக்கு அங்கே பல பிரச்னைகள். தாழ்த்தப்பட்ட மக்கள் என் கிளினிக்கிற்கு வருவதால், மற்ற சமூகத்தினர் வர மாட்டார்கள். எனது சமூகத்தினருக்கு நான் மருத்துவ உதவி வழங்கக்கூடாது என்று மிரட்டல் கூட வந்தது. நான் அதற்கெல்லாம் துளியும் அசைந்து கொடுக்கவில்லை. கல்லூரி நாட்களிலேயே நான் அடக்குமுறைகளைப் பார்த்தவன்தானே?

கல்லூரி நாட்களில் கிருஷ்ணசாமிக்கு மார்க்ஸிய சித்தாந்தத்தில் நம்பிக்கை. நாலாம் வருடம் எம்.பி.பி.எஸ். படித்துக் கொண்டிருந்த போது, எமர்ஜென்ஸி அமலில் இருந்தது. அதை எதிர்த்துக் குரல்கொடுத்த கிருஷ்ணசாமி, மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அவர் நான்காம் வருடப் பரீட்சையை மதுரை சிறையிலிருந்தபடிதான் எழுதினார். எட்டு மாத சிறை அனுபவம்!

அடுத்த ஆண்டு பரீட்சையின் போதும் கிருஷ்ணசாமி சிறைக் கைதிதான். விழுப்புரத்தில் பன்னிரண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, துண்டுப் பிரசுரம் விநியோகித்ததுதான் அதற்குக் காரணம்.

எண்பதுகளிலிருந்தே தலித் இயக்கங்களுடன் தொடர்பு உண்டு. கொடியன்குளம் சம்பவம் நிகழ்ந்தபோது, இவர் துவக்கிய தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பின் குரல் ஓங்கி ஒலிக்க, இவர் மக்கள் கவனத்தை ஈர்த்தார்.

"அரசாங்க அமைப்புக்கு வெளியே இருந்து கொண்டு, எனது சமுதாயத்தின் நிலைமையை அரசுக்கு எடுத்துச் சொல்வதில் எந்தப் பலனும் இல்லை என்று நான் உணர்ந்தேன். கொடியன்குளம் பிரச்னை பற்றி சட்டசபையில் பேசும்படி எத்தனை எம்.எல்.ஏ.க்களைச் சந்தித்துப் பேசினேன் தெரியுமா? ஒருவருமே கண்டுகொள்ளவில்லை.

"நானே சட்டமன்றம் சென்று, நமது தேவைகளை, பிரச்னைகளை எடுத்துச் சொன்னாலாவது, எனது சமுதாயத்துக்கு விடிவு பிறக்காதா என்றுதான் கடந்த தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன். கொடியன்குளம் உள்ளடங்கிய ஒட்டப்பிடாரம் தொகுதியிலேயே போட்டியிட்டு சட்டசபைக்குச் சென்றேன்."

"சட்டசபைக்குச் சென்றதன் மூலமாக கடந்த ஒரு வருடகாலத்தில் நீங்கள் சாதித்தது என்ன?"

"யார் காதிலும் விழாத எங்கள் அவலக் குரல், இப்போது சட்டமன்றத்தில் ஒலிக்கிறது என்கிற அளவில் சந்தோஷப்படலாமே தவிர, எங்கள் சமுதாயத்தின் பிரச்னைகள் தீர்ந்துவிட்டதாக நான் ஒருபோதும் சொல்ல மாட்டேன்."

கிருஷ்ணசாமியின் மனைவியும் ஒரு டாக்டர். கோவையில் பிராக்டீஸ் செய்கிறார். "உங்கள் அரசியல் ஈடுபாடு, நடவடிக்கைகள் பற்றி உங்களது மனைவியின் அபிப்ராயம் என்ன?"

"அவள் அதை முழுமையாய் ஆதரிக்கவும் இல்லை; ஒரேயடியாய் எதிர்க்கவுமில்லை!" என்றவரிடம் இன்றைய கலவரத்துக்கான காரணங்கள் பற்றிய சில கேள்விகளையும் கேட்டோம்....

கல்கி : தென்மாவட்டங்களில் நடைபெறுகிற வகுப்புக் கலவரங்களுக்கு அடிப்படையில் என்ன காரணம்?

டாக்டர் கே. கிருஷ்ணசாமி : நடக்கிற மோதல்களை இரு சமூகத்தினருக்கு இடையிலான மோதல் என்று குறிப்பிடுவது சரியில்லை. எங்கள் சமூகம் அமுக்கப்பட்டுக் கிடந்த சமூகம். எங்கள் மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்பட்டு, தமக்கும் அரசியல் சட்டப்படி இந்த நாட்டில் மற்றெந்த குடிமக்களையும் போல சகல உரிமைகளும் உண்டு என்று தெரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளார்கள். இன்னொரு குறிப்பிட்ட சமூகத்தினரால் இந்த எழுச்சியை, விழிப்புணர்வை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அந்த சமூகத்தினர் அரசு எந்திரத்திலுள்ளும் ஊடுருவி உள்ளதால், அராஜகம் புரிகிறார்கள். ஆதிக்கம் செலுத்த நினைக்கும் ஒரு சமூகத்தின் அராஜகத்தை எதிர்த்து, எங்கள் சமூகம் போராடுகிறது என்பதுதான் சரி!

கல்கி : தேவர் சிலை உடைக்கப்பட்டதும் சுந்தரலிங்கம் பெயரில் போக்குவரத்துக் கழகம் துவக்கியதும்தான் மோதலுக்குக் காரணமா?

கிருஷ்ண : தேவர் சிலையை நாங்கள் ஏன் உடைக்க வேண்டும்? இத்தனை நாளாக அங்கே இருக்கிற சிலையை இப்போது நாங்கள் உடைப்பதற்கு என்ன முகாந்திரம்? எத்தனையோ பேர் பெயரில் போக்குவரத்துக் கழகங்கள் இருக்கும்போது, தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் ஒருவர் பெயரில் ஆரம்பித்தால் மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும்? 'அவர் பெயர் தாங்கின பஸ் எங்கள் ஊரில் நுழையக்கூடாது; நுழைந்தால் உடைப்போம்; அதில் நாங்கள் ஏற மாட்டோம்' என்றெல்லாம் சொல்வது என்ன நியாயம்? இதுதான் ஜனநாயகமா? அவர்களும், போலீசும் சேர்ந்து எங்களைத் தாக்குவார்கள். எங்கள் ஆட்களைக் கொல்வார்கள். நாங்கள் சும்மா இருக்க வேண்டும். தற்காப்புக்காக திருப்பித் தாக்கினால், வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி எங்களை மட்டும் போலீஸ் கைது செய்யும், துன்புறுத்தும். வன்முறையில் பலியான எங்கள் சமூகத்தவரின் சடலத்தைப் பெறுவதற்குக் கூட

நாங்கள் கோர்ட்டுக்குப் போயாக வேண்டிய நிலை! இது என்ன ஜனநாயகம்?

கல்கி : இதற்குப் பின்னணியில் அ.தி.மு.க.வும் ம.தி.மு.க.வும் இருந்து கொண்டு தி.மு.க. அரசுக்குத் தொந்தரவு கொடுக்கும் நோக்கத்தில் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறதே!

கிருஷ்ண : நான் அந்த பாயிண்ட்டுக்கே போகவில்லை. அப்படி இருந்தாலும், ஆளுங் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலான பாலிடிக்ஸில் அப்பாவிகளான தேவேந்திர குலத்தவர்கள் ஏன் பலிவாங்கப்பட வேண்டும்?

கல்கி : இதுபோன்ற டென்ஷனான சூழ்நிலை நிலவும் போது, உங்கள் சமூகத்தினரை அமைதிப்படுத்துவதுபோல இல்லாமல், தூண்டி விடுவதுபோல உங்கள் பேச்சு அமைந்துள்ளதே?

கிருஷ்ண : தூண்டிவிடும்படியாய் பேசவே இல்லை. அதே நேரம், பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நான் பேசும்போது, 'என்ன தொல்லை வந்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள்; அமைதியாய் இருங்கள்' என்றா சொல்ல முடியும்? என் சமூகம், ஒற்றுமையாகவும், கட்டுக்கோப்பாகவும் இருந்து, எதிர்த்துப் போராட்டம் நடத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசியது எப்படித் தவறாகும்?

கல்கி : ஆனாலும், கிருஷ்ணசாமி ஒரு இடத்துக்குப் போனால் கலவரம்தான் என்பது போல உங்கள் மீது ஒரு முத்திரை விழுந்து விட்டதே?

கிருஷ்ண : மனம் விட்டுச் சில விஷயங்களைச் சொல்லட்டுமா? அமெரிக்காவுக்குப் போய் அந்த மக்களை 'சகோதர, சகோதரிகளே' என்று அழைத்த விவேகானந்தரின் சொற்பொழிவுக்கு நூற்றாண்டு நடக்கிறது. ஆனால் எங்கள் கிராமப்புறங்களில், வேறு குலத்து பெண் ஒருவரை, எங்கள் சமுதாயத்துப் பெண் 'அக்கா!' என்று அழைத்தால், அதை ஏற்றுக் கொள்ளாமல், 'நான் உனக்கு அக்காவாடி?' என்று வாய் கூசாமல் கேட்கிற நிலைமைதான் நிலவுகிறது.

மதுரையில் மேலூர் அருகே மேலவளவு என்ற ஊர்ப் பஞ்சாயத்து, தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. அங்கே பஞ்சாயத்து தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேவேந்திர குலத்தைச் சேர்ந்தவர், தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்பது மாதங்களாகியும், தன் அலுவலகத்துக்குள் செல்ல முடியாத நிலை. இது அரசாங்கத்துக்குத் தெரிந்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எத்தனை நாட்கள் இந்தக் கொடுமையை சகித்துக் கொண்டிருப்பது? இதை எதிர்த்து, ஏதாவது நடவடிக்கை எடுக்க முனைந்தால், கிருஷ்ணசாமி வன்முறையைத் தூண்டுகிறான் என்பார்கள். நான் அந்த ஊருக்குள் நுழையக் கூடாது என்பார்கள். இதற்கு எதிர்ப்புக்குரல் கொடுத்தால், அரசாங்கமும், பத்திரிகைகளும் கண்டிக்கின்றன. நான் என்னதான் செய்ய?



"ஆளுங் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலான பாலிடிக்ஸில் அப்பாவிகளான தேவேந்திர குலத்தவர்கள் ஏன் பலிவாங்கப்பட வேண்டும்?"

கல்கி : இதுபோன்ற ஜாதிக் கலவரங்களை நிரந்தரமாய்த் தடுக்க என்ன செய்யலாம்?

கிருஷ்ண : அரசாங்கம், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போடுகிற திட்டங்களை ஆத்மார்த்தமாய், முழுமையாய்ச் செயல்படுத்த வேண்டும். பொருளாதார ரீதியில் அவர்களை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அரசியல் சாசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற தீண்டாமை ஒழிப்பைத் தீவிரமாய் அமல்படுத்தப் பாடுபட வேண்டும். அரசு இயந்திரத்துக்குள்ளே இருந்து கொண்டு, ஜாதி துவேஷத்துடன் செயல்படுபவர்களைக் கண்டறிந்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்கி : இவற்றுக்கெல்லாம், ஓர் எம்.எல்.ஏ. என்ற முறையில், தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?

கிருஷ்ண : எனது தொகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கான புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன் சுயதொழில் முனைவோர் கருத்தரங்கு ஒன்றை நடத்தினேன். சுமார் 4000 பேர் கலந்து கொண்டார்கள். நாற்பது அதிகாரிகளையும் அழைத்திருந்தேன். பல்வேறு வங்கி அதிகாரிகளும் வந்திருந்தனர். பல கட்டங்களில் அலசி, ஆராய்ந்து ஆயிரத்து ஐந்நூறு இளைஞர்களைத் தொழில் துவங்கத் தகுதி படைத்தவர்களாகத் தேர்ந்தெடுத்து, அவர்களது கடன் மனுவை அனுப்பி வைத்தோம். ஆனால், வங்கிகள் கடன் தரக்கூடாது என்று மிரட்டப்பட்டதால், என் முயற்சி வீணானது. இப்படி எல்லா வழிகளையும் அடைத்து விட்டால் நான் என்ன செய்ய முடியும்? எங்கள் சமூகம் எப்படி முன்னேறும்?

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **ரவிசங்கரன்**

தங்கையின் வாய்ப்பைக் கெடுக்கிறாரா நக்மா?

நக்மாவுக்கும் ரம்பாவுக்கும் இடையில் அப்படியென்ன தலைபோகிற பிரச்னை? இருவரில் யாரை முதலில் பார்த்தாலும் இந்தக் கேள்வியைக் கேட்டுவிடுவது என்று புறப்பட்டேன். அடையாறு 'சிஷ்யா' பள்ளி மைதானத்தில் அகப்பட்டார் நக்மா. பாக்யராஜ் படம். பாக்யராஜின் பத்து வயது மகன் சாந்துனுவுக்கு அம்மாவாக நடிக்கிறார்.

"இது எனக்கொரு புது அனுபவம்!" என்று சந்தோஷமாகச் சொன்ன நக்மாவைப் பார்த்ததும் அந்தக் கேள்வியைக் கேட்டுத் தான் ஆக வேண்டுமா என்று தயங்கினேன்.

புரிந்து கொண்ட நக்மா, "எதுவானாலும் வெளிப்படையாகக் கேளுங்கள். நானும் வெளிப்படையாகப் பதில் சொல்கிறேன்!" என்றார்.

விஷயத்தைப் போட்டு உடைத்தேன்.

"நானும் ரம்பாவும் 'ஜானகிராமன்' என்ற படத்தில் சேர்ந்து நடிக்கிறோம். முதல் நாள் படப்பிடிப்பில் இருவரும் சந்தித்துக் கொண்டபோது, சீனியரான எனக்கு அவர்தானே முதலில் 'விஷ்' பண்ண வேண்டும் என்று நான் பேசாமல் இருந்து விட்டேன். மறுநாள் சந்தித்துக் கொண்டபோது, எதற்கு வீண் வதந்திகளுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று நானே முதலில் விஷ் பண்ணி விட்டுப் பேசினேன். சமீபத்தில் பொள்ளாச்சியில் நடந்த படப் பிடிப்பின்போது ஒரு பத்திரிகை நிருபர் இருவரையும் சேர்ந்த மாதிரி பேட்டி காண வேண்டும் என்றபோது ரம்பாவை என் அறைக்கு அழைத்து வரச் சொன்னேன். அவரோ என்னை அவரது அறைக்கு அழைத்து வரச் சொல்லியிருக்கிறார். இருவருமே யதார்த்தமாகத்தான் இதைச் சொல்லியிருக்கிறோம். அந்த நிருபர் இதென்னடா வம்பு என்று நினைத்தாரோ என்னவோ இருவரையுமே பொதுவான இடத்துக்கு வரவழைத்துப் பேட்டி கண்டார். இதுதான் நடந்தது. இதுதான் எங்களுக்குள் ஏதோ புகைச்சல் என்கிற மாதிரி வதந்தி கிளம்பவும் காரணமாகி விட்டது. மற்றபடி நாங்கள் நல்ல நண்பர்கள்தான்!" என்று தன்னிலை விளக்கம் கொடுத்தார் நக்மா. (ரம்பா தரப்பில் என்ன விளக்கம் தருகிறார்கள் என்று தொலை பேசியபோது, அங்கும் இதே மாதிரி பதில்தான் கிடைத்தது. "நாங்கள் நட்புடன்தான் பழகுகிறோம்!")

"இதே மாதிரி கோபப்படாமல், இன்னொன்றுக்கும் பதில் சொல்வீர்களா நக்மா?"

"ஓ! ஷ்யூர்!"

"உங்கள் தங்கை ரோஷினிக்கு வருகிற படவாய்ப்புகளை நீங்களே தடுப்பதாகப் பேசிக் கொள்கிறார்களே, உடன் பிறந்த சகோதரியின் வளர்ச்சியைக் கூடவா உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை?"

"ஸ்டுபிட்! யார் சொன்னது? என் தங்கை ரோஷினி



• அப்பாஸ்



* ரம்பா

நக்மாவின் தீர்க்க தரிசனத்தை மனத்துக்குள் வியந்தபடியே "சமீபத்தில் உங்களிடம் கால்ஷீட் கேட்டு வந்த ஒரு மலையாளப் படத் தயாரிப்பாளரிடம், நீங்கள் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் அதனால் புதுப்படங்களைத் தவிர்ப்பதாகவும் சொல்லி அனுப்பி விட்டீர்களாமே? இதை அந்தத் தயாரிப்பாளரே சொன்னார்!"



* நக்மா

புதியவள். சினிமா என்கிற பிரமிப்பெல்லாம் அவளுக்குச் சுத்தமாகக் கிடையாது. என்னோடு படப்பிடிப்புக்கு வந்த இடத்தில் அவளுக்கு நடிக்கிற வாய்ப்புக் கிடைத்தது. வாய்ப்புக் கிடைக்கிறதே என்பதற்காக நிறையப் படங்களை ஒப்புக் கொண்டு விட்டால் எப்படி? முதல் படம் வெளிவந்த நிலையில், ரசிகர்கள் அவளை எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள் என்று பார்ப்போம். பிறகு அவள் மற்ற படங்களில் நடிக்கட்டுமே. அப்போதுதானே ரசிகர்கள் மனத்தில் ஒரு நிலையான இடத்தைப் பிடிக்க முடியும்!"

"அப்படியா சொன்னார்? நான் ஒன்று சொல்ல, அவர் ஒன்றைப் புரிந்து கொண்டு விட்டாரா? அவரிடம் நேரடியாக, 'எனக்கு மலையாளப் படத்தில் நடிக்க இஷ்டமில்லை என்று சொல்ல மனமில்லை. அதனால் தமிழ், தெலுங்குப் படங்களுக்கே என்னால் கால்ஷீட் கொடுக்க முடியவில்லை. அதனால் ஸாரி!' என்று தான் சொன்னேன். அதைத்தான் அவர் இப்படிப் புரிந்து கொண்டு விட்டார்!"

"அப்படியானால் உங்கள் திருமணம்தான் எப்போது?"

"அதற்கென்ன அவசரம்? நான் சென்னைக்கு வந்தது திருமணம் செய்து கொண்டு குடித்தனம் செய்வதற்காகவா? நிறையப் படங்களில் நடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் வந்தேன். மற்றபடி என் திருமணம் பற்றி முடிவெடுக்க வேண்டியது என் பெற்றோர்கள்தான்!" என்றார் அப்பாவியாக!

கிசுகிசுவுக்கு அப்பாஸ் விளக்கம்!

பேஜர் குரல் கொடுக்க எடுத்துப் பார்த்தார் அப்பாஸ், நானும் எட்டிப் பார்த்தேன். 'I love you, 'I love you' என்று வரிசையாக வந்தன.

"இப்படி ஏகப்பட்ட பெண் ரசிகைகளைக் கொடுத்த அந்த ஆண்டவனுக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும்!" என்ற அப்பாஸிடம், "நீங்கள் இப்படி எந்தப் பெண்ணிடமாவது சொல்லியிருக்கிறீர்களா?" என்றேன்.

"எனக்கும் காதல் அனுபவம் இருந்திருக்கிறது. ஆனால் அது வெற்றி பெற வில்லை!" 'என்று சாதாரணமாகச் சொன்னவர், "வேறு ஏதாவது பேசலாமே?" என்றார்.

"தாராளமாக. குஷ்புவை மட்டும் நீங்கள் 'அக்கா' என்று அழைப்பதேன்?"

"அவரைப் பார்த்தவுடனேயே அவரை எனது சகோதரியாக நினைக்கத் தோன்றியது. அதனால்தான். அவருக்கும் என்மேல் அப்படியொரு பிரியம். இதன் காரணமாகவே அவருடன் ஜோடியாக நடிக்கக் கிடைக்கும் வாய்ப்புகளை மறுத்து விடுகிறேன். இதனால் சில வாய்ப்புகளையும் இழந்திருக்கிறேன். 'ஜாலி' என்ற படத்தில் இருவரும் சேர்ந்து நடிக்கிறோம் என்றாலும் ஜோடியாக அல்ல. ஜோடி சிம்ரான்."

"நிஜத்தில் கூட உங்களுக்கும் சிம்ரானுக்கும் காதல் துளிர்விடத் தொடங்கியிருப்பதாக ஒரு பேச்சு... தெரியுமா?"

"சேச்சே! சினிமாவுக்கு வருவதற்கு முன்பே நாங்கள் நல்ல நண்பர்கள். 'மாடலிங்'கில் இருவரும் அறிமுகமானவர்களாயிற்றே! அந்த நட்புதான் இப்போதும் தொடர்கிறது. இதைத்தான் மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்போதைக்கு என்னுடைய லட்சியம் என்ன தெரியுமா? என் பெற்றோருடனும் எட்டாவது படிக்கும் என் தங்கை செஹராவுடனும் சேர்ந்து வசிக்க ஒரு நல்ல வீடு வாங்க வேண்டும் என்பதுதான்!" என்றார் ரொம்பவும் பொறுப்பான பிள்ளையாக.

– ஈஸ்வர்தாஸ்


அட்டை வண்ணப்படங்கள் : பிரவீன்குமார்

***

"இதோ பாருங்க சார், மேயரை 'மாநகரத் தந்தை'ன்னு குறிப்பிடறது வாஸ்தவந்தான்! அதுக்காக, உங்க மனுவோட தொடக்கத்திலே 'அன்புள்ள அப்பாவுக்கு' எழுதியிருக்கறது நல்லால்லே!"

– டி.எஸ். பாலகிருஷ்ணன்





"காதுக்குள்ளே எப்படி ஒரே சமயத்துல இவ்வளவு எறும்பு போயிடுத்து?"

"காதுக்குள் பஞ்சை வெச்சுக்கறதுக்குப் பதில் கவனக் குறைவா பஞ்சு மிட்டாயை வெச்சுக்கிட்டேன் டாக்டர்!"

– பாஸு

உங்கள் உடம்பு

எப்போதும்

கொதிக்கிறதா?

காச நோய்

உங்களுக்கு இருக்கக்கூடும்.

இந்தியாவில் ஒவ்வொரு இரண்டு பேர்களில் ஒருவர் காசநோய்க் கிருமிகளை கொண்டிருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக, அவர்களில் பெரும்பாலானோர் அந்த கொடிய நோயைத் தடுக்கக்கூடிய நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுள்ளனர். மறுபுறம், நோய் எதிர்ப்பு சக்தியை தாக்கக்கூடிய எய்ட்ஸ் நோய்க்கிருமிகள், காச நோயினால் மரணமடைவோரின் எண்ணிக்கையை உயர்த்துகிறது.

ஆனால் கவனத்துடன் உடனடியாக சிகிச்சை எடுத்துக் கொண்டால் காசநோய் 100% குணப்படுத்தக்கூடியதே.

எனவே அதிக காய்ச்சல் தொடர்ந்து இருக்குமானால், மருத்துவரை அணுகி பரிசோதித்துக் கொள்ளுங்கள். அலட்சியப்படுத்தாதீர்கள். ஏனெனில் சாதாரண காய்ச்சல் நீங்கள் நினைத்துப் பார்த்திராத பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

ஒன்றுபட்டு செயல்படுவோம். காசநோயை ஒழித்திடுவோம்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
போன் : 8255261 / 8255467 / 8254917
24 மணி நேரமும் இயங்கும் ஹாட் லைன் : 8256882 / 8256864

"நான் சின்னப் பெண்தான்; சாதாரணப் பெண்ணல்ல!"

சின்னப் பெண். ஆனால், தொழில்துறை பிரவேசத்தையே ஒரு சவாலாக ஏற்றுக் கொண்ட ஷர்மிளா கும்பட், தமது சாதனையைப் பற்றிப் பேசும் போது முகத்தில் அப்படியொரு சந்தோஷப் பிரவாகம்.

"அலங்கார மின் விளக்குகள் தயாரிக்கும் ஒரு தொழிற் கூடத்தை நடத்திவரும் என் அப்பா, கிரில்ஸ் வேலைப்பாடு மூலம் கட்டடங்களை அழகு படுத்தும் மெட்டல் கிராஃப்ட் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார். யாரை நம்பி எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைத்தாரோ அந்த நபர் ஒரேயடியாய் மோசம் செய்துவிட்டார். அது வரையில் என் அப்பா அப்படி கவலைப்பட்டு நான் பார்த்தது கிடையாது. அவர் அந்த நஷ்டத்திலிருந்து மீண்டு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்கிற குறிக்கோள் தான் என்னை பிசினஸில் நுழைய வைத்தது..." என்று ஆரம்பிக்கிறார்.

ஃபாஷன் டிசைனிங் டிப்ளமா கல்வியில் தமிழகத்திலேயே முதல் மாணவியாக வந்த ஷர்மிளாவுக்கு, ஃபாஷன் ஷோக்கள் கலை என்ற பெயரில் விரசமாகவும், ஹைகிளாஸ் கேளிக்கையாகவும் மாறிவிட்டதில் உடன் பாடில்லை.

இன்டீரியர் டெகரேஷனில் ஆஸ்திரேலியாவில் இரண்டு வருட பட்டப்படிப்பு, பர்ஸனாலிட்டி டெவலப்மெண்ட் கோர்ஸ் என தாம் கற்றுக் கொண்ட வித்தைகளையும், தமது கிரியேட்டிவிட்டி ஆற்றலையும் பிசினஸ் வெற்றிக்கு கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

பதினாறு வயதிலேயே பிசினஸில் அடியெடுத்து வைத்து நான்கு வருடங்களுக்குள் ஆறு மடங்கு வளர்ச்சியை எட்டியிருக்கும் ஷர்மிளாவுக்கு முதல் வருடத்தில் நேர்ந்த வேதனைகளும், சோதனைகளும் கொடுமையானவை.



* ஒவ்வொரு கட்டத்திலும் அவமானப்பட்டு அவமானப்பட்டு மனம் ரணமாகி அழுத இரவுகள் பல. தொழிற்சாலையில் பணியாற்றுவோருக்கு இந்த சின்னப் பெண்ணுக்கு என்ன தெரியும் என்ற இளக்காரம். 'சின்ன' முதலாளிக்கோ தாம் நினைக்கும் விதத்தில் வேலை வாங்க முடியவில்லையே என்ற கவலை. இன்னொரு பக்கம், தப்புச் செய்துவிட்டால் பலர் முன்பு கோபத்தில் திட்டும் அப்பா...

"ஈகோ ப்ராப்ளத்தை சமாளிப்பதுதான் பெரும் சவாலாக இருந்தது. நான் திறந்த மனத்துடன் இருந்ததால் சமாளிக்க முடிந்தது. நான் ஆஸ்திரேலியாவில் படித்தவள்... இவர்களுக்கு என்ன தெரியும் என்ற இறுமாப்பைத் தலை தூக்க விட்டிருந்தால் நான் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொண்டிருக்க முடியாது. ஃபாக்

டரியில் அப்பா திட்டினாலும், வீட்டில் அவரிடம் ஆலோசனை கேட்பேன். 'நீங்கள் எல்லாம் தப்புச் செய்யாமலா முன்னேறி விட்டீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்? எப்படி சரியாக அந்த வேலையை முடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுங்கள்...' என்று உரிமையோடு சண்டை போட்டு, தினமும் கேட்டுக் கேட்டு பல நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டேன். எந்த வேலையை எப்படி முடிக்க வேண்டும், எவ்வளவு நேரத்தில் முடிக்க முடியும் என்பதை





யெல்லாம் துல்லியமாகத் தெரிந்த கொண்ட பிறகு தான் எனது திறமைக்கு மரியாதை கிடைத்தது."

தொழிலாளர்களை மட்டுமல்லாமல், வாடிக்கையாளர்களாக வரும் வி.ஐ.பி.க்களை கன்வின்ஸ் செய்வதிலும் 'சின்னப் பெண்' ஸ்டேட்டஸ் ஆரம்பத்தில் பிரச்னையாக இருந்ததாம்.

ஆனால் 1994 - 95 ஆம் வருடத்தில், செங்கை - எம்.ஜி.ஆர் மாவட்டத்தின் சிறந்த இளம் பெண் தொழிலதிபர் என்ற விருது பெற இதே 'ஸ்டேட்டஸ்'தான் காரணம்.

"பிசினஸில் இப்படி பாராட்டுப் பெறுவது பெருமிதமாக இருந்தாலும், டீன்-ஏஜ் ஆசைகளைத் துறந்தது வருத்தமாக இல்லையா?"

"அப்போதெல்லாம் என் அப்பா, காலை ஆறு மணியில் இருந்து இரவு பத்துமணி வரை எங்களுக்காகப் பாடுபடுவதை நினைத்துக் கொள்வேன். நான் சராசரிப் பெண்ணல்ல; ஷர்மிளா என்றால் எல்லோருக்கும் தெரிய வேண்டும். இந்தச் சிந்தனைதான் என்னை முழு மூச்சாக பிசினஸில் ஈடுபட வைத்தது.

"இன்று ஒவ்வொரு நாளும் ஒரு சவாலாக - சாதனையாக இருக்கிறது. புதிய புதிய ஐடியாக்களுக்கு வடிவம் கொடுப்பதால் புத்துணர்ச்சியோடு செயல்படுகிறேன்."

இந்தப் புத்துணர்வு வீடுகளிலும், தோட்டங்களிலும், சாலைகளிலும் பொங்க வேண்டும் என்பது இந்த இருபது வயது டிஸைனரின் இனிய கனவு.

"சாலையைப் பிரிப்பதற்காக நிறுவப்படும் பேரியர் கம்பிகளுக்கு நல்ல வண்ணம் பூசுவதி

அருள்வாக்கு

வெளி தேசங்களில் உள்ள லக்ஷரிகள்தான் இப்போது நம் ஸர்க்காருக்கு 'டார்கெட்' (குறிக்கோள்). வாஸ்தவத்தில், தேசத்தில் திருப்தியும் ஆத்யாத்மிகமான அபிவிருத்தியும் ஏற்பட வேண்டுமானால், ஜனங்களுக்கு இடையில் பொறாமையும் போட்டிகளும் போக வேண்டுமானால், ''வாழ்க்கைத்தரம்'' என்று சொல்வதைக் குறைப்பதற்குத்தான் திட்டம் போட வேண்டும். ஆனால் வாழ்க்கைத் தரத்தை மேல் நாடுகளின் தரத்துக்கு உயர்த்தியே தீர வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு, வேண்டாத வஸ்துக்களை அத்யாவசியத் தேவையாக ஆக்குவதற்கே ஸர்க்கார் திட்டம், திட்டம் என்று ஓயாமல் போட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக, இந்த தேசத்திலுள்ள எல்லா ஜனங்களின் கடனையும் சேர்த்து வைத்து ஸர்க்காரே ஒன்றுக்கப்புறம் எத்தனையோ ஸைஃபர்கள் போடுகிற தொகை லோகம் பூராவும் கடன் பட்டிருக்கிறது. வேண்டாத வஸ்துக்களில் ஜனங்களுக்கு அபிருசியை உண்டாக்கி விட்டு, அவர்களையும் சம்பள உயர்வுக்காக எப்போது பார்த்தாலும் சண்டை, ஸ்டிரைக் என்று இறங்குவதற்குத் தூண்டிக் கொண்டிருக்கிறது. ''திட்டம்'' என்ற பெயரில் திட்டமில்லாமல் செய்கிற காரியத்தால் ஏற்பட்டிருக்கிற inflationல் (பணவீக்கத்தில்) என்ன (சம்பளம்) வந்தாலும் போத மாட்டேனென்கிறது. ஜனங்கள் கடனாளியாக வேண்டியிருக்கிறது. இதற்கு ஸர்க்காரே 'இன்ஸென்டிவ்' (ஊக்குதல்) தருவதாக இருக்கிறது! ஜனங்களைக் கடன் வாங்குவதற்கு நன்றாக பழக்கி வைக்கிற ரீதியில் கிராமத்துக்கு கிராமம் பாங்குகள் திறந்து, அநேக இனங்களுக்கு 'லோன்' (கடன்) கொடுக்கிறது. இதனாலே எத்தனையோ பொய், மோசடி, கரப்ஷன். பாங்கு சொல்கிற இனத்துக்காகக் கடன் வாங்குவதாகச் சொல்லிக் கொண்டு அதை வேறு காரியங்களுக்குப் பிரயோஜனப்படுத்துவது; அதற்காக inspection staff-கு ''அழுவது''; முதலில் பலபேர் மனுப்போடும் போட்டியில் 'லோன்' வாங்குவதற்கே அதிகாரிகளுக்கு ''நைவேத்யம் பண்ணுவது'' என்றெல்லாம் ரொம்பக் குழறுபடியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அப்புறம் கடனைத் திருப்பி வசூலிப்பதும் கஷ்டமாகிறது. கட்டாயப்படுத்தி வாங்கினால் 'வோட்' போய்விடப் போகிறதே என்ற பயத்தில் 'லோனை' write off பண்ணி விடுகிறார்கள். சொந்தப் பணமா என்ன, ஜனங்கள் (வரி முதலானவைகளாக) கொடுத்ததுதானே என்பதால் ஸுலபமாக கடனை வஜா செய்துவிட்டு நல்ல பெயரும் வோட்டும் ஸம்பாதிக்கப் பார்க்கிறார்கள்.



ஏழைகளுக்கு வாஸ்தவமாக நன்மை பண்ணுவதை யாரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் பொதுவாக அடக்கப் பண்பும் எளிமையும் உள்ள நம் ஏழை ஜனங்களை வீண் டாம்பீகத்திலும், பலவிதமான பொய் பித்தலாட்டங்களிலும் தூண்டிவிட்டு, 'பட்ட கடனைத் தீர்க்கத்தான் வேண்டும் என்ற பெரிய தர்மத்துக்கு விரோதமாக நாம் போனாலும் ஸர்க்கார் நமக்குத்தான் ஆதரவாக இருக்கும்' என்று துணிச்சல் கொள்ள வைப்பது நன்மை இல்லவே இல்லை; தீமைதான். 'வோட்டுப் பெட்டி பலம் நமக்குத்தானிருக்கிறது' என்று அவர்களை எண்ண வைத்து, அதற்காக தர்ம பலத்தையும் தெய்வ பலத்தையும் அவர்கள் இழக்கும்படி செய்வது அவர்களுக்குச் செய்கிற தீமைதான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

லும், ரவுண்டானாக்களில் எழில்பொங்கும் மின் விளக்குகளை அமைப்பதிலும் கூட மனதிற்கு இதமான சூழ்நிலையை உருவாக்க முடியும்!'' என்கிறார் ஷர்மிளா.

"இன்டீரியர் டெகரேஷன் என்பது வெறும் அலங்காரம் மட்டுமல்ல; இது 'மூட்' சம்பந்தப்பட்ட விஷயம். வண்ணம், பொருட்களின் ஷேப் எல்லாம் சரியாக அமைந்தால் அந்தச் சூழல் மன அமைதி தரும். குழப்பமில்லாத மன நிலையை உருவாக்கும். புத்துணர்ச்சியை உணர முடியும்!'' என்று கூறும் இந்த இளைய கன்னிக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் கூட அலுவலகம் வந்து தன்னந்தனியாக புதுப்புது டிசைன்கள் பற்றிச் சிந்திப்பதுதான், பரவசமூட்டும் பொழுது போக்காம்.

அழகூட்டுவதை இப்படி ஆராதிக்கும் இவரின் லட்சியம்...? "எப்போதுமே நல்ல மனுஷியாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான்....!"

— மு. சிவலிங்கம்

(ஆதித் கம்யூனிகேஷன்ஸ் உதவியுடன்)

சென்னை - 14, திருவல்லிக்கேணி, கஜேடி பேகம் தெரு, எண் 18/3 என்கிற விலாசத்தில் வசிக்கும் எனது கட்சிக்காரர் எம். தனசேகரன் என்கிற காமராஜ் (90வது டிவிஷன் கவுன்சிலர்) சார்பாக இதை எழுதுகிறேன்.

தங்கள் 4.5.97 கல்கி இதழில், 'சென்னையில் நவீன ரவுடி ராஜ்ஜியம்! - ஓர் அதிர்ச்சி ரிப்போர்ட்' என்கிற தலைப்பின் கீழ் 'நொச்சிக்குப்பம், நடுக்குப்பம் பகுதிகளில் முன்பு 'வீரமணி' என்றால் மக்கள் நடுநடுங்குவார்கள். இப்போது வீரமணியின் இடத்தைப் பிடித்திருப்பவர் காமராஜ். மெரினா கடற்கரைப் பகுதியில் இவரது ஆட்களின் கைவரிசை காணக் கிடைக்கும். செயின், வாட்ச், பர்ஸ் என்று பறிகொடுத்தவர்களின் பட்டியல் அனுமார் வால் நீளம்... என்று வெளியாகியிருக்கிறது.

எமது கட்சிக்காரர் இச் செய்தியை வன்மையாக மறுப்பதுடன் இது பொய்யானது என்றும் தெரிவித்துக் கொள்கிறார். எனது கட்சிக்காரர் கடந்த பத்து ஆண்டுகளாக தி.மு.க. கட்சியின் வட்டச் செயலாளராக (division secretary) இருந்து வருகிறார். அவர் ஒரு சமூக சேவகர். தமது மனப்பூர்வமான சேவைப் பணிகள் காரணமாக சென்னை, திருவல்லிக்கேணி 90வது வட்டத்தின் கவுன்சிலராக, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உங்கள் இதழில் வெளியாகியிருக்கும் செய்தி, எனது கட்சிக்காரரின் இமேஜுக்குக் களங்கம் விளைவித்திருக்கிறது. அவரது கௌரவத்தையும் நற்பெயரையும் பாதிக்கும் வகையில் திட்டமிட்டுப் பொய்ச் செய்தி வெளியிட்டுள்ளீர்கள் என்பது என் கட்சிக்காரரின் நிலை.

இவ்வாறு தீய நோக்குடன் நீங்கள் வெளியிட்டதால் நண்பர், உறவினர், கட்சி வட்டாரங்களிலெல்லாம் தமது நற்பெயர் மீட்புக்கிடமின்றி களங்கப்பட்டுப் போயிருக்கிறது என்கிறார் எனது கட்சிக்காரர்.

எனது கட்சிக்காரர் பேரில் எந்தவொரு வழக்கும் நிலுவையில் இல்லை. எனது கட்சிக்காரர் பேரிலோ அவருடைய உறவினர் பேரிலோ, நண்பர்கள் பேரிலோ எந்தவொரு புகாரும் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்படவில்லை.

தங்களின் மேலான இதழில் உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டு, எனது கட்சிக்காரரின் கௌரவத்துக்கு இழுக்குச் செய்திருக்கிறீர்கள்.

எனவே, இக்கடிதம் கண்ட பத்து நாட்களுக்குள் ரூ. 5,00,000 (ஐந்து லட்சம் மட்டுமே) நஷ்ட ஈடாக அனுப்பி வைக்காவிட்டால், எனது கட்சிக்காரர் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க நிர்பந்திக்கப்படுவார்.

ஏ. நடராஜன்
(வழக்குரைஞர்)

சென்னை உயர்நீதி மன்ற வளாகம்,
சென்னை - 104.

"திட்டமிட்ட பொய்ச் செய்தி!"

— வழக்குரைஞர் நோட்டீஸ்



அமெரிக்கா-விலிருந்து அறுபடை வீடு வரை

'முருகா' என்றதும் உருகிப் போகிறவர் இவர். முருகனது அடியார் திருக்கூட்டம் எங்கே ஒன்று சேர்ந்தாலும் அங்கே இவரைக் காணலாம். அறுபடை வீடுகளைத் தரிசனம் செய்திருக்கிறார். முருக பக்தி பற்றி ஓயாமல் சிந்திக்கிறார்.

பெயர்: பாலசுப்பிரமணியம்? கந்தசாமி? சரவணன்? முருகவேள்?

எதுவுமில்லை. பாட்ரிக் டேவிட் ஹாரிகன்; நாற்பத்தாறு வயது அமெரிக்கர்!

மிச்சிகன் பல்கலைக் கழக மாணவராக இருந்த போது, இவரது முக்கிய பாடங்கள் மதம் சம்பந்தப்பட்டவையாக இருந்தன. புத்தமதம் பற்றி ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தார். தென் ஆசிய மொழிகள் மற்றும் இலக்கியம் பற்றியும் அக்கறை கொண்டார்.

எவ்வளவு படித்தாலும் 'சரி, தெரிந்து கொண்டு விட்டோம்!' என்ற மனநிறைவு என்னவோ பாட்ரிக்குக்கு ஏற்படவே இல்லை. 'இன்னும் இருக்கிறது. இது போதாது' என்ற அதிருப்தியுடன் கூடவே 'நான் படிக்கின்ற முறையும் சரியில்லை. வகுப்பறையில் தரப்படும் 'லெக்சர், நூலகப் புத்தகங்கள் எனக்குப் போதுமானதாக இல்லை' என்ற உணர்வு மேலோங்கியது.

'நேரிலேயே போய் உணர்ந்து வர வேண்டும்' என்று அமெரிக்காவை விட்டு புத்தமதம் பற்றிய முதுநிலை ஆய்வைக் குறிவைத்து இலங்கையில் போய் இறங்கினார். அதற்கு முன்பே ஜப்பான், தைவான், தாய்லாந்து என்று போய் அங்கேயும் சிலநாட்கள். இருந்தும் இலங்கைதான் சரி என்று தோன்றியது.

"யாழ்ப்பாணத்தில் நான் ஒரு மகானைச் சந்தித்தேன். அவர் பெயர் கௌரிபாலா.



• பாத யாத்திரையில்...





அந்த ஞானியின் சந்திப்புதான் என் வாழ்க்கையின் திருப்பு முனை. நான் யார் என்று என்னைக் கேள்வி கேட்டுக் கொள்ள ஆரம்பித்தது அப்போதுதான். தமிழ் மொழிமேல் எனக்கு ஏற்கெனவே ஓரளவு ஆர்வம் இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் வரை வருடம் தோறும் முருக பக்தர்கள் மேற்கொள்ளும் பாத யாத்திரை என்னுள் ஒரு புது அனுபவத்தைத் தந்தது. இந்த பக்தி பற்றி அறிந்து கொள்ளவும், முருகக் கடவுள் பற்றிப் புரிந்து கொள்ளவும் வேண்டுமானால் நான் இவர்களுள் ஒருவனாக வேண்டும் என்று மனப்பூர்வமாக நினைத்தேன். இந்து மதக் கோட்பாடுகள் பற்றி அறிய அறிய என் ஆய்வுக்கான களம் இதுவே... இதுவே... என்று முடிவு செய்துவிட்டேன்."

அதன் பின்னர் யாழ்ப்பாணம்–கதிர்காமம் முருக பக்தர்கள் பாத யாத்திரை, பாட்ரிக் ஹாரிகனுக்கு கிட்டத்தட்ட ஒரு கடமையாகவே மாறிவிட்டது. இது நடந்தது 1972ல். நாற்பது நாட்கள் காட்டுவழியில் பயணம். வருடாவருடம் ஜூலையில் கதிர்காமம் கோயிலில் நடைபெறும் உற்சவத்துக்குப் போய்ச் சேருவதற்கு ஏற்றபடி நாற்பது நாட்களுக்கு முன்பே யாழ்ப்பாணம் செல்வசன்னிதி முருகன் கோயிலிருந்து பாத யாத்திரை தொடங்கும். (இந்த வருடமும் நடக்கிறது. இக் கட்டுரை வெளியாகும்போது பாட்ரிக் அங்கே இருப்பார்!) ''தமிழர்கள், சிங்களவர், பௌத்தர்கள், காடுவாழ்வேடர்கள் என்று இப் பாத யாத்திரையில் இன ஒருமைப்பாட்டையும் நான் கண்டு மகிழ்கிறேன்!" என்கிறார் பாட்ரிக். கடந்த பல ஆண்டுகளாக கதிர்காம அடியார்கள் தர்மநிலையம் என்ற அமைப்பில் பாட்ரிக்கும் ஒரு தொண்டர்.

முருகனைப் பற்றி அறிந்து கொள்ள தமிழ் நாடுதானே தலைமையகம் என்று தோன்றியதோ என்னவோ, கடந்த இரண்டு வருடங்களாகச் சென்னையில் இருக்கிறார் பாட்ரிக்.

தமது முதுநிலை ஆய்வுக்கு இவர் முடிவாகத் தேர்ந்தெடுத்துள்ள தலைப்பு: கல்ட் ஆஃப் ஸ்கந்த முருகன் (The cult of Skandha-Murugan). முருகபக்தர்கள், தன்னார்வ அமைப்புகள் சம்பந்தப்பட்டோர் போன்றோரின் கூட்டுறவில் மாத்திரமே இவர் திருப்தியடைவதாக இல்லை. புகைப்படங்கள், வீடியோ என்று மாறினார்.

கதிர்காமம் பாதயாத்திரை பற்றியும், கோயில் திருவிழா பற்றியும் 80 மணி நேரத்துக்கும் மேலாக இவர் வீடியோவில் படம் பிடித்திருக்கிறார். இதை 'எடிட்' செய்து பல அரைமணி நேர படங்களாக வெளியிட எண்ணம் இருக்கிறது. அதே போல தமிழகத்திலுள்ள அறுபடை வீடுகளும் இவரது வீடியோவுக்குள் அடங்கியிருக்கின்றன. திருச்செந்தூர் கந்த சஷ்டியை 27 நிமிட செய்திப்படமாகத் தயாரித்திருக்கிறார். வள்ளிமலை பற்றி ஒரு டாகுமெண்டரியும் விருப்பத்தில் இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்த மாதிரியான ஒரு முயற்சியில் பாட்ரிக் இப்போது இறங்கியிருக்கிறார். 1998 டிசம்பர் 28,29,30 தேதிகளில் ஸ்கந்த முருகன் பற்றிய சர்வதேச கருத்தரங்கம் ஒன்றை இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஏஸியன் ஸ்டடீஸ் அமைப்பின் சார்பாக சென்னையில் நடத்த முனைந்திருக்கிறார்.

ஒன்றரை வருடத்துக்கு முன்பே இந்த ஏற்பாடுகளில் இறங்கிவிட்டார். உலகெங்கிலுமிருக்கும் முருக பக்தர்கள், அறிஞர்கள், சமயப் பெரியோர்கள் முருகனைப் பல்வேறு கோணங்களில் அலசி ஆராயும் கட்டுரைகளை அந்தக் கருத்தரங்கில் சமர்ப்பிக்க இருக்கிறார்கள்.

முருகக் கடவுளை மையமாக வைத்து சர்வதேச அளவில் ஒரு கருத்தரங்கம் நடக்க இருப்பது இதுவே முதல் முறை.

பாட்ரிக் அறிந்துள்ள மொழிகள் அதிகமில்லை. ஆங்கிலம் தவிர, சமஸ்கிருதம், ஹிந்தி, உருது, சிங்களம், தமிழ், ஜெர்மன், நேபாளி இவ்வளவுதான்!

— ராணி மைந்தன்

“சுவாமிகளுக்கு ரொம்பப்

கர்நாடகத்திலுள்ள குக்கே சுப்ரமணிய சுவாமி மடத்தின் தலைவர், சந்நியாசத்தைத் துறந்து விட்டுத் திருமணம் செய்து கொண்ட செய்தி பலரையும் பரபரப்படைய வைத்தது. எளிமையாகத் திருமணம் செய்து கொண்ட சுவாமிகளும் ரமாவும் இப்போது இல்லறவாசிகளாகப் பெங்களூரில் வசிக்கிறார்கள். அவர்களைச் சந்தித்த போது...


உடுப்பியைச் சுற்றியுள்ள அஸ்தமடங்கள் மொத்தம் எட்டு. அதில் குக்கே சுப்பிரமணியசுவாமி மடமும் ஒன்று. இந்த மடத்தின் தலைவராக இருந்தவர்தான் வித்யா பூஷண தீர்த்த சுவாமிஜி. சுவாமிஜிக்கு நல்ல குரல் வளம். சங்கீதத்தில் நல்ல ஞானம். இவரது பாடல்களும் பஜனைகளும் கன்னட மக்களிடையே நல்ல பிரபலம். இவரை எல்லாரும் அழைப்பதே 'ஹாடுவ சுவாமிகளு' என்றுதான். 'பாடும் சுவாமிகள்' என்று அர்த்தம். இந்தப் 'பாடும்' விஷயம்தான் இவர் துறவறத்தைத் துறப்பதற்கே காரணமாயிருந்திருக்கிறது.

தற்சமயம் பனசங்கரியிலுள்ள சுவாமிகளின் சகோதரர் வீட்டில்தான் சுவாமிகளும் ரமாவும் தங்கியுள்ளனர். விரைவிலேயே ஜெயநகர் பகுதியில் இரண்டு பெட்ரூம் ஃபிளாட் ஒன்று தயாரானவுடன் அங்கே குடியேறி 'மத்தியதர வகுப்பு வாழ்க்கை' ஒன்றைத் துவங்கப் போகிறார்கள்.

சுவாமிகளாயிருந்த வித்யாபூஷண், பொதுவாகவே யாரிடமும் பேச மறுத்து விடுகிறார். சின்னப் புன்னகையுடன் சரி. ரமாதான் பேசுகிறார். இவர்கள் காதல் மலர்ந்ததும் அது கல்யாணம் வரைக்கும் வந்ததும் எப்படி?

''அந்த நாளை இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை. 1996 - ம் வருடம்.. பிப்ரவரி மாதம் பதின்மூன்றாம் தேதி. அன்றைக்குத்தான் சுவாமிகள் முதன் முதலாய்த் தம்முடைய விருப்பத்தை என்னிடம் தெரிவித்தார். அந்தச் செய்தி எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அன்று பூராவுமே சுவாமிகள் வழக்கத்தை விடவும் சந்தோஷ மூடில் இருந்தார். அதுவே ஒரு ஆச்சரியம்தான். நான் உடனடியாக பதில் எதுவும் சொல்லவில்லை. மறுபடி பிற்பகல் மூன்றுமுப்பதுக்குத் தம்முடைய 'அற்புதக் குரலில்' திரும்பவும் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். நான் பதில் சொல்லவில்லை. எதுவும் சொல்லத் தோன்றாமல் அவரையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தேன். ஆனால் என்னுடைய உள்மனத்தில் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்ததை என்னால் அப்போதே உணர்ந்து கொள்ள முடிந்தது. இது வெகு காலத்திற்கு முன்பே விதிக்கப்பட்டிருந்ததுபோலும், அதுதான் கல்யாணத்தில் வந்து முடிந்திருக்கிறது!''

ரமாவின் தந்தை, அண்ணன் இருவரும் டாக்டர்கள். ரமாவின் தங்கையும் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருப்பவர். ரமாதான், குடும்பத்திலுள்ளவர்கள் டாக்டருக்குப் படிக்க வற்புறுத்தியபோது மறுத்துவிட்டு சட்டம் படிக்கச் சேர்ந்தாராம். சட்டம் படிக்கப் புகுந்



என்னைத்தான் பிடிக்கும்!”

தவர் சந்நியாசியின் மனத்திற்குள் புகுந்தது எப்படி?

“சட்டம் படித்துக் கொண்டிருந்தபோது கிளாசிகல் நடனமும் பயில முடிவெடுத்தேன். கொஞ்சம் நாட்டியம் பயின்றேன். பின்னர் ஏனோ சங்கீதம் பயில வேண்டும் என்று தோன்றவே, இரண்டு வருடங்களுக்கு முன்பு சுவாமிகளிடம் சங்கீதம் பயில்வதற்குச் சேர்ந்தேன். அப்போது 'இவர் நம்முடைய குரு' என்ற எண்ணம் மட்டும்தான் இருந்தது. ஆனால் அந்த இரண்டு வருடங்களிலும் எங்கள் இருவரின் வாழ்க்கை முறையிலும் சின்னச்சின்ன மாறுதல்கள் நடந்து கொண்டே வந்தன.

“சுவாமி ரொம்ப வெளிப்படையானவர். அவர் தமது விருப்பத்தை என்னிடம் சொல்லிவிட்டார்... காவி உடை அணிந்த ஒருவர் தமது விருப்பத்தை தினசரியா தெரிவித்துக் கொண்டிருக்க முடியும்? அவருக்கு 'எஸ்' என்ற ஒரு பதில் சொல்ல நான் சுமார் எட்டு மாதங்கள் எடுத்துக் கொண்டேன்.”

ரமாவின் பெற்றோர் மகளின் இந்த முடிவை முதலில் ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களுக்கு இந்தச் செய்தியே அதிர்ச்சி. அதில் இருவருக்குமிடையில் இருந்த வயது வித்தியாசம் (சுவாமிக்கு 46 வயது; ரமாவுக்கு 23.) வேறு சங்கடத்தை ஏற்படுத்த— அப்படியே திருமணம் செய்து கொண்டாலும் தொடர்ந்து வாழ்க்கை நடத்த என்ன செய்யப் போகிறார்களென்ற கவலை வேறு. ஆனால் தம்முடைய முடிவில் ரமா மிகவும் உறுதியாக இருக்கவே, அவர்களுக்கு வேறுவழி இருக்கவில்லை.

இதற்கிடையில் வித்யாபூஷண் தலைவராக இருந்த மடத்திலும் மற்ற மடங்களிலும் அரசல் புரசலாக முணு முணுப்புக் கிளம்பவே, தம்முடைய சிஷ்யரை மடத்தின் தலைவராக நியமித்துவிட்டுத் தலைமைப் பீடத்திலிருந்து இறங்கிக் கொண்டார் சுவாமிகள்.

யாரைப் போல் பிறக்க ஆசை?



டாக்டர் **சிவசிதம்பரம்:** அன்பு, பண்பு, அடக்கம், இவை அனைத்தையும் விட ஒழுக்கம் என்று நல்ல குணநலன்கள் அனைத்தையும் பெற்ற நல்ல மனிதராகவே மறுபிறவியில் பிறக்க ஆசை. இந்த குணநலன்கள் கொண்டபலர் இவ்வுலகில் இருக்கக் கூடும். ஆனாலும் நான் நன்கு அறிந்த அத்தகைய ஒருவர் என் தந்தை இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள்தான்! அவரைப் போல் பிறக்கவே ஆசை!

— மௌனி



• சீர்காழி

எதிர்காலத்தைப் பற்றி இருவருமே இன்னமும் எந்த முடிவுக்கும் வரவில்லை. கட்டியிருந்த காவித் துணியுடன் மடத்தை விட்டு வித்யாபூஷண் வெளியேறியதைப் போலவே, உடுத்திய சேலையுடன் கையில் எதுவுமே எடுத்துக் கொள்ளாமல் வீட்டைவிட்டு வெளியேறினாராம் ரமா.

"பாடுவதைத் தொழிலாக ஏற்பீர்களா?" என்று ரமாவிடம் கேட்டால் -

"மேடையில் பாடுமளவுக்கு நான் இன்னமும் தேர்ச்சி பெறவில்லை" என்கிறார்.

"நடனம்?"

"அதுவும் இல்லை; வக்கீல் தொழிலையும் பார்க்கப் போவதில்லை" என்று சொல்லும் அவர், வாழ்க்கை என்பது மலர்ப்படுக்கை அல்ல என்பதும் எனக்கும் தெரியும்" என்கிறார்.

"இதுவரை என்பதுக்கு மேற்பட்ட உங்கள் காசெட்டுகள் வெளியாகியிருப்பதால் அதிலிருந்து ராயல்டி தொகை கணிசமாக வருமே?" என்று கேட்டதற்கு "இல்லை; அந்த ராயல்டியெல்லாம் மடத்துக்கே சேர வேண்டும் என்று சொல்லியிருந்தேன். அதில் எந்த மாற்றமும் இல்லை" என்று சொல்லும் புதிய இல்லறவாசி, திரைப் படங்களுக்குப் பின்னணி பாட வாய்ப்புக் கிடைத்தாலும் ஒப்புக் கொள்ள மாட்டாராம். "வெறும் பக்திப் பாடல்களும் பஜன்களும் மட்டும்தான் பாடுவேன்" என்கிறார்.

தட்சண கன்னடத்தில் மிகவும் பின்தங்கிய குக்கிராமம் ஒன்றில் பிறந்து, முப்பது வருடங்களுக்கு மேலாக ஆசார அனுஷ்டானங்களுடன் மடத்தில் துறவியாய் இருந்தவருக்குத் தற்போதைய பெங்களூரின் நகர வாழ்க்கை எப்படி இருக்கிறது?

"அவர் இன்னமும் அதே போன்ற நடைமுறைகளைத்தான் கடைப்பிடிக்கிறார். தினமும் அதிகாலையில் எழுந்து விடுகிறார். ஜெபமும் சந்தியாவந்தனமும் செய்கிறார். உடைகளும் அதேதான். கூடுதலாக ஒரேயொரு பட்டு வேட்டி மட்டும்தான் அணிகிறார். மந்திரம் ஓதிக் கொண்டே இருப்பவர் திடீரென்று பஜன்பாட ஆரம்பித்து விட... சமயங்களில் நான் பாட்டுக்கு டீவி. பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன்..." என்று தினசரி வாழ்க்கையை விவரிக்கிறார் ரமா.

இவர்களின் புதிய வாழ்க்கையைப் பாராட்டியும் ஆதரித்தும் இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்துள்ளனவாம். சமீப நாட்களாய் கச்சேரி ஆரம்பிப்பதற்கு முன்பு "பாடல்தான் எனது ஜீவன்; இனிமேல் ஜீவனமும் இதுதான்!" என்று லெக்சர் தந்து விட்டுப் பாட ஆரம்பிக்கிறாராம் முன்னாள் சுவாமிகள்.

இரண்டாயிரம் கடிதங்கள் பாராட்டி வந்துள்ளன என்று ஒருபுறம் சொல்லப்பட்ட போதிலும் மடத்தின் துறவியொருவர் இப்படிப் பட்ட காரியத்தைச் செய்து விட்டாரே என்று குமுறும் பக்தர்களும் இருக்கிறார்கள்.


"இந்த ஆள் ஆறு வருடங்களுக்கு முன்பே வேறு யாரையோ மனத்தில் வைத்துக் கொண்டு (அப்போது ரமா இல்லை) சந்நியாசத்தைத் துறக்க இருந்தார்; பெஜாவர் மடத்து சுவாமிகளின் தலையீட்டினால்தான் அப்போது பேசாமலிருந்து விட்டார். இப்போது வெளியே வந்து விட்டார்" என்கிறார்கள்.

பேட்டியொன்றில் இதை ஒப்புக் கொண்டிருக்கிறார் வித்யாபூஷண். "சில வருடங்களுக்கு முன்பு சந்நியாசத்தை விட வேண்டியிருந்தது; சில காரணங்களால் அப்போது நடக்கவில்லை. இந்தத் திருமணத்தைச் செய்து கொள்ளச் சொல்லி கடவுளின் ஆணை வந்தது; செய்து கொண்டேன்" என்றிருக்கிறார். இந்த தடவை கூட விஷயம் தெரிந்ததும் ஆர்.எஸ்.எஸ்ஸின் பொதுச் செயலாளர் எச்.வி. சேஷாத்ரி மடத்துக்கு விரைந்து சென்று முடிவை மாற்றிக் கொள்ளச் சொல்லி வேண்டுகோள் விடுத்தாராம். ஆனால் பலனில்லை.

முதலில் எதிர்ப்புத் தெரிவித்த ரமாவின் தந்தை இப்போது "ஒரு தபஸ்வி எங்கள் குடும்பத்திற்குள் வர நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!" என்கிறார்.

"கணவனின் தேவைகள் என்னென்ன, அவருக்கு என்னென்ன பிடிக்கும்?" என்று கேட்டதற்கு ரமாவின் பதில் : "சுவாமிகளுக்கு மிகவும் பிடித்தது என்னென்னவென்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் என்னைத்தான் ரொம்பப் பிடிக்கும் அவருக்கு!"

பெங்களூரிலிருந்து : **அமுதவன்**





1997 மே 25
ஈசுவர வைகாசி 11
மலர் : 55
இதழ் : 43

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



சோனி(யா) காங்கிரஸ்!

“ஓர் அயல்நாட்டுப் பெண்ணைத் தலைவியாக ஏற்பது எப்படி சாத்தியம்..?” எனப் பத்திரிகையாளர்கள் கேட்கப் போக,


“ஏன் முடியாது? அன்னை தெரசாவை நாம் ஏற்கவில்லையா? அன்னிபெசன்ட் காங்கிரஸின் தலைவியாக இருக்கவில்லையா?” என்று பதில் சொல்லியிருக்கிறார் மூப்பனார்.

“அட! மூப்பனார் கூட கிண்டலாக, - அங்கதமாகப் பேசுகிறாரே என்று நாம் மகிழ்ந்துவிட முடியாது! ஏனெனில், சோனியா வருகையால், “காங்கிரஸின் தலைமைப் பொறுப்பு குறித்த பிரச்னை தீர்ந்து விட்டது. ஒரு நல்ல தலைவி கிடைத்து விட்டார்...!” என்றெல்லாம் அறிக்கை விட்டு, அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அளித்திருக்கிறார் த.மா.கா தலைவர்!

நிதானத்துக்குப் பெயர்போன மூப்பனார், சோனியாவை அன்னை தெரசாவுடன் ஒப்பிட எப்படித் துணிந்தார்?

அன்னிபெசன்ட், அடிமை இந்தியாவின் சுதந்தரத்துக்காகப் போராடிய அயல்நாட்டவர். ‘ஹோம் ரூல் மூவ்மெண்ட்’ என்பதைத் துவக்கி, சுதந்தரப் போர் பெரிய அளவில் வளர்ச்சி பெற வித்திட்டவர்.

சோனியாவோ, சுதந்தர இந்தியாவில் இந்தியக் குடியுரிமை பெற்ற அயல்நாட்டவர். ராஜீவ் காந்தியின் மனைவி என்பதற்கு மேலாக, காங்கிரஸுக்கும் அவருக்கும் இதுவரை சம்பந்தம்



இருந்தது கிடையாது.

இந்நிலையில் அவரை அக்கட்சியின் தலைமைப் பொறுப்புக்குரியவராகச் சித்திரிப்பதோ வரவேற்பதோ அவசரச் செயல் மட்டுமல்ல; அபத்தமும் கூட.


தனிநபர் ஆளுமையை மையமாக்கி, காங்கிரஸை இதுநாள்வரை சீரழித்தது போதாதென்று, அதே பாதையில் தொடர்வதற்கான வழிதான் 'சோனியா தலைமை' என்கிற மந்திரம். இந்திய மக்கள் மனத்தளவில் அந்த முடிவை நிராகரித்து விடுவார்கள். ஓர் இத்தாலியப் பெண்ணை காங்கிரஸ் தலைமைக்கு அவர்களால் ஏற்கவே முடியாது. மக்கள் ஆதரவின்றி கட்சியே கூட அடியோடு இல்லாமல் போய்விடும்.

ராஜீவ் காந்தி பவுண்டேஷன் என்ற அமைப்பை நிறுவி, சில நற்பணிகள் ஆற்றி வருகிறார் சோனியா. கட்சியரசியலில் எல்லாம் புகாமல் அந்தப் பணிகளை மட்டும் கவனமாகத் தொடர்வதே அவருக்கும் கௌரவம்.

போஃபர்ஸ் ஆவணங்களை ஆராய்ந்து, சிறப்புப் புலனாய்வுக் குழு தயாரித்திருக்கும் அறிக்கையை, சி.பி.ஐ. அரசிடம் சமர்ப்பித்திருக்கிறது. அதன்படி, ராஜீவ் காந்தி உள்பட பல முக்கிய பிரமுகர்கள், அதிகாரிகள் பேரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட வாய்ப்பிருக்கிறது. இத்தாலியரான குவாட்ரோச்சிக்கு இந்த விவகாரத்தில் உள்ள தொடர்பு உறுதிப்படுவதற்கான வாய்ப்பும் அதிகரித்திருக்கிறது.

இவ்வளவு இக்கட்டான ஒரு சந்தர்ப்பத்திலும் காங்கிரஸ் சோனியாவிடம் 'சரணடைந்து' தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் வீண் முயற்சிகளில் இறங்கியிருப்பது கேவலம் என்றால், மூப்பனார் கூட இந்த நேரத்தில் இங்கிதம் இல்லாமல் பேசியிருப்பது ஆச்சர்யம்!

சற்றே ஆறுதல் தரும்விதமாக, 'த.மா.கா தொடர்ந்து தனிக் கட்சியாகவே இயங்கும்; காங்கிரஸுடன் இணையும் திட்டமெல்லாம் இல்லை...' என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார்



மூப்பனார்.

தலைவர் இப்படிப் பேசினாலும், அக் கட்சியின் தொண்டர்கள் பலர் 'மீண்டும் காங்கிரஸுடன் போய்ச் சேர்ந்து விட வேண்டும்' என விரும்பக்கூடும். சோனியா தொடர்பான மூப்பனாரின் பேச்சு, அத்தகையவர்களை மேலும் தூண்டக்கூடும்.

மாநிலக் கட்சியான த.மா.கா இப்போதைக்கு தி.மு.கவுடனான நல்லுறவை முறித்துக் கொள்ளாமல், பலப்படுத்திக் கொண்டு தொடர்வதே நல்லது. தி.மு.க - த.மா.கா உறவு முறிந்தால் அது அ.தி.மு.க - ம.தி.மு.க கூட்டணிக்குத்தான் கொண்டாட்டமாக முடியும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இதனால் த.மா.கா. 'ஆமாம் சாமி' அரசியல் நடத்த வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

சட்டசபையில் தி.மு.க.வைத் தட்டிக் கேட்கும் தோழமைக் கட்சியாகத் தொடர்ந்து செயல்படலாம். இரு கட்சிகளிலிருந்தும் அறிஞர்களைத் தேர்ந்தெடுத்து, ஒருங்கிணைப்புக் குழு அமைத்து, சிந்தனைப் பகிர்தலுக்கு வழிசெய்யலாம். கொள்கை முடிவுகளை இணைந்து எடுக்கலாம்.

இதன் மூலம் இரு கட்சிகளும் பலம்பெறும். பொதுத் தேர்தல் வரும்போது வெற்றி வாய்ப்புகள் முன்னிலும் அதிகரிக்கும்.

ஆத்தூரில் ஜூன் 4, 5 தேதிகளில் த.மா.காவின் சிறப்பு முகாம் நடத்தவிருக்கிறார் மூப்பனார். எதிர்காலத் திட்டங்களுக்கான ஆலோசனை முகாமாக அது அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சிறப்பான செயல்திட்டத்தை அந்த முகாமில் உருவாக்கலாம்.

நடந்து முடிந்த சில கசப்பான சம்பவங்களை மீண்டும் மீண்டும் மனத்தில் கொண்டு வந்து வன்மம் வளர்த்துக் கொள்வதற்குப் பதிலாக, அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, எதிர்காலத்துக்குத் திட்டமிடலாம். சோனியாவின் காங்கிரஸ் பிரவேசம், விரிசல் கண்ட தி.மு.க - த.மா.கா உறவுகள் மீண்டும் ஒன்றுபட மறைமுகமாக உதவட்டும்.

சில வருடங்கள் முன்பு, மணிரத்னம் எடுத்த 'மௌனராகம்' படப்பிடிப்பு கீழ்ப்பாக்கத்திலுள்ள ஓர் அடுக்கு மாடிக் குடியிருப்புப் பகுதியில் நடந்து கொண்டிருந்தது.

'வாடா டேய்', 'உக்காருடா சோம்பேறி' - இந்த 'அமரத்துவம்' வாய்ந்த அந்தப் படத்தின் வசனங்களை யாரும் மறந்திருக்க முடியாது.

அந்த சர்தார்ஜி சம்பந்தப்பட்ட காட்சிகளைத்தான் அப்போது எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

நடித்துக் கொண்டிருந்தவர்களுள் நானும் ஒருவன். என் உடல் செட்டில் இருந்தது; மூளை வசனங்களில் இருந்தது; ஆனால் மனம்...?

வெறும் அடுக்குமாடி வீடுகளாக மாறி விட்ட அந்த இடம் ஒரு காலத்தில் கலைக் கோவிலாக இருந்ததை அப்போது என்னைப் போல் அந்த செட்டில் இருந்த வேறுயாராவது எண்ணிப் பார்த்திருப்பார்களா, தெரியவில்லை.

அந்த இடம்தான் அந்நாளில் நியூட்டோன் ஸ்டுடியோ.

வெளிப்புறப் படப்பிடிப்பெல்லாம் அறிமுகமாகாத காலத்தில் ஸ்டுடியோக்கள் எப்போதும் ஜேஜேவென்று இருக்கும். குறிப்பாக நியூட்டோன் ஸ்டுடியோ. அங்கே படப்பிடிப்பு இல்லாத நாட்களே கிடையாது என்று சொல்லலாம்.

எம்.கே. தியாகராஜபாகவதர், ஜித்தன் பேனர்ஜி, ராமநாதன் செட்டியார், டின்ஷா தஹிரானி- இந்த நால்வர்தான் நியூட்டோன் ஸ்டுடியோவின் பாகஸ்தர்கள்.

பாகவதரைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அந்நாளைய சூப்பர் ஸ்டார். ஜித்தன் பானர்ஜி, வங்காளத்தைச் சேர்ந்தவர். மிகச் சிறந்த ஒளிப்பதிவாளர். கருப்பு வெள்ளைப் படங்களில் பல ஜாலங்கள் காட்டிய வித்தகர். லைலா மஜ்னு, ஞான சௌந்தரி போன்ற படங்களில் அவரது ஒளிப்பதிவு, தேசிய அளவில் பேசப்பட்ட ஒன்று.

டின்ஷா தஹிரானி - இரானியர் - சவுண்ட் இஞ்சினியர். அந்நாளின் மிகப் பெரிய பாடகர்களான பாகவதர், பி.யூ. சின்னப்பா போன்றவர்களின் பாடல்களெல்லாம் இவரிடம்தான் ரெக்கார்ட் ஆகும். மிகத் தீவிரமான உழைப்பாளி என்ற போதும் தஹிரானி ஒரு ஜாலியான மனிதர். மிகவும் தமாஷ் பேர்வழி. ஸ்டுடியோவுக்குள்ளேயே கோர்ட் போட்டு, டென்னிஸ் ஆடுவார். கொச்சையான தமிழில் எல்லோருடனும் வெகு தமாஷாகப் பேசிக் கொண்டிருப்பார்.

சொந்தமாக சிங்காரி, மாப்பிள்ளை, உலகம் பலவிதம் போன்ற படங்களும் எடுத்தார். அவர் படங்களில் நானும் நடித்தேன்.

தஹிரானியின் படங்களில் நடிப்பதே ஒரு நூதன அனுபவம். படம் எடுப்பது என்பது எல்லோருக்கும் பயமான, கவலையான, சுமையான ஒரு பணி. இவர் முற்றிலும் வேறு



படம்:

"அடி என்றால் சாதாரண அடி அல்ல! குலை நடுங்கி, முழி பிதுங்கி, முகம் அப்பம் மாதிரி வீங்கிப் போகச் செய்த மகா அடி அது!
அடித்தவரும் லேசுப்பட்ட ஆளல்ல. கன கம்பீரமான தோற்றமும் அசாதாரணமான உடல் வலுவும் கொண்டவர்! பாலையா!"

வி.கே. ராமசாமி

ரகம். தன் பொழுதுபோக்கிற்காகத்தான் படம் எடுப்பார்! ஆனால் இதில் ஆச்சர்யமான விஷயம் என்னவென்றால் - அவர் எடுத்த அத்தனை படங்களும் சூப்பர்ஹிட்!

திரையுலகில், சம்பள விஷயத்தில் கலைஞர்களை முழுசாக திருப்திப் படுத்திய தயாரிப்பாளர்களை விரல்விட்டு எண்ணலாம். அந்த வகையில் தஹாரானி, நடிகர்கள் விரும்பும் தயாரிப்பாளர்!

படம் ஆரம்பிப்பதற்கு முன்பு கொஞ்சம் பணத்தை அட்வான்ஸாகத் தருவார். அவ்வளவுதான். 'மீதிப் பணம் இவ்வளவு; இதை படம் முடிந்த மறுநாள்தான் தருவேன்' என்று கறாராகச் சொல்லி விடுவார்.

சொன்னபடியே படம் முடிந்த மறுதினம் பணம் வந்து சேரும்!

அதுவும் எப்படி?

ஒவ்வொரு நடிகர் வீட்டுக்கும் தஹாரானியே நேரில் வந்து பணத்தைத் தருவார்! பணம் மட்டுமல்ல, 'பாட்டிலும்'.

"சாப்பிடுடா! சந்தோஷமா இருடா!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பிப் போவார்! அப்படி ஒரு கேரக்டர்!

• பி.யூ. சின்னப்பா



அறைந்தார் பாலையா! அணைத்தார் சின்னப்பா!

தஹாரானியைப் பற்றிச் சொல்லும் போது ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

ஒரு காலகட்டத்தில், நான் தொடர்ந்து படப்பிடிப்புக்காக நியூட்டோன் ஸ்டுடியோவுக்கு தினமும் செல்பவனாக இருந்தேன். (ஆரம்ப காலம்தான்) ஆகவே தஹாரானியுடன் நல்ல பழக்கம் இருந்தது.

ஒருநாள் அவரைப் பார்ப்பதற்காகவே நான் ஸ்டுடியோ சென்றபோது, அலுவலக அறைக்கு முன்பிருந்த வராந்தாவில் தஹாரானியுடன் நின்றபடி பேசிக் கொண்டிருந்தார் ஒருவர்.

அவரை எனக்குத் தெரியும். பத்மநாபையர் என்று பெயர். அந்நாளில் பெரிய தயாரிப்பாளர்.

நான் அருகே போனபோது, திடீரென்று அவர் என்ன நினைத்தாரோ, "போபோ! இப்ப ஒண்ணும் என் படத்துல வேஷம் இல்லை. இடத்தைக் காலி பண்ணு. அப்புறம் பார்க்கலாம்!" என்றார் வெடுக்கென்று.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இவர் என்ன சொல்கிறார்? நான் எங்கே இவரிடம் வாய்ப்புக் கேட்டேன்? எதற்காக இந்த விரட்டல்?

ஒருகணம் அவமானமாகப் போய்விட்டது. பெரிய மனிதர்தான்! ஒருவேளை நான் அவரிடம் வாய்ப்புக் கேட்டுத்தான் வந்ததாக அவர் நினைத்திருக்கலாம்தான்! இருப்பினும் இப்படியா முன்பின் தெரியாதவரிடம், அநாகரிகமாக நடந்து கொள்வது?

என்னிடம் உள்ள ஒரு பயங்கரமான குணம் - முன்கோபம்! கோபம் வந்துவிட்டால், என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!

ஒருகணம்தான்! அவர் பேசி முடித்தவுடன் நான் என்ன செய்திருப்பேனோ... சடாரென்று என் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு போனார் தஹாரானி! என் சுபாவம் அவருக்கு நன்றாகவே தெரியும்!

"என்னா ராமசாமி! கோபம் வந்துச்சா? அவர் சுபாவமே அப்படித்தான்! விட்ரு. நீ என்னைத்தான் பார்க்க வந்தேன்னு அவருக்கு தெரிஞ்சிருக்காது இல்யா?"

யோசித்துப் பார்க்கிறேன். நான் ஒன்றும் அப்போது பெரிய நடிகனல்ல.

• பாலையா



வளர்ந்து வரும் நடிகன்தான்! ஆனால் ஹிரானி எத்தனை பெரிய தயாரிப்பாளர், சவுண்ட் இஞ்சினியர், ஸ்டுடியோ முதலாளி...

அத்தனை அவசரமாகப் பேச்சை நிறுத்திவிட்டு, என்னை சமாதானப்படுத்து வதுதான் முதல் காரியம் என்பதுபோல் விரைந்து செயல்பட்ட அந்தப் பண்பு!

அவரது வெளேர் நிறத்தைக் கொண்டு நாங்களெல்லாம் அவரை 'துரை' என்றுதான் அழைப்போம்.

உடல் மட்டுமல்ல; உள்ளம், சொல், செயல், சிந்தனை எல்லாமே அவரிடம் வெள்ளை தான்!

எத்தனையோ நூற்றுக்கணக்கான படங்கள் நடித்து முடித்து விட்டேன். ஆனால் இன்னமும் மனத்தில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் பட நினைவுகள் என்று பார்த்தால், அவை பெரும்பாலும் நியூட்டோன் ஸ்டுடியோவில் எடுக்கப்பட்ட படங்களாகத் தான் இருக்கின்றன!

கிருஷ்ணபக்தி என்றொரு படம். கிருஷ்ணா பிக்சர்ஸ் தயாரிப்பில் நியூட்டோனில் உருவான அந்தப் படத்தில் கலைவாணர் கோஷ்டி தான் நகைச்சுவைப் பொறுப்பு ஏற்றிருந்தது.

கலைவாணரின் நகைச்சுவை காட்சிகள் அமைகிற விதமே வினோதமாக இருக்கும். அவர் எப்போது யோசிப்பார், என்ன செய்வார் என்று தெரியாது. சகஜமாகப் பேசிக் கொண்டே இருப்பார். திடீரென்று காட்சியைச் சொல்லி, வா, நடிக்கலாம் என்பார்.

அப்படி ஒரு காட்சி, அந்தப் படத்தில் அமைந்தது.

படத்தில் எனக்கு நட்டுவனார் வேடம். கலைவாணரின் பத்து வயது மகளுக்கு பரத நாட்டியம் கற்றுத் தர வருவேன்.

'கனவு கண்டேனே, கண்ணன்மேல்
காதல் கொண்டேனே!' - இது பாடல்.

இதை திரும்பத் திரும்பப் பாடி, அந்தப் பெண்ணுக்கு (குசலகுமாரி) நான் அபிநயம் பிடிக்கக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருப்பேன்.

திடீரென்று என் பின்புறமாக வந்தார் கலைவாணர். என் அருகே அமர்ந்தவர், ஓங்கி முதுகில் ஓர் அறை!

அலறிக் கொண்டு திரும்பிப் பார்த்து, "என்னங்க?" என்றேன் பரிதாபமாக.

"ஒண்ணுமில்லை. கொசு உட்கார்ந்து இருந்திச்சி. அதான் அடிச்சேன்!"

மறுபடி அபிநயம் தொடங்க, கொஞ்ச நேரத்தில் இன்னொரு அடி! இம்முறை இன்னும் பலமாக!

'அழாத குறையாக, "ஏங்க அடிக்கிறீங்க?"

"சேச்சே... அடிக்கலையே! ஈ உட்கார்ந்தது. அதான் விரட்டினேன்!"

மேலும் இரண்டு முறை அடி வாங்கிய பின் அழுதவாறே "ஏங்க அடிச்சிட்டே இருக்கீங்க?" என்றேன்.

"ம்? நீயெல்லாம் ஒரு நட்டுவனார், இல்லே? ஏய்யா, பத்து வயசுப் பொண்ணுக்கு, 'கனவு கண்டேனே, காதல் கொண்டேனே'ன்னாய்யா பாட்டு சொல்லித் தரது? உருப்படுமாய்யா அந்தப் பொண்ணு? ஓடுய்யா எந்திரிச்சி!"

இந்தக் காட்சியை இப்போது நினைத்தாலும் சிரிப்பு பிய்த்துக் கொண்டு வருகிறது. அப்பாவி முகத்துடன் அடி வாங்கி, அழுத படியே, நான் 'க...ன...வு கண்...டே....னே...' என்று அபிநயம் பிடிக்கச் சொல்லிக் கொடுத்ததை கூடியிருந்த அத்தனைபேரும் குதூகலித்து ரசித்தார்கள்.

அடி வாங்கி, அழுது சிரிக்க வைப்பதென்பது அன்றே தொடங்கி விட்டது!

இன்னொரு அடி வாங்கிய சம்பவமும் நினைவுக்கு வருகிறது! அடி என்றால் சாதாரண அடி அல்ல! குலை நடுங்கி, முழி பிதுங்கி, முகம் அப்பம் மாதிரி வீங்கிப் போகச் செய்த மகா அடி அது!

அடித்தவரும் லேசுப்பட்ட ஆளல்ல. கன கம்பீரமான தோற்றமும் அசாதாரணமான உடல் வலுவும் கொண்டவர்! பாலையா!

அது, வன சுந்தரி என்ற படத்தின் அரசவைக் காட்சி! நியூட்டோன் ஸ்டுடியோவில் பெரிய ராஜா தர்பார் செட்டெல்லாம் போட்டு பிரமாதமான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். பி.யூ. சின்னப்பா, பாலையா போன்ற மிகப் பெரிய நடிகர்கள் பங்கு பெறும் அந்தக் காட்சியில் எனக்கு, ஓலை கொண்டு

வந்து தரும் தூதுவன் வேடம்.

காட்சி என்னவென்றால், தூதுவனான நான் ஓர் ஓலை கொண்டு வந்து, அரசனை வணங்கித் தருவேன். அரசர் அதைப் பிரித்துப் படித்துவிட்டு, அமைச்சரிடம் தருவார். அமைச்சர் படித்ததும், கோபம் கொண்டு, தூதுவன் கன்னத்தில் அறைந்து, வீரமாக ஏதோ பேசுவார். அவ்வளவுதான்.

கதையில் முக்கியப் பாத்திரம் ஏதும் எனக்கு இல்லை. சாதாரண தூதுவன்! ஆகவே முழுக்கதை தெரியாது. அது என்ன ஓலை? என்ன எழுதியிருந்தது? யார் அனுப்பியது? ஏன் அமைச்சர் கோபம் கொள்கிறார்? எதுவும் தெரியாது.

காட்சி தொடங்க, நான் கம்பீரமாக நடந்து போய் அரசனிடம் ஓலையைக் கொடுக்க, அமைச்சர் அந்த (வெற்று!) ஓலையைப் படிக்கத் தொடங்கினார்... வந்தது வினை!

இயல்பாகவே பாலையா ஓர் அதி அற்புத நடிகர். ஒரு பாத்திரத்தை ஏற்றால், அந்தப் பாத்திரமாகவே மாறிப் போய் விடுவார்!

அப்படித்தான் அந்தக் காட்சியில் அவர் உணர்ச்சி மேலிட, உதடு துடிக்க, ஓலையைப் படித்தவர், ஓங்கி விட்டாரே ஓர் அறை...!

ஐயோ! இந்த ஜென்மத்தில் எனக்கு அது மறக்காது!

ஒருகணம் கிறுகிறுவென்று தலை சுற்றி, முகத்தில் ரத்தம் கட்டி, கன்னம் வீங்கி, மயங்கியபடி நான் கீழே விழப் போனேன்!

எங்கிருந்தோ பி.யூ. சின்னப்பா ஓடி வந்தார்.

ஒரே பாய்ச்சலில் நான் விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டவர், "என்னய்யா நடிப்பு நடிக்கறீங்க? ஒரு அளவு இல்லை? நடிக்கறதை விட்டு அடிக்க ஆரம்பிச்சிட்டீங்களே!" என்று பாலையாவைக் கோபித்துக் கொண்டவர், ஒரு துணியைத் தேடி எடுத்து, வாயில் வைத்து ஊதி, சூடாக்கி, என் கன்னத்தில் ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்தார்!

படப்பிடிப்புக் குழுவே ஒருகணம் ஸ்தம்பித்து விட்டது!

அன்றைய ஷூட்டிங் அவ்வளவுதான். 'பேக் அப்' சொல்லி விட்டார் ஹீரோ பி.யூ. சின்னப்பா!

என்னை அணைத்தபடி மேக் அப் ரூமுக்கு அழைத்துப் போனவர், ஆசுவாசப்படுத்தி, மேலும் ஒத்தடம் கொடுத்து, சமாதானம் செய்து என்னைத் 'தெளிய' வைத்தார்!

ஆனால் இதே சின்னப்பாவின் அடியிலிருந்து தப்பிக்க நான் தலை தெறிக்க ஓடி, ஒரு கார் சக்கரத்தில் மாட்டிக் கொள்ள நேர்ந்த சம்பவமும் அடுத்த ஓரிரு நாட்களிலேயே நடக்கப் போகிறது என்பது எனக்கு அப்போது தெரியாது!

(தொடரும்)




''வீட்டுல மனைவிக்கும் எங்க அம்மாவுக்கும் நடந்த சர்ச்சை, நான் தலையிட்டதும் உடனே முடிவுக்கு வந்துடிச்சு.''

''நிஜமாவா சொல்றீங்க?''


''ஆமாய்யா... வாக்குவாதத்தை நிறுத்திட்டு உடனே கைகலப்புல இறங்கிட்டாங்க!''

— சீர்காழி வி. ரேவதி



"சர்வர்! நான் சாப்பிட்ட ஹல்வா ரொம்ப சூப்பர்! அதைத் தயார் செய்தவரைக் கூப்பிடுங்க. பாராட்டணும்!"

"சாரி சார்! அவர் வேலையை விட்டுப் போயி ரெண்டு மாசம் ஆகப் போவுது...!"




''எப்படி சார் அடிபட்டுக்கிட்டீங்க?''

''மொசைக் தரையில் சிரசாசனம் செய்ய முயற்சி பண்ணினேன்!''

— பாஸு

"நாங்களும் அவஸ்தைப் பட்டிருக்கிறோம்!"



• சுரேஷ்பாபு

"வண்டி வராது!" என்று சவாரி ஏற்ற மறுப்பது, அநியாய கட்டணம் கேட்பது... ஆட்டோக்காரர்கள் என்றாலே இது தான் வாடிக்கை என்பது கஸ்டமர்களின் அனுபவம். "ஆட்டோ ஓட்டுபவரான உங்களுக்கே இந்த மாதிரி அனுபவம் ஏற்பட்டதுண்டா?" என்று சில ஆட்டோ ஓட்டுநர்களிடம் கேட்டபோது சொன்னார்கள்.

"ம்! ஏற்பட்டிருக்கிறதே! இரண்டு வருஷங்களுக்கு முன்னால எனக்குக் கல்யாணம். முகூர்த்தம் முடிந்து, கல்யாண மண்டபத்தைக் காலி செய்துவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டோம். இரண்டு, மூன்று ஆட்டோக்காரர்கள் வர மறுத்துவிட்டார்கள். அப்புறம் ஒருவர் வர ஒப்புக் கொண்டாலும், இருபது ரூபாய் கேட்டார். மினிமம் சார்ஜ் தூரத்துக்கு இருபது ரூபாயா என்று கேட்டபோது, 'சரி பதினெட்டு ரூபாய் குடு' என்றார். வேறுவழியில்லை. பதினெட்டு ரூபாய் கொடுக்க ஒப்புக் கொண்டு ஆட்டோவில் ஏறினோம்" என்றார் சுரேஷ்பாபு. வயது 26. கடந்த எட்டு வருடங்களாய் ஆட்டோ ஓட்டுபவர்.

இன்னொரு ஆட்டோ டிரைவர் ரவி சொன்ன இன்னொரு அனுபவம்:

"....செங்கல்பட்டு ஆஸ்பத்திரியில் சொந்தக்காரர் ஒருவரை வைத்தியத்துக்காகச் சேர்த்திருந்தார்கள். பஸ்ஸில் செங்கல்பட்டு போய் இறங்கினேன். பஸ் ஸ்டாண்டிலிருந்து ஆஸ்பத்திரி இரண்டு கிலோ மீட்டர் இருக்கும். ஓர் ஆட்டோக்காரர் இருபது ரூபாய் கேட்டார்.

"'மீட்டர்' என்று நான் ஆரம்பித்ததும், 'என்ன மெட்ராஸ்ல இருந்து வரீங்களா நீங்க? இங்க மீட்டர் போடற வழக்கமெல்லாம் இல்லை. ஃபிளாட் ரேட்தான்!' என்றார். 'நானும் ஆட்டோ ஓட்டுபவன்தான்!' என்று கூறிய போது 'நம்ம பிரச்னை உங்களுக்குத் தெரியாதுங்களா? கேட்டதைக் குடுங்க!' என்றார் அந்த டிரைவர்!"

தாங்களே கஸ்டமர்களாக இருந்தபோது தங்களுக்கேற்பட்ட அனுபவங்கள் கசப்பானவை என்று கூறினாலும் இங்கே வந்து மறுபடியும் டிரைவர்களாக மாறும்போது என்ன செய்கிறார்கள்? கஸ்டமர்களின் கஷ்டங்களை உணர்கிறார்களா?

"தமிழ்நாட்டுலயே மெட்ராஸ்லதான சார் மீட்டர் போட்டு ஆட்டோ ஓட்றோம்!" என்கிறார்கள்!

சந்திப்பு : மௌலி
படம்: ஸ்ரீஹரி



கவலைகள் பலவிதம்!

சோனியா காந்தியின் அரசியல் பிரவேசம், நோய் வாய்ப்பட்டிருக்கும் மராத்திய காங்கிரசுக்கு, புது டானிக்! லோக்சபா, ஜில்லா பரிஷத் தேர்தல்களில், வாங்கிய அடிக்கு, காந்தி - நேரு குடும்பத்து 'பிராபல்யம்' மருந்தாகி, மீண்டும் இம்மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி உயிர் பெறும் எனப் பரவலாக நம்பப்படுகிறது. ஆனாலும் இந்த மருந்து, பவாருக்குக் கசக்கிறது. இப்போதுதான் அவர் எதிரிகளெல்லாம் ஒவ்வொருவராக பலமிழந்து கொண்டிருக்கின்றனர். லோக்சபையில், காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியும் வசமாக மாட்டியிருக்கும்போது, இந்த திடீர் மாற்றத்தால் அர்ஜுன்சிங் மீண்டும் முன்னணிக்கு வந்தால், இவர் பின்னணிக்குத் தள்ளப்படுவாரே என்ற கவலை! கேசரியைத் தீவிரமாக எதிர்த்துக்கொண்டு, எதிரியான சரத்பவாரின் கட்சிக்கு அந்தர்பல்டி அடித்துள்ள அந்துலேவுக்கு இரண்டுங்கெட்டான் நிலை! பழைய விசுவாசியாக சோனியாவுக்கு ஜால்ரா அடித்தால் கேசரிக்கும் தலை ஆட்ட வேண்டும்; பவார் நாமத்தை ஜபித்தால் சோனியா கோபித்துக் கொள்வாரோ என்ற கவலை! இதற்கெல்லாம் காரணகர்த்தாவான சோனியாவுக்கோ போஃபோர்ஸ் வழக்கை எப்படி சமாளிப்பது என்ற கவலை! அவரவர் கவலை அவரவர்க்கு; இந்தியாவைப் பற்றி யார்தான் கவலைப்படுகிறார்கள்?

சேலை கட்டும் மாதரை நம்பி...

அண்டர் வர்ல்டின் முடிசூடா மன்னனும், அரசியல் 'தலை'வனுமான அருண் காவ்லி அமராவதி ஜெயிலிலிருந்து விடுதலையாகி மும்பை வரும்போது, பாதுகாப்பு வளையம் அமைத்தவர்கள் யார் தெரியுமா? 'டான்'களோ போலீசாரோ அல்ல! சேலை கட்டிய ஐம்பது பெண்கள். காவ்லி வசிக்கும் "தாக்திசாரிலிருந்து, அமராவதி வரை சென்று, தங்கள் தலைவனை ஆரத்தி சுற்றி வரவேற்று, ஒரு சொகுசு பஸ்ஸில் பாதுகாப்பாய் மும்பை அழைத்து வந்துள்ளார்கள். 'என்கௌண்டர்' என்ற பெயரில் போலீசாரோ, 'காங்வார்' விரோதிகளோ தன்னைத் தீர்த்துக் கட்டாமலிருப்பதற்கு காவ்லியே செய்து கொண்ட ஏற்பாடுதான் இது!

யாருக்கு விலங்கு?

காவ்லி கையிலிருந்து அகற்றப்பட்ட விலங்கு இப்போது போலீசார் கைகளுக்கு மாறியிருக்கிறது! தனி மனித சுதந்திரத்துக்கு முக்கியத்துவமளித்து, NSA கைதியான அருண் காவ்லியை ஹைகோர்ட் விடுதலை செய்ததை வக்கீல்கள் ஆதரித்தாலும், National Security Actஐ அருண்காவ்லி போன்ற 'டான்'கள் மீது பிரயோகிப்பதில் என்ன தவறிருக்கிறது என்று கேட்கிறது காவல்துறை! போலீஸ் கமிஷனர், கூடுதல் சீஃப் செகரட்டரி போன்றோர் மீது ரூ 25,000 அபராதம் விதிக்கப்பட்டிருப்பது வேறு போலீசாரை கொதிப்படைய வைத்திருக்கிறது."பொதுமக்கள் நலன் கருதியாவது காவ்லியை 'உள்ளே' வைக்க வேண்டாமா?" என்கிறார்கள் போலீசார். "நீதிக்குக் கண்தான் இல்லை; காதுமா கேட்காமல் போக வேண்டும்?'' என்று இலரின் முணு

முணுப்பு!

அரசியல் அர்த்தங்கள்

முன்னாள் மராத்திய முதல்வரும், மூத்த காங்கிரஸ் தலைவருமான சுதாகர் நாயக், அரசியலிலிருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்திருப்பதை அரசியல் வட்டாரங்கள் இப்படி அர்த்தம் பண்ணுகின்றன - அதாவது, காங்கிரஸ்காரராக இருப்பதைவிட, கௌரவமிக்க சேனைக்காரராக இருப்பது மேல் என்ற எண்ணத்தில், சிவசேனையில் இணையப் பார்க்கிறார். பால்தாக்கரேயைச் சந்தித்துப் பேசியதற்கும் ஜோஷியுடன் ஒரே மேடையில் பொதுமக்களுக்குக் காட்சி அளித்ததற்கும் இதுதான் காரணம் என்கிறார்கள். ஆனால், நாயக், இதை

பலருக்கு கசக்கிறது!

அர்த்தமற்ற வெறும் பேச்சு என்கிறார். "தாக்கரேவைச் சந்திக்கவேயில்லை! மராத்திய பத்திரிகையாளர்கள் கூட்டத்தில், ஜோஷியை சந்தித்ததும் தற்செயல்தான்" என மறுக்கிறார்!

கவர்ச்சி டூரிஸம்

டூரிஸ்டுகளைக் கவர ஒவ்வொரு மாநில அரசும் என்னென்னவோ செய்கின்றது! மஹாராஷ்டிரத்தில் டெபுடி சீஃப் மினிஸ்டர் கோபிநாத் முண்டேவுக்கு காவல் துறையின் வழியாக டூரிஸ்களைக் கவரும் எண்ணம் உதித்திருக்கிறது. "டூரிஸ்டுகளுக்கு விருந்தளிக்கும் விதத்தில், புதுமையான சீருடையில் போலீஸ்காரர்கள் வலம் வருவர்" என்று அறிவித்திருக்கிறார்! சும்மா இருப்பாரா சி.எம்? பேசுவதற்கு அவர் முறை வந்ததும் "கவர்ச்சியை இன்னும் கூட்டுவதற்கு ஒருகால், முண்டே அவர்கள், இந்த இலாகாவிலுள்ள ஆண் போலீசாரை எல்லாம் நீக்கி விட்டு, பெண் போலீசாரை நியமிக்கலாம்! அப்போது அவர்களை எந்த உடையில் உலவ விடுவாரோ தெரியவில்லை" என்று முதல்வர் ஜோஷி கிண்டலடித்திருக்கிறார்!

பரீட்சைக்கு 'டாடா'

இனி ஒன்றாவது, இரண்டாவது வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் இறுதி ஆண்டு பரீட்சை எழுத வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் அந்த ஆண்டில் நான்கு முறை பரீட்சிப்பார்கள் - இரண்டு டெஸ்ட்; இரண்டு எக்ஸாம். ஆனால் ஃபைனல் எக்ஸாம் என்ற பயமுறுத்தல் கிடையாது! இந்தியாவிலேயே மஹாராஷ்டிரத்தில்தான் இந்தப் புதிய அணுகுமுறை அமலாக்கப்பட்டிருக்கிறது என மார் தட்டுகிறது கல்வித்துறை!

ஆளுக்கொரு வீடு

குடிசையில் வசிப்பவர்களுக்கு இலவச வீடுகள் வழங்கும் திட்டம் ஆரம்பித்த கையுடன் ஊழல்களுக்கும் பிள்ளையார் சுழி போட்டாகி விட்டது. ஒரு குறிப்பிட்ட வீட்டு வசதித் திட்டத்தில் கிட்டத்தட்ட 40 'போகஸ்' பெயர்கள், ஒரே வீட்டிலிருக்கும் இருவருக்கு, தனித் தனியாக வீடுகள், ஊரிலிருக்கும் அப்பா பேரில் வீடு; மண்டையைப் போட்டு விட்ட மாமனார் பெயரில் வீடு; வேறு குடியிருப்பிலிருக்கும் நண்பர் பெயரில் வீடு.... இப்படி எத்தனையோ கற்பனைகள். இந்த "இலவச" வீடுகளை விற்று பில்டர்கள் பணம் சம்பாதிக்கத்தான் இத்தனை கருணையும்!

மும்பையிலிருந்து: **ஜெயஸ்ரீ ராஜ்**

11:29

தமிழில்

மூலம் : டேனியல் ஸ்டீல்



பிலிப்பின் காருடன் மோதிய காரை ஓட்டி வந்தது ஒரு செனேட்டரின் மனைவி என்று அறிந்ததும், அந்தத் தீயணைப்புப் படை வீரர் திகைத்துப் போனார்.

"லாரா ஹட்சின்ஸ் என்றா சொன்னாய்? செனேட்டர் ஹட்சின்ஸின் மனைவியா?" என்று மறுபடி கேட்டார்.

"ஆமாம், ஆமாம்," என்றார் மற்றவர்.

"நல்ல காலம்! விபத்தில் அந்த அம்மாள் இறந்து போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஊரையே இரண்டு படுத்தி விடுவார்கள்!" நிம்மதிப் பெருமூச்சு விட்டார் முதல் நபர்.

"அது சரி. மெர்ஸிடிஸ் காரில் இருந்த பசங்கள் விஷயம் என்ன? குடித்திருந்தார்களா? அல்லது போதை மருந்து, கஞ்சா..."

"யாருக்குத் தெரியும்? ஆஸ்பத்திரியில் பரிசோதனை செய்து கண்டுபிடித்து விடுவார்கள். சில சமயம் யார், யார் மீது, ஏன் எப்படி மோதினார்கள் என்பது தெரியாமலே போய் விடுவதும் உண்டு. இதுவும் அந்த மாதிரி ஆகலாம். இரண்டு கார்களும் இப்போது இருக்கிற விதத்தைப் பார்த்தால் எதுவும் சொல்ல முடியாதிருக்கிறது. கார்களும் உருப்படியில்லாமல் நொறுங்கிப் போய்விட்டன."

போலீசார் துண்டு துண்டாகக் கார்களை வெட்டி அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சிலர் தண்ணீர் பீய்ச்சி, ரத்தக் கறைகளையும் பெட்ரோல் கறைகளையும், குப்பை கூளங்களையும் நடைபாதையிலிருந்து அகற்றிய



வண்ணம் இருந்தார்கள்.

லாரா கைக்குட்டையால் வாயைப் பொத்திக் கொண்டு விம்மியவாறு இருந்தாள். இரண்டு பெண்கள் அவளைத் தேற்றி, தண்

ரா. கி. ரங்கராஜன்

7

ணீர்ப் புட்டி கொண்டு வந்து தர, அதைக் குடித்தாள். நடந்ததையெல்லாம் நம்பவே முடியாதவள் போலத் தலையை அசைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஏறத்தாழ நாற்பது வயது இருக்கும். விலையுயர்ந்த உடையில் கவர்ச்சிகரமாக இருந்தாள்.

பாலத்தில் போக்குவரத்தை ஓரளவு சீர்ப்படுத்தியிருந்தார்கள். ஆனால் சாலையில் ஒரு பாதி அடைபட்டிருந்ததால், மறுபாதியிலேயே வாகனங்கள் போவதும் வருவதுமாக இருந்தன. அதைச் சரிப்படுத்த இன்னும் இரண்டொரு மணி நேரம் ஆகுமென்று தோன்றியது.

டிவி, காமெரா வண்டிகள் புறப்படத் தயாராகின. செனேட்டரின் மனைவி என்பது தெரிந்து, லாராவிடம் சில நிருபர்கள் பேச்சுக் கொடுத்துப் பார்த்தார்கள். லாரா பேச மறுத்து விட்டாள். விபத்தில் இறந்து போன பையனைப் பற்றிக் கேட்டதற்கும் அவள் எதுவும் சொல்லவில்லை. நிருபர்கள் அவளை அதிகம் தொந்தரவு செய்யாதபடி நெடுஞ்சாலைப் போலீசார் நாசுக்காகத் தடுத்து விட்டார்கள்.

சான்பிரான்ஸிஸ்கோவில் க்ளே ஸ்ட்ரீட் என்னுமிடத்தில் இருந்தது அவள் வீடு. இரண்டு போலீசார் அவளை வேனில் ஏற்றி அழைத்துச் சென்றார்கள். அப்போது மணி பன்னிரண்டரை ஆகிவிட்டது. செனேட்டர் ஹட்சின்ஸ் தலைநகர் வாஷிங்டனுக்குப் போயிருந்தார். இவள் பெல்வெடேர் என்னுமிடத்தில் ஒரு பார்ட்டிக்குப் போய்விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்து விட்டது.

ஒரு போலீஸ்காரர் வேனிலேயே இருந்தார். மற்றவர் இறங்கி லாராவை வீட்டுக்குள் அழைத்துப் போனார்.

வீட்டில் குழந்தைகள் தூங்கி விட்டார்கள். சமையல்கார அம்மாள் கதவைத் திறந்தவள், தலையும் உடையும் அலங்கோலமாக வந்த எஜமானியைக் கண்டதும் அதிர்ச்சியுடன் வீறிட்டு விட்டாள். ஒரு சின்ன விபத்துதான், வேறொன்றுமில்லை என்று அவளைச் சமாதானப்படுத்தினாள் லாரா.

"ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமா? சொல்லுங்கள். அழைத்துப் போகிறோம்," என்றார் போலீஸ்காரர்.

"அவசியமில்லை. தேவைப்பட்டால் நாளைக் காலை என் டாக்டரிடம் போய்க் கொள்கிறேன்," என்றாள் லாரா.

பிலிப் இறந்து விட்டான் என்பது மட்டுமே அவளுக்குத் தெரியும். ஆலிஸனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்று போலீசார் அவளிடம் சொல்லவில்லை. ஏனெனில் லாராவைப் பார்க்க அவர்களுக்குப் பரிதாபமாயிருந்தது. 'பாவம், எவ்வளவு பயந்து போய், பித்துப் பிடித்த மாதிரி இருக்கிறாள் இந்த அம்மாள்! ஏற்கெனவே விபத்து நடந்ததில் ஆடிப் போய் விட்டாள். பிலிப்பின் சவத்தைத் தூக்கிச் சென்றபோது அதைப் பார்த்துப் பயங்கரமாய் அழுது விட்டாள். மூன்று குழந்தைகளைப் பெற்றவள். தன் குழந்தைக்கு இந்த

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

மாதிரி நேர்ந்திருந்தால் என்ன ஆவது என்று நடுங்கிக் கொண்டிருக்கிறான். இவளிடம் ஆலிஸனைப் பற்றி வேறே சொல்லிக் கொண்டிருப்பானேன்?' என்று அவர்கள் எண்ணினார்கள்.

வீட்டுக்குள் வந்த போலீஸ்காரர், "தூக்க மாத்திரை இருக்கிறதா, மேடம்? இருந்தால் ஒன்று சாப்பிடுங்கள்," என்றார்.

"பரவாயில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றாள் லாரா.

"அல்லது ஸ்டிராங்காய் ஏதாவது ட்ரிங்க் சாப்பிடுங்கள்."

"சாயந்திரம் முதல் நான் ட்ரிங்க்கே சாப்பிடவில்லை," என்றாள் லாரா. "என் கணவரோடு வெளியே போனால்தான் மது அருந்துவேன். அவர் இல்லையென்றால் கிடையாது."

"இருந்தாலும் இப்போது கொஞ்சம் சாப்பிட்டீர்களானால் உடம்புக்குத் தெம்பாயிருக்கும். நான் எடுத்து வந்து தரட்டுமா?"

அவள் சற்றுத் தயங்கினாள். ஆனால் எடுத்து வந்து தந்தால் சாப்பிடுவாள் என்று அந்தப் போலீஸ்காரருக்குத் தோன்றியது. மது பானங்கள் வைத்திருக்கும் அலமாரியிலிருந்து தானே எடுத்து வந்து ஊற்றித் தந்தார். நல்ல ஸ்டி



வந்தவர் : ஒரு கிலோ லவ்லு கொடுங்க!

கடைக்காரர் : சாருக்கு ஒரு கிலோ தீவனம் கொடுப்பா!

— சீர்காழி வி. ரேவதி

ராங்கான பிராந்தி.

வேண்டாவெறுப்பாக, முகத்தை அஷ்டகோணலாக்கிக் கொண்டு அதைக் குடித்தாள் லாரா. ஆனால் குடித்த பின்னர் போலீஸ்காரரை நோக்கிப் புன்னகை செய்து, 'தாங்க்ஸ்' என்றாள். "நீங்களும் உங்கள் தோழரும் எனக்கு ரொம்ப உதவியாக இருந்திருக்கிறீர்கள். செனேட்டர் ஊரிலிருந்து வந்ததும் உங்களைப் பற்றிச் சொல்கிறேன். மிகவும் சந்தோஷப்படுவார்."

"இதில் என்ன மேடம்?" என்று சொல்லிவிட்டு அந்தப் போலீஸ்காரர் வேனுக்குத் திரும்பினார். வேனில் இருந்த போலீஸ்காரர், "ஏனப்பா, அந்த அம்மாளை நாம் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போயிருக்க வேண்டாமோ? குடித்திருந்தாளா இல்லையா என்று அங்கே செக் பண்ணுவார்கள் இல்லையா? நாளைக்கு விசாரணை வந்தால்...?" என்று கேள்வி எழுப்பினார்.

"கம்மென்றிரு, டாம்!" என்று அவரை அதட்டினார் முதல் போலீஸ்காரர். "அந்த அம்மாள் சாதாரண நபரா என்ன? ஒரு செனேட்டரின் மனைவி. ஏற்கெனவே இந்தக் கார் விபத்தினால் பைத்தியம் பிடித்த மாதிரி இருக்கிறாள். அந்தப் பையன் இறந்து போனதில் வேறே அதிர்ச்சி. ஆஸ்பத்திரி, அது இது என்று நாம் எதற்குக் கலாட்டா செய்ய வேண்டும்? அத்தோடு, தான் எதுவும் குடிக்கவில்லை என்று அந்த அம்மாளே சொன்னாள். அதற்கு மேலே என்ன வேண்டும்?"

அந்த இரண்டாவது போலீஸ்காரருக்கும் அது நியாயமே என்று பட்டது.

"நீ சொல்வது சரிதான். ஒரு செனேட்டரின் மனைவி, ராத்திரி பதினொரு மணிக்கு, நன்றாய்க் குடித்து விட்டுக் கார் ஓட்டி, சின்னப் பசங்கள் மீது மோதுவாளா? அந்த அளவுக்கா அறிவுகெட்டுப் போகும்? பார்ப்பதற்கும் நல்ல பெண் பிள்ளையாகத்தான் இருக்கிறாள்," என்றார்.

"ரொம்பக் களைத்துப் போயிருந்தாள். நானே ஒரு கிளாஸ் பிராந்தி ஊற்றிக் கொடுத்து விட்டு வந்தேன். இனிமேல் மறுபடியும் உள்ளே போய் அவளை ஆஸ்பத்திரிக்குக் கூப்பிடுவதில் அர்த்தமில்லை. பிராந்தி குடித்த பிறகுதான் அவள் முகத்தில் களை வந்தது, பாவம்."

"எனக்கும் ஒரு கிளாஸ் கொண்டு வரக் கூடாதோ?" என்று சொல்லிச் சிரித்தார் மற்றவர்.

"அது எதற்கு? நமக்குப் பதவி உயர்வு கிடைக்க செனேட்டர் சிபாரிசு செய்வார். அது போதாதா?" என்று முதல் போலீஸ்காரர் சொல்ல, இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

போலீஸ் வேன் இருளைக் கிழித்துக் கொண்டு புறப்பட்டது.

டீவியில் ஒரு பழைய சினிமா ஓடிக் கொண்டிருந்தது. ஆலிஸனின் அம்மா பேஜ் இருப்புக் கொள்ளாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மணி பதினொன்றே கால், பதினொன்றரை, பதினொன்று ஐம்பது...

பதினொன்றரைக்கு வீடு திரும்பிவிட வேண்டும் என்று அவ்வளவு கண்டிப்பாய்ச் சொல்லியிருந்தும் இந்தப் பெண் இப்படிப் பண்ணுகிறாளே! ஆலிஸன் மீது கோபம் வந்தது.

மணி பன்னிரண்டு. இன்னும் ஆலிஸனைக்



ஆஸ்கார் குத்துச் சண்டை!

முன்னாள் உலக குத்துச் சண்டை வீரரான முகமது அலியின் வாழ்க்கை வரலாற்றை வீடியோ கேசட்டில் டாக்குமெண்டரி செய்திப்படமாக எடுத்து வெளியிட்டுள்ளனர். இந்தப் படத்திற்கு இந்த வருடத்தின் மிகச் சிறந்த டாகுமெண்டரி படம் என்று ஆஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது. உலக சாம்பியனாக வெற்றிவாகை சூடிய குத்துச் சண்டை வீரர் இன்று வாத நோயால் பாதிக்கப்பட்டு படத்தில் தோன்றுவது நெஞ்சைப் பிளக்கும் காட்சி.

— பாரீஸ் பார்த்தசாரதி

காணோம்.

சிறுவன் ஆண்டி அவ ளருகே நிம்மதியாய்த் தூங் கிக் கொண்டிருந்தான். கட்டிலின் கீழே தரையில் நாய்க்குட்டி விஸ்லி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. வீடெங்கும் நிசப்தம். அமைதி. பேஜ் ஒருத்திதான் விழித்துக் கொண்டிருந்தாள். நிமிடத்துக்கு நிமிடம் அவள் தவிப்பு அதிகரித்துக் கொண்டிருந்தது.

பதினொரு மணிக்கு வரச் சொன்னோம்... மேலும் அரைமணி நேரம் கேட்டாள். சரியென்று அனுமதி கொடுத்தாயிற்று. அதற்கு மேலும் வீடு திரும்பவில்லையென் றால் என்ன அர்த்தம்?

க்ளோவின் வீட்டுக்குப் போன் போட்டு அவள் அப்பா தாரன்ஸனைக் கேட்கலாமா என்று நினைத்தாள். ஆனால் அவர்தானே ஆலிஸனையும் க்ளோவையும் வெளியே அழைத்துப் போயிருக்கிறார்? சினிமா பார்த்த பிறகு எங்காவது ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். பதினொன்றரை மணிக் குள் வீடு திரும்பும்படி அம்மா சொல்லியிருக் கிறாள் என்று தாரன்ஸனிடம் ஆலிஸன் சொல்லியிருக்க மாட்டாள். அதனால் அவரும் அவசரப்பட்டிருக்க மாட்டார். இப்போது அவர் வீட்டுக்குப் போன் பண்ணினால் கூடப் பதில் எதுவும் கிடைக்காது...

பன்னிரண்டரை மணி.

பேஜ் கடும் கோபம் கொண்டாள் மகள் மீது. ஒரு மணி ஆன போது அது பெரும் கவலையாக மாறியது. சரி, க்ளோவின் வீட்டுக் குப் போன் பண்ணிக் கேட்க வேண்டியதுதான் என்று அவள் தீர்மானித்த சமயம் –

ஒன்று பத்துக்குப் போன் கிணுகிணுத்தது.

ஆலிஸனாகத்தான் இருக்கும். ராத்திரி க்ளோவின் வீட்டிலேயே தங்கிவிட்டுக் காலை யில் வரலாமா என்று கேட்கப் போகிறாள். உலுக்கி விடுகிறேன் உலுக்கி!...

போனை எடுத்தவள், "மரியாதையாய் உடனே வீட்டுக்கு வந்து சேர்!" என்று உறுமி னாள்.

மறு முனையில் இருந்தவர் பேஜின் உறு மலைக் கேட்டுத் திகைத்துப் போனார். குழம் பிய குரலில், 'ஹலோ' என்றார் மறுபடியும்.

முன்பின் தெரியாத அன்னியக் குரலாக இருக்கவே பேஜும் திகைத்தாள். இந்த நேரத் தில் யார்? ...ராங் நம்பராக இருக்குமோ?

"மிஸ்டர் பிராட் வீடா அது?"

"ஆமாம். நீங்கள் யார்?" என்னும்போதே பேஜின் முதுகில் மின்ன லென ஒரு வலி புறப்பட்டது.

"நாங்கள் நெடுஞ்சாலைப் போலீஸ். மிஸஸ் பிராடா பேசுவது?"

"ஆ... ஆமாம்..." குபீரென்று அடிவயிற்றில் எழுந்த அச்சம் தொண்டையை இறுக்கிப் பிடித்தது.

"ஸாரி... உங்கள் பெண் ஒரு கார் விபத்தில்..."

"ஐயையோ...! அவளுக்கு ஒன்றும்... ஒன்றும்..." பயங்கர பீதியில் பேஜின் உடம்பு ஆடியது.

"உயிரோடுதான் இருக்கிறாள். ஆனால் ரொம்ப சீரியஸான காயம்... மரீன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் நினைவில்லாமல் கிடக்கிறாள். நீங்கள் உடனே வாருங்கள்."

ஐயோ தெய்வமே! ஐயோ தெய்வமே!

உடனே பிராடுக்குத் தெரிவித்து, அவரை வரச் சொல்ல வேண்டும்... அல்லது, ஆஸ்பத் திரிக்கு போன் பண்ணும்படி சொல்ல வேண் டும்... கையும் காலும் பதற...

மேஜை மீது உள்ள பாக்கெட் நோட்டைப் பார்த்தாள். எப்போது எங்கே போனாலும் அதில் டெலிபோன் நம்பரைக் குறித்து வைப் பது பிராடின் வழக்கம்.

இப்போது எதுவும் குறிக்கவில்லை. அந்தக் குட்டி நோட்டு வெற்றுத்தாளாக இருந்தது. இந்தப் பதினாறு வருடத்தில் அவன் டெலி போன் நம்பரைக் குறித்து வைக்காமல் வெளி யூர் போனது இதுவே முதல் தடவை.

(தொடரும்)

பாலம்

● ரா.கி. ரங்கராஜன் எழுதிய "சிறுகதை எழுதுவது எப்படி?" தேவை. உரிய விலை கொடுத்து பெற்றுக் கொள்கிறேன்.

- ஜி.ஜி. கிருஷ்ணன்
விசலூர் (அ) கங்களாஞ்சேரி (வழி)
திருவாரூர். ஏடிபி (மா.வ) - 610 101

● ஹாம் (HAM) ரேடியோ பற்றிய விவரங்கள் தேவை.

- கே. துரைராஜ்
ரெகுராம சமுத்திரம்
சிரமேல்குடி - 614 903.
தஞ்சை (மா.வ)

● 'அருங்கலச் செப்பு' நூல் படிக்க ஆசை. இரவலாகவோ, விலைக்கோ கொடுத்து உதவக் கூடியவர்கள் தொடர்பு கொள்க.

- புதூர்.க. முருகையன்
450, 24 வது சாலை
த.நா.வீ. வசதி வாரியம்
கிருஷ்ணகிரி சாலை
திருப்பத்தூர் - 635 601.

● எங்கள் வீட்டில் ஒரு பழச் செடியில் தேன் கூடு உள்ளது. இதிலிருந்து தாய்ப் பூச்சியை எடுத்து தேன் பெட்டிக்குள் வைக்க உதவி தேவை. செலவு ஏற்கத் தயார்.

- க. கிருஷ்ணமூர்த்தி
பிளாட் 63, கதவு எண். 6
லீலாநகர் முதல் தெரு,
மடிப்பாக்கம், சென்னை - 91.

● "லட்சியபூமி" - ஆங்கில நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு புத்தகம் தேவை. விலை, நிலை குறித்து எழுதவும்.

- இரா. தர்மராஜ்
நூ. சின்னயாபுரம்
பூதலபுரம் (அ)
புதூர் (வழி) - 628 905

● என்னுடன் 46-48 ல் ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தில் ஆசிரியராகப் பணி புரிந்து, பிறகு ரயில்வேயில் உயர் பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ள ஏ.வி. சுப்பிரமணியன் முகவரி தேவை.

- என்.ஆர். ஸ்ரீநிவாசன்
85, வடக்கு சித்திரை வீதி
ஸ்ரீரங்கம் - 620 006.

● கி.வா.ஜ., மெ. சுந்தரம், மு.வை. அரவிந்தன், மா. வரதராஜன் ஆகியோர் தொகுத்த நாட்டுப்புறப் பாடல்கள் தொகுப்பு நூல்கள் விலைக்குக் கிடைக்குமா?

- மு. பூபாலன்
மூஞ்சூர்பட்டு
வ.ஆ.அ.மா. - 632 057.

● ஊதுவத்தி தயாரித்து விற்பனை செய்ய ஆவல். ஆலோசனைகளையும் தயாரிப்பு விவரங்களையும் தெரியப்படுத்துமாறு வேண்டுகிறேன்.

- வி. பார்த்தசாரதி
26, கருணாகர பிள்ளை தெரு
குயவர்பாளையம்
பாண்டிச்சேரி - 605 013.

● மூலிகைகளின் நோய் தீர்க்கும் தன்மைகள் பற்றிய பழைய மருத்துவ நூல்கள் தேவை. விலை விவரம் எழுதுக.

- கி. மனோகரன்
37-ஏ, மெயின் ரோடு
நெற்குப்பை (அ)
பகம்பொன் (மா.வ) - 630 405.

● கல்கி வாசகர்கள் எப் பகுதியைச் சேர்ந்தவர்களானாலும் பகுதி/முழு நேர வேலையில் சேர இலவசமாக உதவுகிறேன். சமூக சேவை, விளையாட்டு, வர்த்தகம் போன்றவற்றில் ஆர்வமுடையவர்களுடன் பேனா நட்பும் பெற விருப்பம்.

- என். ஜவாஹர்லால்
4/308 A, இரண்டாவது தெரு
சாந்தி நகர்,
திருநெல்வேலி - 627 002.

● பிரும்மஸ்ரீ அனந்தராம தீட்சிதர் உரை எழுதிய "ஸ்காந்தம்" முதல் பாகம் இரு பிரதிகள் உள்ளன. இரண்டாம் பாகம் விலைக்கோ அல்லது முதல்பாகம் ஒரு பிரதிக்கு மாற்றாகவோ பெற விரும்புகிறேன்.

- தர்மா கிருஷ்ணன்
9-B, தேவி அபார்மெண்ட்ஸ்
75, தெற்கு மாட வீதி
சென்னை - 600 041.

● ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் கோவை மாவட்டம் வடவள்ளி பேரூராட்சித் தேர்தலில் வாட்ச் சின்னத்தில் போட்டியிட்ட சண்முக சுந்தரத்தைச் சந்திக்க விருப்பம்.

- ஆர். ரங்கராஜன்
1, தெற்கு வெளி வீதி
மதுரை - 625 001.


(பாலம் பகுதி மூலம், இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்.)

தமிழ்க்குடிமகனுக்குச் சில யோசனைகள்!

சமீபத்தில் தமிழ்ப் பண்பாடு மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் 'மேயர்' என்பது தமிழ்ச் சொல்தான் என்று சான்றிதழ் அளித்திருக்கிறார். 'மே' என்பது உயர்வைக் குறிக்கும் ஓர் அடைமொழி (உதாரணம்: மேதகு) என்பதால், 'மேயர்' என்பதைத் தமிழ்ச் சொல்லாகவே கருதலாம் என்பது மாண்புமிகு அமைச்சரின் மேன்மையான கருத்து. இந்த அரிய கருத்தைக் கேட்டு மகிழ்ந்ததில் நாமும் நம் பங்குக்குச் சில தமிழ்ச் சொற்களுக்கு விளக்கம் தர முன் வந்திருக்கிறோம்...

அல்வா: 'அல்வா கொடுப்பது' என்றால் ஏமாற்றுவது என்ற பொருளில் இன்று பெரிதும் பழக்கத்தில் உள்ள சொல். இது ஒரு தமிழ்ச் சொல்தான். ஏமாற்றுதல் என்றால் 'உண்மை அல்ல' என்ற பொருள்படும். 'அல்ல' என்ற எதிர்மறை வினையின் முதல் இரு எழுத்துக்களையும் கொண்டு அமைந்த 'அல்வா', தமிழ்ச் சொல் அல்லாமல் வேறு என்ன?

பாவ்லா: 'பாவ்லா காட்டுவது' என்றால் 'பாசாங்கு செய்வது', 'போக்குக் காட்டுவது' என்று பொருள். பாசாங்கு என்பது தமிழ்ச் சொல்தானே? எனவே



அதன் முதல் எழுத்தைத் தலையெழுத்தாகக் கொண்ட இந்தச் சொல்லும் தமிழ்ச் சொல் தான்.

பால் மாறுவது: கொடுத்த வாக்கை மீறுவது. பால் மாறித் தயிராவதுபோல் அல்லது திரிந்து போவது போல், வாக்கு மீறப்படும்போதும் நிகழ்வதால், இந்தச் சொற்றொடரும் தமிழ்ச் சொற்றொடர்தான்.

நாஸ்தா அல்லது நாஷ்டா: காலைச் சிற்றுண்டி. காலையில் எழுந்ததும் 'நாவுக்கு ஏதாவது தா' என்று கேட்பதுபோல் அமைந்திருப்பதால் இதுவும் தமிழ்ச் சொல்தான்.

ஃபெடரல் முன்னணி: இந்தச் சொற்றொடரில் ஆங்கிலக் கலப்பு அப்பட்டமாகத் தெரிகிறது. இரண்டு வார்த்தைகளும் கலக்கவில்லை. இந்த முன்னணியில் உள்ள கட்சிகளும் ஒன்றுபடாமல் தனித்தனியே நிற்பதால், இந்த முன்னணியின் முரண்பாட்டைச் சிறப்பாக விளக்க வேறு தமிழ்ச் சொல்லைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை.

சன் டீவி : இந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பில் படம் சன்னமாகத் தெரிவதால் இதுவும் தமிழ்ச் சொல்லே. டீவி என்பது ஆங்கிலச் சொல் அல்லவா என்று கேட்பதில் அர்த்தமில்லை. டியுவி என்று வரிசையாக வந்தால் தான் ஆங்கிலம். அப்படி இல்லாததால் இது தமிழ்தான்.

கவுன்சிலர்: சிலர்தான் கவுன்'சிலர்' ஆக முடியும் என்ற சிறப்பை விளக்கும் தமிழ்ச் சொல் இது.


சிக்னல்: வாகனங்கள் தொடர்ந்து செல்ல முடியாமல் சிக்கிக் கொள்ளும் இடம். இனிய தமிழ்ச் சொல் இது!

இதுபோல இன்னும் பல 'தூய தமிழ்ச் சொற்களை'ச் சுட்டிக்காட்டலாம்.

'எங்கும் தமிழ்' என்று சிந்திக்கும் நமக்கு 'எதிலும் தமிழை'க் காண்பதில் ஆர்வம் இருப்பது இயல்புதானே!

கற்பனை: **பி.ஆர்.எஸ்**

ஆபத்தான மிருகம்!



டோக்கியோ மிருகக் காட்சி சாலைக்கு வந்தவர்கள் ஒரு புதுமையான காட்சியைக் கண்டனர். அதன் நிர்வாகி மாச்சு செய்ட்டோ "ஒரு கூண்டுக்குள் ஒரு மணி நேரம் இருந்தார். ஆண்டவன் படைப்புக்களிலேயே ஆபத்தான மிருகம் மனிதன்தான் என்பதை மக்களுக்கு உணர்த்தவே என்னையும் கூண்டில் அடைத்துக் கொண்டேன்" என்றார்.

நன்றி: ஹிந்து,
— எஸ். கிருஷ்ணஸ்வாமி

ஆனைமலை பகுதிகளில் காடுகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாய் இருந்தவர் ஹியூகோ வுட். இதற்காகவே இவரை அன்றைய பிரிட்டிஷ் அரசு நியமித்தது. அவர் தமது கால் சட்டைப் பைகளில் நிறைய தேக்கு மர விதைகளை நிரப்பிக் கொண்டு நடப்பார். போகும் வழியெல்லாம் 'வாக்கிங் ஸ்டிக்'கினால் பூமியில் துளையிட்டு, விதை ஊன்றிச் செல்வார். அதன் பயன்தான் இன்றைய ஆனைமலைக் காடுகள்!

ஆதாரம்: ஹிந்து;
தகவல்: **கே.எஸ். நாராயணன்.**

விவேகானந்தருடைய சிஷ்யை சகோதரி நிவேதிதாவின் விடாமுயற்சியும் பொறுமையும் பிரசித்தமானவை. ஒருமுறை அவர் பெண்களின் கல்விப்பணிக்காகக் கல்கத்தாவில் நிதி திரட்டிக் கொண்டிருந்தார். ஒரு பெரிய வியாபாரியிடம் போனார். பணம் இருந்த அளவு அவருக்கு மனம் இல்லை. பணம் தர முடியாது என்று சொல்லி விட்டார்.

சகோதரியும் திரும்பத் திரும்ப அவரிடம் பலவிதங்களில் கேட்டார். எரிச்சலுற்ற வியாபாரி எழுந்து சகோதரியின் கன்னத்தில் அறைந்து விட்டார். சகோதரி சிரித்துக் கொண்டே, "எனக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விட்டீர்கள். இப்போது இந்தப் பணிக்குக் கொடுக்க வேண்டியதையும் கொடுத்து விடுங்கள்" என்றார்.

வியாபாரி தம் செயலுக்கு வருந்தி சகோதரி கட்டிடிருந்த பணியை முழுவதுமாகத் தம் செலவிலேயே நடத்தித் தர ஒப்புக் கொண்டார்!

— சரண்யன்

அன்புள்ள அக்கா...

யோகி

அக்காவிடம் இருந்து சூட்கேஸை வாங்கிக் கொண்டேன். அப்பா பயணச் செலவுக்கான பணத்தை என்னிடம் கொடுத்தார். அது போக இன்னும் கொஞ்சம் பணத்தை அக்காவின் கையில் கொடுத்து, "ஏதாவது வாங்கிச் சாப்பிடும்மா. ஒண்ணும் சாப்பிடாம அவங்கள குத்தஞ் சொன்னா எப்படி.... மாப்பிள்ளை நாலு இடத்துக்குப் போவார் வருவார். உனக்கு வேணும்னா நீதான் கேட்டு வாங்கிக்கணும்" என்றார்.

அம்மா கண்களை துடைத்துக் கொண்டாள். "முருகேக... சொன்னது ஞாபகத்துல இருக்குல..." என்றார் அப்பா.

"ம். இருக்குப்பா."

"அப்பாக்கு உடம்புக்கு முடியலை... அதான் அக்காவைக் கொண்டு போய் விட்டுட்டு வரச் சொன்னார்ன்னு சொல்லு... அப்பா வரலைன்னு ஒண்ணும் நினைச்சுக்காதிங்க. ஒரு வாரங் கழிச்சு வர்றேன்னு சொன்னார்ன்னு சொல்லு. அக்கா இனி சண்டை பிடிக்க மாட்டா... அப்பா புத்திமதி சொல்லி அனுப்பி இருக்கார்ன்னு சொல்லு..." என்று அம்மா சொல்லச் சொல்ல அக்கா கண்கலங்கியது. வேறு பக்கம் பார்ப்பது மாதிரி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"வெளிய போகும்போது என்ன அழுதுக்கிட்டு... குடும்பம்னா நாலும் இருக்கத்தான் செய்யும். அனுசரிச்சுப் போகணும்... புரியுதா..." என்றார் அப்பா.

அக்கா ஒன்றும் பேசவில்லை. "வாடா போகலாம்" என்று என்னை அழைத்தான். அவனுக்கு யாரையும் பிடிக்கவில்லை என்று தோன்றியது. யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. ஏன் சொல்ல வேண்டும். தன்னைப் புரிந்து கொள்ளாதவர்களிடம் பேசினாலும் ஒன்றுதான். பேசாவிட்டாலும் ஒன்றுதான்.

"அப்பா... அக்காவை விட்டுட்டு வர்றேன்... அம்மா போயிட்டு வரேன்" என்றவாறு வாசற்படி இறங்கினேன். அக்கா – அப்பாவிடமும் சரி, அம்மாவிடமும் சரி ஒன்றும் சொல்லவில்லை. சிறிய வயர் கூடையை கையில் பிடித்துக் கொண்டாள். வாசற்படி இறங்கித் தெருவில் நடக்க ஆரம்பித்தபோது, என் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

நாங்கள் எதுவும் பேசவில்லை. ஆனால் அக்காவிடம் பேச எனக்கு நிறைய விஷயங்கள் இருக்கிறது. ஆனால் பேச முடியவில்லை. அப்பா, அம்மா சொல்லாத ஆறுதல் வார்த்தைகளை நான் சொல்ல வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் எப்படிச் சொல்வது என்றுதான் தெரியவில்லை.

முன்பெல்லாம் இப்படி நடக்கும்போது – அக்காவுக்குக் கல்யாணம் ஆவதற்கு முன்பு –

நாங்கள் பேசாமல் இருப்பதே இல்லை. ஏதாவது பேசிக் கொண்டே இருப்போம். "அது என்னக்கா... இது என்னக்கா" என்று ஏதாவது சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுவேன். அக்கா பேசவில்லையாயினும் நான் பேசிக் கொண்டே இருப்பேன். அக்கா ''தொண தொணன்னு வராதே.. கொஞ்ச நேரமாவது சும்மா இரு... உனக்கு வாயே வலிக்காதா'' என்பாள்.

நான் சிரிப்பேன். அக்காவோடு பேசுவது எனக்குப் பிடிக்கும். அப்போதெல்லாம் நான் சின்னப் பையன். இப்போது ப்ளஸ் டூ முடித்து காலேஜுக்குப் போகப் போகிறவன். இப்போதும் பேச விருப்பமாய்த்தான் உள்ளது. ஆனால் அக்காதான் பேசும் மனநிலையில் இல்லை. வாழ்க்கை அவளுக்கு சௌக்கியமாய் இல்லை. மௌனத்தை உடைக்க விரும்பினேன். வழியில் ஒரு அல்வா கடை வந்தது. "அக்கா... உனக்கு அல்வா பிடிக்குமே... வாங்கவா" என்று கேட்டேன்.

"ஆமா... இப்ப அல்வா சாப்பிடுற மாதிரிதான் இருக்காக்கும் என் வாழ்க்கை. நீ வேற ஏன்ப்பா என் வேதனையைக் கிளப்புறே...'' என்றாள். எனக்குக் கஷ்டமாய் இருந்தது. அக்காவுக்கு அல்வா என்றால் இஷ்டம். முன்பெல்லாம் அப்பா அல்வா வாங்கி வருவார். ஒரு டப்பா நிறைய... "இரண்டு நாள் வைச்சுச் சாப்பிடணும்" என்பார். ஆனால் நாங்களோ அரைமணி








"கோர்ட்டு, கேஸ்ன்னு அலைஞ்சதுல நம்ம தலைவர் ரொம்பத்தான் குழம்பிப் போயிட்டாரு!"

"எப்படி சொல்றே?"

"'லேடீஸ் கிளப் வருடாந்திர விழாவில் 'பெண் விடுதலை'ங்கற தலைப்புல இவரை பேசச் சொன்னால், ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு, 'பெண் விடுதலை இல்லாட்டிகூட பெண் முன் ஜாமீனாவது வேண்டும்'னு ஆக்ரோஷமா பேசிட்டாரு..!"

— பாஸு



"என்னங்க அந்த நடிகை வீட்ல இவ்வளவு கூட்டம்..?"

"அவங்க நடிப்புக்கு முழுக்குப் போடப் போறாங்களாம். நன்றி சொல்ல வந்திருக்காங்க!"

— பா. ஜெயக்குமார்



"இந்த ஆபீஸ்ல அப்பப்ப ரூபாயின் மதிப்பு 15 பைசா, 14 பைசா, 13 பைசான்னெல்லாம் எழுதி வச்சிருக்காங்களே, ஏன்?

"அதுக்குத்தகுந்த மாதிரி சம்திங்கை கணிசமா வெட்டமாட்டாங்களான்னுதான்!"

— சீர்காழி வி. ரேவதி

நேரத்தில் அதைக் காலி பண்ணிவிட்டு மாறி மாறி டாய்லெட்டுக்கு ஓடுவோம்.

"ஏக்கா இப்படிப் பேசுறே.. யாருமே உனக்கு இல்லாத மாதிரி."

"யாருடா எனக்கு இருக்கா... நேத்து வந்தேன். இன்னிக்குப் பாரு, கழுத்தைப் பிடிச்சு வெளியேத்தாத குறையா விரட்டிட்டாங்க. இவங்க எல்லாம் அப்பா, அம்மாவா..."

"நா இருக்கேன்க்கா."

அக்கா சிரித்தாள். "சினிமாப் படம் ரொம்ப பார்க்கிறியா... அதுலதான் அண்ணன் தங்கை, அக்கா தம்பி எல்லாரும் ஒருத்தர் மேல் ஒருத்தர் உயிரை விடுவாங்க. நிஜவாழ்க்கையில் ஒருத்தரை ஒருத்தர் உயிரை எடுக்கிறாங்க."

எங்கள் வீட்டில் இருந்து பஸ் ஸ்டாண்ட்டிற்கு ரெண்டு ஸ்டாப்பிங் தூரம்... நடந்தும் போகலாம். பஸ்ஸிலும் போகலாம். நடந்து போனால் அக்காவிடம் பேசிக் கொண்டு போகலாம். பஸ்ஸில் போனால் பேச முடியாது. யார் யாரோவாக ஆளுக்கொரு கம்பியைப் பிடித்துக் கொண்டு நிற்க வேண்டும். ஆனாலும் அக்காவிடம் கேட்டேன். "அக்கா... பஸ்ல போகலாமா... நடந்து போகலாமா"

"நடந்தே போகலாம்."

இருவரும் நடந்தோம். திரும்பவும் எங்களுக்குள் மௌனம் நிலைகொண்டது. அக்காவுக்குக் கல்யாணமாகி நாலு வருஷமாயிற்று. குழந்தை இல்லை. அத்தான்... அக்காவோடு சண்டை போடும் பல காரணங்களில் இதுவும் ஒன்று. அக்கா யாருடனும் கலகலப்பாகப் பேசினாலும் அத்தானுக்குப் பிடிக்காது. சந்தேகப் புத்தியோ என்னவோ தெரியவில்லை.

இரண்டு மாதத்திற்கு ஒருமுறையாவது சண்டை சச்சரவு என்று அக்கா எங்கள் வீட்டிற்கு வருவதைத் தவிர்க்க முடியாது. ஆரம்பத்தில் அக்கா சண்டை போட்டு வருகிறாளா இல்லை சாதாரணமாய் வருகிறாளா என்றெல்லாம் தெரியாது. அக்கா வீட்டிற்கு வருகிறாளே என்று சந்தோஷமாய் இருக்கும். விவரம் தெரியத் தெரிய வேதனைதான் கவ்வியது. அப்பா - அக்காவை இரண்டு நாட்கள் இருக்க வைத்துவிட்டு மூன்றாம் நாள் கூட்டிக் கொண்டு போவார்.

ஒவ்வொரு முறையும் இதே வாடிக்கையாய்ப் போனது. அக்கா சொல்வாள். "எனக்கு எப்படியாச்சும் கல்யாணம் பண்ணினா போதும்னு, அப்பா நரகத்தில் தள்ளிட்டார்" என்று. அப்பாவோ "அவளுக்குப் புருஷனோட ஒழுங்கா வாழத் தெரியலே" என்பார்.

சூட்கேஸை வலது கையில் இருந்து இடது கைக்கு மாற்றிக் கொண்டேன். "நா வேணும்னா கொண்டு வரேன்... கொடு" என்று

கேட்டாள் அக்கா.

"இருக்கட்டும்க்கா..."

"அக்கா... ஏதாவது பேசேன்."

"என்னடா பேசறது?"

"இல்ல... நீ இப்படி ஒண்ணுமே பேசாம வர்றது எனக்கு என்னவோ போல் இருக்கு. பயமாக் கூட இருக்கு."

"பேசாம வர்றதுல என்ன பயம்?" என்று சிரித்தாள். ஜீவன் அற்ற சிரிப்பு.

"எக்ஸாம் எல்லாம் முடிஞ்சிடுச்சல்ல.. மார்க் எவ்வளவு ஸ்கோர் பண்ணுவே?"

"தொள்ளாயிரத்தி ஐம்பது எதிர்பார்க்கிறேன்க்கா."

"மெடிக்கல், இன்ஜினியரிங்... எதுல ஜாயின் பண்ணப் போறே?"

"என் மார்க்கிற்கு அதெல்லாம் கிடைக்காது. பி.எஸ்ஸி.தான் பண்ணணும்" என்ற போது என் எதிரே அவள் வந்தாள். தெரிந்த பெண் சிநேகிதி. என்னைப் பார்த்துப் புன்னகைத்தவாறே கடந்து போனாள். அவள் புன்னகைத்ததையும், நான் திரும்ப புன்னகைத்ததையும் அக்கா பார்த்தாள். "யாரையும் லவ் பண்றியா?" என்று கேட்டாள்.

இப்படி ஒரு கேள்வியை எதிர்பார்க்கவில்லை. "அதெல்லாம் இல்லைக்கா."

"லவ் பண்ணாலும் லவ் பண்ற பொண்ணைத்தான் நிச்சயம் கல்யாணம் பண்ணிக்கணும். இல்ல லவ் பண்ணாதே. சும்மா ஜாலிக்கு, டைம் பாஸுக்காக எல்லாம் வேண்டாம். அப்படி ஏமாத்திட்டு போறது பாவமான காரியம்."


அக்கா ஏன் என்னவோ போல் பேசுகிறாள். அக்கா யாரையாவது லவ் பண்ணி இருக்கிறாளா... அவள் காலேஜில் படித்த காலத்தில் எங்கள் வீடு இருந்த தெரு முனையில் இருந்த டீக்கடையில் இரண்டு பசங்கள். அக்கா காலேஜுக்கு போகும் சமயம் கரெக்டாக வந்து நிற்பார்கள். அதெல்லாம் காதலில் சேர்த்தி ஆகுமா...?

"ஒண்ணு சொல்றேன் உனக்கு. கல்யாணம் பண்ணிக்கிட்டா உன் ஒய்பை நீ மதிக்கணும். அவளும் மனுஷின்னு நீ உணரணும். எனக்கு நேர்ந்த கதி – உன்னால் வேறு பொண்ணுக்கு நிகழக் கூடாது."

நான் அக்காவைப் பார்த்தேன். அக்கா கண்களை துடைத்துக் கொண்டாள்.

"என்னக்கா... என்ன என்னவோ பேசிட்டு வர்றே."

"நீதானேடா ஏதாவது பேசச் சொன்னே. உன்கிட்ட இதுமாதிரி பேசணும்னு ரொம்ப நாட்களா நினைச்சிட்டு இருந்தேன். இன்னிக்கு விட்டா இனி பேச முடியுமா... நீ என் ப்ரண்ட் மாதிரிதான்... அம்மா கிட்ட எதுவுமே பேச முடியலை. அப்படிப் பேசினா அப்பா அம்மாவைத் திட்டறார்... பெண் மனசை கெடுக்கிறாயான்னு. அதனால் அம்மாகிட்ட கூட பேச முடியலை. உன்கிட்டதான் பேசறேன்."



இந்தப்படம் என்னவாக இருக்கும்?

ஏதாவது பாப் மியூஸிக் மேடை? விண்வெளி ஆய்வுக்கூடம்?

எதுவுமில்லை.

இங்கிலாந்து தேர்தல் முடிவுகளை நேரடியாக ஒளிபரப்ப பி.பி.சி.டீ.வி நிலையத்தில் போடப்பட்டிருந்த செட்தான் இது!

பஸ் ஸ்டாண்ட் வந்து விட்டது. இரண்டு மணி நேரப் பஸ் பிரயாணம். அக்காவின் ஊருக்கு.. பஸ் பார்த்து ஏறி அமர்ந்து கொண்டோம். அக்கா ஜன்னலோர சீட்தான் வேண்டுமென்று உட்கார்ந்து கொண்டாள். மனசு சந்தோஷப்பட்டது. அக்கா எதையாவது விரும்ப வேண்டும். இப்படி விட்டேத்தியாய் இருந்தால் மனநிலை பாதிக்கப்படக்கூடும்.

அக்காவை உட்கார வைத்துவிட்டு ஆப்பிள் பழங்கள் வாங்கி வந்தேன். "ஏன் இதெல்லாம்.. அங்க சாப்பிட யார் இருக்கா.. நா ஒருத்தி சாப்பிட்டாத்தான் உண்டு. வேறு யாரும் நம்ம வீட்டுல இருந்து கொண்டு வர்ற எதையும் தொட மாட்டாங்க" என்றாள்.

ஒரு பழத்தை வெட்டி, ஆளுக்குப் பாதி பாதியாய்ச் சாப்பிட்டோம். அக்கா திடீரென்று சிரித்தாள். "என்னக்கா சிரிக்கிறே.."

"இல்ல... நா கல்யாணமாகி முதன்முதலா அங்க போகும்போது நீயும் என் கூட வருவேன்னு அழுதே. அடம்பிடிச்சே. நான் சமாதானம் பண்ணினேன். இப்போ பாரு. நா அழுதுட்டு இருக்கேன். நீ என்னைச் சமாதானம் பண்ணுறே."

அடுத்த ஸ்டாப்பிங்கில் இறங்கி அக்காவுடன் திரும்பவும் வீட்டுக்கே போய் விடலாம் என்று தோன்றியது.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சாஸ்திரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொன்னேன் அல்லவா...? அத்தனை சாஸ்திரங்களும் நமது பாதுகாப்புக்காகத்தான் ஏற்பட்டிருக்கின்றன.

ஒரு தாயினுடைய அன்பு; ஒரு தந்தையினுடைய அன்பை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உலகத்தில் பிரத்யக்ஷமாக, கர்மாதீனமாக ஏற்பட்ட சம்பந்தத்தினாலே, ஒரு அப்பா - அம்மாவினுடைய அன்பு எப்படிப்பட்டது என்பதை, குழந்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் சாஸ்திரம் எப்படிப்பட்டது என்றால், ஆயிரம் தாய் தந்தையருடைய அன்பை ஒரு சேர கொண்டு வந்து கொட்டினால் எப்படியோ... அதைக் காட்டிலும் அந்த சாஸ்திரம் மேம்பட்டது. சாஸ்திரப்படி நாம் நடந்து கொண்டோமானால், அதனால் வரக்கூடிய பலனை நாம் சொல்ல வேண்டியதில்லை.

சாஸ்திரம் பிசகாமல் வாழ்கிறவனை நோக்கி, எல்லா நலங்களும் பலன்களும் ஓடி வருமாம். அவன் செல்கிற இடங்களெல்லாம் சிறப்பு ஏற்படுமாம்.

'இதோ வருகிறாரே... பாருங்கள் பாருங்கள்...' என்று எல்லோரும் கொண்டாடுவார்கள்.

இதனால்தான் நமது சம்பிரதாயத்திலே ஞானத்தைக் காட்டிலும் ஆசாரத்துக்கு விசேஷ கௌரவம் தரப்பட்டிருக்கிறது.


எல்லா விஷயமும் தெரிந்த ஞானி... அவரைப் பார்க்கப் போனால், மத்தியானம் பன்னிரெண்டு மணிக்குத்தான் எழுந்து வருகிறார். பார்க்கப் போனவரோ, விடியற்காலை எழுந்து அனுஷ்டானத்தையெல்லாம் முடித்துக் கொண்டு வந்திருக்கிறார்.

'இவர் மகான் ஆயிற்றே... சேவிக்கலாம்....' என்று வந்தவருக்கு என்ன தோன்றும்? 'எல்லாம் தெரிந்தவர்... இவரே பன்னிரெண்டு மணிக்குத்தான் எழுந்திருக்கிறார் என்றால், நாம் நாளை முதல் ஒரு மணிக்கு எழுந்திருக்கலாமே என்று தீர்மானம் பண்ணி

7 குறையொன்றுமில்



லை



விடுவாரல்லவா...!

ஆகையினாலே, ஆசாரம் என்பதாக ஒன்று இருந்தால்தான் கட்டுப்பாடுடன் வாழ்க்கை இருக்கும். அதனால்தான் அவ்வளவு சாஸ்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ராமாயணத்திலே கூட வாலி ராமனைப் பார்த்து என்ன கேட்கிறான்...?

"எவனோ ராக்ஷஸன் தப்புப் பண்ணிவிட்டான் என்பதற்காக என்னை வந்து அடித்து விட்டாயே... உயர்ந்த கருணை உள்ளவன் என்று உனக்குப் பெயர் ஆயிற்றே? அந்தக் கருணையை மூட்டை கட்டி வைத்துவிட்டு, எங்கேயாவது அதை மொத்தமாய்த் தொலைத்து விட்டாயா? நான் என்ன தப்பு செய்தேன்? உத்தம குலத்தில் பிறந்த நீயே இப்படி தப்பு செய்தால் நான் என்ன செய்வேன்?"

- இப்படிக் கேட்கிறான் வாலி. 'ராமனே அப்படியிருக்கான்... நமக்கென்ன?' என்றொரு எண்ணம் வருகிறது பாருங்கள்!

உலக வழக்கமே அப்படித்தான்... புராணங்களில் உள்ள நல்லதைப் படித்துக் கொள்ள மாட்டார்கள்.... ஆனால் ஏதாவது ஒரு சிறிய கோணல் தென்பட்டால் கூட 'அவரே அப் படிச் செய்தாரே... நமக்கென்ன...' என்று சமா தானப்படுத்திக் கொள்வார்கள்.

அதனால்தான் ராமாயணத்தில் பரமாத்மா, பஞ்சவடியிலே அத்தனை அனுஷ்டானங்களையும் விடாமல் பண்ணினான்.

பிற்காலத்தில், 'ராமன் அனுஷ்டானமே பண்ணவில்லையே... பண்ணியிருந்தால் வால்மீகி ஓர் இடத்திலாவது சொல்லியிருக்க மாட்டாரா? அதனால் நாமும் பண்ண வேண்டாம்...' இப்படித் தீர்மானம் பண்ணிவிடுவார்கள் என்கிறதாலேதான் அனுஷ்டானத்துக்கு (சாஸ்திரத்துக்கு) பிராதான்யம் கொடுத்தான் பரமாத்மா.

ரிக் வேத ஸ்வரூபியாக பரமாத்மா இருக்கிறான்.

ஒரு ஊரிலே இருக்கிற ஒரு மரத்தின் இலையை அப்படி உலுக்கினால்... அல்லது காற்றுப் போய் மரத்தில் அடித்தால் ஒரு சப்தம் வருகிறது - அது என்ன சப்தம்...?

ரிக் வேதம் கேட்கிறது அந்தக் காற்றிலே... அந்த மரத்திலே!

காற்று வந்து மாலையிலே அடிக்கிறது. அந்தக் கல்லிலே மோதுகிறது. அப்போது அங்கே என்ன கேட்கிறது? கல்லிலே அடிபட்ட காற்று என்ன சப்தம்?

யஜுர் வேதம் கேட்கிறது அதிலேயிருந்து.

அலை அப்படி அடித்துக் கொண்டு வருகிறது... அலைகளில் என்ன கேட்கிறது?

ஸாம வேதம் கேட்கிறது.

வனம் இருக்கிறதே.... மட்டபல்லியிலே அங்கே, எங்கு பார்த்தாலும் அதர்வண வேதம் எதிரொலிக்கிறது.

வனத்திலேதான் எம்பெருமான் நரசிம்மன் பரத்வாஜ மஹரிஷிக்குப் பிரத்யக்ஷமாகக் காட்சி அளித்தார்.

உயர்ந்த அன்னமாச்சார்யார் கிருதியிலே பகவானின் காருண்யம் விவரிக்கப்படுகிறது.

'சேரி யசோதகி சிசு இதடு; அப்ரம்ஹகி தன்றி இதடு...' யாதவ குலத்துப் பெண்ணான யசோதைக்குக் குழந்தையாகப் பிறந்தவன்தான் பிரும்மாவுக்கும் தந்தையாக இருக்கிறான் என்பது பொருள்.

சாமான்யனாகவும் இருக்கிறான்; சதுர்முக பிரும்மாவுக்கு அப்பாவாகவும் இருக்கிறான். யாவும் தமக்குச் சமம் என்று காட்டுகிறான் அந்த அவதாரத்திலே...

சூரியனை யார் முதலில் பார்க்கிறார்களோ, அவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள். அவ்வாறு பார்ப்பவர்கள் யார் என்பதை வேதம் சொல் கிறது:

'பசுக்களைக் காக்கும்படியான யாதவ குலத்தவர்கள். அவர்கள்தான் உதய காலத்துக்கு முன்னரே எழுந்து பசுக்களையெல்லாம் ஓட்டிக் கொண்டு கானகத்துக்குப் போகிறார்கள். அதனால் சூர்யோதயத்தை முதலில் பார்க்கக் கூடியவர்கள் அந்த யாதவர்கள்தான். அவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள்...' என்கிறது வேதம்.


அப்புறம் ஸ்திரீகள் - கையில் குடத்துடன், பகவத் ஆராதனத்துக்குக் குளத்திலிருந்து ஜலம் கொண்டு போவார்கள். இவர்களும் சூர்யோதயத்தைப் பார்ப்பவர்கள்.

- இதிலே தர்மத்தையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் எழுந்ததும் சூரியனைப் பார்க்க வேண்டும்; பகவத் பூஜைக்கான ஜலத்தை நல்ல நீர் நிலையிலிருந்து கொண்டுவர வேண்டும்... இந்த தர்மங்கள் முக்கியம். யோகமெல்லாம் அப்புறம்தான்!

ஆக, கிருஷ்ணாவதாரத்தில், சூரியனை முதலில் பார்க்கும் குலத்திலே வளர்ந்தான் பகவான். ராமாவதாரத்திலோ, அந்த சூரிய குலத்திலேயே பிறந்தான். இது பகவான் காட்டித் தரக்கூடிய உயர்ந்ததான தர்ம சூக்ஷ்மம். அதை நாம் உணர வேண்டும். அதோடு, பகவான் சாமான்யனாகவும் இருக்கிறான். உயர்ந்த ரீதியிலும் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

ஆராய்ந்து பார்க்கும்போது, பரமாத்ம ஸ்வரூபமானது, மந்திர - மந்திரார்த்தங்களிலேயும் சாமானியம் - உயர்த்தி என்கிற ரீதியில் கலந்து, இழைந்து நிற்கிறது. அதனாலேதான் அதனைப் பெரியோர்களுடைய விசேஷமான அனுஷ்டானத்தின் மூலமாக நாம் கற்க வேண்டும் என்பது.

ஓம்காரத்தினுள் முதலாவதாக வரும் அகார ரூபமாய் விளங்குகிறவன் சாக்ஷாத்



''அந்த பைனான்ஸ் கம்பெனி தான் கரெக்ட்டா விளம்பரம் செஞ்சிருக்காங்க!''

''எப்படிச் சொல்றே?''

''மாதம் ரூ.-150 செலுத்தி, 10 மாதத்தில் ரூ. 2000 ஏமாறலாமாம்!''

— புளியரை கணேசன்

மட்டபல்லி லக்ஷ்மிநரசிம்மன். அவன் பரத்வாஜ மஹரிஷிக்குப் பிரத்யக்ஷமானான். - இது பிரும்மாவுக்குத் தகப்பனாய் இருந்தது போல் என்றால் யசோதைக்கு சிசுவான மாதிரி அங்கே காட்டில் வாழ்ந்த ஒரு எளியோனுக்கும் காட்சி தந்தான்.

கதை இதுதான்.

அந்த மட்டபல்லி பகுதியிலே காடுவாழ் மக்கள் அதிகம். அப்படி ஒரு காட்டு ஜாதியைச் சேர்ந்தவன், நிறைய அரிசி, பருப்பு, காய், பழங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மட்டபல்லிக்கு வந்திருக்கிறான். (அப்படி அவன் நடந்து வந்த ஒற்றையடிப் பாதை மட்டபல்லியில் இன்னமும் இருக்கிறது...)

அவன் வந்து சேரும் நேரத்தில் கோவிலைப் பூட்டிவிட்டார்கள். பூட்டிக் கொண்டு அர்ச்சகர்களெல்லாம் கிளம்பிப் போய்விட்டார்கள். வெளியிலே, கோவில் அருகே ஒரு மண்டபம் இருக்கிறது. அந்த மண்டபத்தில் வந்து உட்கார்ந்தான் முதியவன்.

'இனிமேல் காலை விடியும் நேரத்தில்தான் பகவானை சேவிக்க முடியும். அதிலும் நமக்கு முதலில் சேவை கிடைக்காது... விச்வரூபாதிகளெல்லாம் ஆகி, அபிஷேகம் ஆன பிறகுதான் பகவானை சேவிக்கலாம்...' இப்படி நினைத்து ஏங்கி, உருகினான் அவன்.

'சுவாமி உன்னுடைய தரிசனத்துக்கு வந்திருக்கிறேனே... மகா பாவியான எனக்கு அது கிடைக்குமா? நீ அனுக்கிரஹம் செய்யாவிட்டால் வேறு எங்கேயிருந்து அது எனக்குக் கிடைக்கும்? இப்படி காலாதீதமாக வந்திருக்கிறேனே... உன் தரிசனம் எனக்குக் கிடைக்குமா? எப்போது கிடைக்குமோ? தெரியவில்லையே....'

அந்த நேரத்தில் திடீரென்று அர்ச்சகர் வந்துவிட்டார். தோளில் சாவியைச் சாத்திக் கொண்டு வருகிறார் அவர்....

"வாப்பா! உள்ளே போகலாம். உனக்கு சேவை பண்ணி வைக்கிறேன்..." - அவனைக் கூப்பிடுகிறார். அவனும் எல்லா பொருள்களையும் எடுத்துக் கொண்டு உள்ளே போகிறான்.

கதவைத் திறந்த அர்ச்சகர், அரிசி, பருப்பு, எல்லாவற்றையும் எம்பெருமான் - அந்த மட்டபல்லி லக்ஷ்மிநரசிம்மனின் திருவடியிலே அப்படியே சேர்ப்பித்தார். ஆனந்தமாக, நிதானமாக அர்ச்சனை பண்ணினார். விசேஷமாக கற்பூர ஹாரத்தியெல்லாம் பண்ணி அவனுக்கு விசேஷமாக அனுக்கிரஹம் பண்ணினார்.

எல்லாம் முடிந்ததும் முதியவரைப் பார்த்து 'திருப்தி ஏற்பட்டதா?' என்றும் கேட்டார்.

"ரொம்ப திருப்தி!" என்றான் கிழவன்.

அவனை அழைத்துப் போய் மறுபடியும் மண்டபத்திலே இருக்க வைத்து, "நீ இப்போது எங்கேயும் போகாதே - இந்த இருட்டிலே கிளம்பினால் ஊர் போய்ச் சேருவது கஷ்டம். இங்கேயே படுத்துக்கொள். காலையில் எழுந்து போகலாம்" என்று சொல்லிவிட்டு அர்ச்சகர் புறப்பட்டுப் போய்விட்டார்.

கிழவனுக்கு ரொம்ப சந்தோஷம். 'இவ்வளவு கருணையோடு வந்து, இந்த அகாலத்திலே நமக்குச் சேவை பண்ணி வைத்தாரே...!' என்று வியந்து, அந்த ஆனந்த அனுபவத்திலேயே, அப்படியே படுத்துத் தூங்கிப் போய்விட்டான்.

மறுநாள் காலை ஆறு மணி... அர்ச்சகர் வருகிறார். "இங்கே எதற்குப் படுத்திருக்கிறாய் நீ...?" என்று அதட்டுகிறார்.

கிழவன் நடுங்கிப் போய்ப் பார்க்கிறான்...

"போ, போய் ஸ்நானம் பண்ணிவிட்டு அப்புறம் வா...." விரட்டினார் அர்ச்சகர்.

விரட்டிவிட்டு உள்ளே போனவர் விக்கித்துப் போனார்! அழகாக ஜொலித்துக் கொண்டிருந்த பெருமாளின் முன்னால் அரிசியாகக் கொட்டிக் கிடக்கிறது; ஒரு பக்கம் பழமாக அடுக்கியிருக்கிறது-- இன்னொரு பக்கம் பருப்புக் குவியல்!

"இதெல்லாம் எப்படி...? யாரு...?"

- அர்ச்சகர் மனத்தில் கேள்வி எழுந்த போதே கண்முன் ஒரு தோற்றமும் எழுந்தது. அந்தத் தோற்றம்.. வெளியே மண்டபத்திலே பார்த்து, தாம் மிரட்டிய முதியவரின் தோற்றம் என்பதை உணர்ந்தார். பெருமாள் முன்னிலையிலேயே தெரிந்தான் கிழவன்!

அந்தக் காட்சியைக் கண்டதும் நடுநடுங்கிப் போனார் அர்ச்சகர்.

கோவிலை விட்டு வெளியே ஓடினார். கிழவன் கிருஷ்ணா நதியிலே இறங்கி ஸ்நானம் பண்ணிக் கொண்டிருக்கிறான். ஓடிப் போய் அவன் கால்களில் விழுகிறார்.

"அப்பா! நான் நித்யம் பூஜை பண்ணுகிறேன். அந்த மட்டபல்லி லக்ஷ்மிநரசிம்மனைத் தொட்டு நித்ய பூஜை பண்ணும் எனக்கு ஒரு நாளும் தரிசனம் கொடுக்கவில்லை.... ஆனால், உனக்காக அவன் வந்து, தனக்கு வேண்டியவற்றையெல்லாம் தானே கேட்டு வாங்கிக் கொண்டிருக்கிறான். தானே அர்ச்சனை பண்ணி தன்னுடைய திருவடியிலே உன்னைச் சேர்த்துக் கொண்டானே..." என்று உருகினார்.

அந்த பகவானுடைய காருண்யத்தை நாம் இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும்.

(தொடரும்)

நீரோடை கீழே ஓடியது. அவ்வளவு தூரமில்லை.

நாற்பதடி தொலைவு. மனோகர் நின்ற இடத்தில் கூழாங்கற்களின் மீது தண்ணீர் பாடிக் கொண்டு போயிற்று.

ஆனால் எரிந்து கொண்டிருந்த குமாரசாமியின் குடிசை ஒரு சிறு குன்றுக்கு ஏறுகிற மேட்டின் முதல் மடிப்பில் எரிந்தது.

மேகம் இல்லாத வானில் களித்துச் சிரிக்கிற நிலா வெளிச்சத்தில் நீலமும் இளமஞ்சளுமாக நாட்டிய மாடும் தீ ஜ்வாலைகள். இவற்றிடம் இரக்கம் எதிர்பார்க்கலாமா?

தீயணைக்க, மேட்டிலிருந்து காலிப் பானை நாற்பதடி இறங்கி, கனத்தோடு நாற்பதடி ஏற வேண்டும்.

மேட்டின் முதல் மடிப்பு மிகவும் நெட்டு. இறங்கி வரும்போது திடுதிடுவென்று ஓடிவரலாம். ஏறும்போது வேகம் சாத்தியமில்லை. எல்லோருக்கும் மூச்சு வாங்கியது.

அக்கம் பக்கத்துக் காட்டு வாசிகள் ஐந்தாறு பேர். ஒரு ஒடீ தன்னி ஆட்டுப்பட்டி போட்டிருந்த இரண்டு மூப்பர்கள். மூங்கில் வெட்டுக்கு வந்திருந்த நாலைந்து பெண் ஆட்கள்.

தண்ணீர் தூக்க ஆட்களுக்குப் பஞ்சமில்லை. முகக்கிற பாத்திரங்கள்தான் பஞ்சம்.

மூன்று பானைகள். கைக்குக் கை மாறும்போது ஒரு பானையின் கழுத்து இற்றிருந்ததால் கழன்று போய் கையோடு வர பானை தூள் தூளாயிற்று.

இரும்பு வாளி ஒன்று. பெண்களால் தூக்க முடியாத பெரிய பித்தளை அண்டா. சில சில்லறைச் சாமான்கள்.

தீப்பிடித்ததும் முதலில் எங்கும் ஏற்படுகிற திக்பிரமை. என்ன செய்வதென்று விளங்காமல் அங்குமிங்கும் ஓடியாடிப் பரிதவிக்கிற அலைச்சல்.

மனோகர் குடிசைத் திண்ணையில் படுத்திருந்தான். குமாரசாமி எதிர்த் திண்ணையில். இருவரும் குதித்து வெளியே வந்தனர்.

அதற்குள் சரசரவென்று தீ நடுக்கூரைக்கு ஏறி விட்டிருந்தது.

தீ வெளிச்சம் இருவர் முகத்திலும் ஆடி அலைக்கழிந்தது.

ஒரு விநாடியில் குமாரசாமி முகம், அவன் கண், மனோகருக்குள் ஒரு கருவேல முள் இறங்கிய இம்சையை ஏற்படுத்திற்று.

என்ன நிராதரவு!

உண்மையில் அதுதான் மனோகரை அதிவேகமாக இயக்கிற்று.



அங்கே கூடிய சிறு கூட்டம் தத்துப்பித்தென்று தீயணைக்க என்னமோ செய்தது. இரண்டு பேர் யானை

தீயணைப்பு

வையவன்

களோடு மேட்டிலிருந்து இறங்கிவிட்டனர்.

மனோகரின் மூளை சுத்தமாக விழித்துக் கொண்டது.

"இருக்கற பாத்திரத்தை எடுத்துட்டு வாங்க. மொத்தப் பேரும் எறங்கி ஓடியார வேணாம்! எம்மா... நீ கீழே நில்லு... சுப்புணி நீ மேலே நாலடி தள்ளி நில்லு. மத்தவங்க வரிசையா நாலடி நாலடி தள்ளி நில்லுங்க. நான் தண்ணியை மொகந்து மொகந்து வக்கிறேன், கை மாத்தி மாத்தி அனுப்புங்க."

மனோகரின் ஏற்பாடுதான் தீயணைக்கிற ஆட்களை ஒழுங்கு வரிசை செய்து, ஏணிப்படி மாதிரி தள்ளித் தள்ளி நிற்க வைத்தது.

நீரோடையில் இருந்து ஒரு பாத்திரத்தை நிரப்பி வைப்பதற்குள் காலிப் பாத்திரம் கை மாறி மாறி அவனிடம் வந்தது.



யந்திர வேகத்தில் தான் இயங்குவது அவனுக்கே விந்தையாக இருந்தது.

பாத்திரங்களை நிரப்பித் தூக்கி அனுப்பு கையில் அவ்வப்போது மனோகரின் பார்வை, தீயின் அணைய மறுக்கும் வெறி நாட்டியத்தைப் பார்த்தன.

'அணைக்க முடியுமா?'

முடிய வேண்டும்.

அணைத்தே தீர வேண்டும்.

காற்று உக்கிரமானால் போதும். நாலு பொறி பறந்தால் சரி. பக்கத்தில் மூங்கில் காடு. பற்றிக் கொள்ளும். வாரக் கணக்கில் எரியும்.

தானே அணைகிறவரை எவராலும் அணைக்க முடியாதவாறு எரியும்.

பானை, வாளி, அண்டா... குண்டா.

கை சோராமல் நிரப்பி நிரப்பித் தூக்கி விடும்போது, வேகம் திமுர் திமுரென்று புதுப்பித்துக் கொண்டது.

குமாரசாமியின் பெண் டாட்டி பிள்ளைகள் உறவுக்காரர் கல்யாணத்துக்காகச் சேலம் போயிருந்தனர்.

அவர்கள் திரும்பி வரும்போது பார்க்க ஏதாவது மிச்சம் வைக்க முடியுமா?

கிணுக்கென்று அவனுக்குள் ஒரு பூட்டு திறந்து கொண்டது. கை ஓட ஓட மனமும் ஓடியது.

குமாரசாமி பாவம்! லாரி ஏறி வர முடியாத இந்த நடுக்காட்டில், மூங்கில் வெட்டுக் கூலியாட் களிடமும், காட்டுவாசிகளிடமும் பீடி புகையிலை உப்புக்கடலை, எண்ணு குண்டை என்று சில்லறைச் சாமான்கள் விற்று ஒரு பிழைப்பு. ஒரு குடிசை.

சமயத்தில் அவனும் மூங்கில் வெட்டுக்குப் போவான். காட்டுப்புளி ஏலம் எடுத்தவர்களுக்காகக் கழுதைச் சுமை ஓட்டி வருவான்.

ஒரே ஊர். ஒரே கீற்றுக் கொட்டகைப் பள்ளிக்கூடம். ஒரே ஓட்டைப் பெஞ்சு.

தன் தலையில் ஏறிய நாலு எழுத்து அவன் தலைக்குள் நுழைய மறுத்து விட்டதே!

"பெரிய அண்டாவைப் பொம்பளை ஆள் தூக்க முடியுமா? ஐயா, சுப்புணி நீங்க பாத்துட்டு நிக்கிறீங்களே" என்று மனோகர் சத்தம் போடவும் பெண் ஆள் ஒதுங்கி பானையை எடுத்துக் கொண்டாள்.

மனசு மீண்டும் நினைவு நீச்சலுக்குத் தாவிற்று.

'ஆமாம் எழுத்து தலையில் ஏறி என்ன சாதித்து விட்டோம்! வெள்ளையும் சள்ளையுமாய் ஏஸி ரூமில் உட்கார்ந்து பதினஞ்சு வருடம் சம்பாதித்ததை எவனோ பண்ணிய விளம்பர கோல்மாலில் மகாப் பெரிய ஃபைனான்ஸ் கம்பெனி என்று போட்டோம். பளீரென்று பட்டை நாமம்!'

பதினைந்து வருடம் சம்பாதித்தது ஒரு பொழுது விடிந்ததும் பொக்கென்று போய் விட்ட என்ன சூன்யம் அது? மனசின் வெறுமையைப் போக்க வந்த இடத்தில் இப்படி!

குமாரசாமி தலையில் அந்த எழுத்து ஏறியிருந்தால்?

மனசு இடக்கு வெட்டிற்று.

எல்லாம் போண்டியான மன உளைச்சலை வந்து கொட்டிக் கொள்ள இப்படி ஒரு இடம் இருந்திருக்கிறது.

குமாரசாமி கூட பைனான்ஸ் கம்பெனி தகிடுதத்தத்தில் சிக்கி விட்டிருப்பான்!

வாலறுந்த நரிப் பாணியில் ஓடிய மனசே ஒரு குட்டுப் போட்டது.

சீச்சீ... இல்லை. மாட்டான்.

குமாரசாமி விவேகி.

"மனோ.... நல்ல காத்து... நல்ல தண்ணி... வயிறு காயப்படாது. படுத்தா தூங்கிடணும். பொழுது மொளைச்சா பளிச்சுனு தெம்போட வேலைக்கு எழுந்துக்கணும் இது இருக்குப்பா. இது போதும்."

யோசிக்கும் வேலையில் பசி தீர. உண்பதும் உறங்குவதுமாக முடியும் என்று தாயுமானவரில் படித்தது கவனம் வந்தது.

குமாரசாமி உபதேசிக்கவில்லை. தனக்கு வரைந்து கொண்ட வட்டத்தைச் சொன்னான். உண்மை பேசினான்.

படிக்காதவனின் வட்டமா அது?

அதென்ன வட்டம், செக்குமாட்டு வட்டம்!

"அந்தச் சின்னப் புள்ளைகிட்டே வாளியைக் கொடுக்காதீங்க. அது தடுமாறுது. ஏற்கெனவே பானை ஒண்ணு போயிட்டுது. வேகமா மாத்துங்க. காத்து திரும்பிடும் போல இருக்கு."

காற்று திசைமாறுவதற்கு யோசிப்பது போலிருந்தது. தெற்கிலிருந்து தென்கிழக்கே திரும்பினால் நம்பிக்கை போய்விடும்.

மனோகர் குடிசைக்கு மேலே உயர்ந்திருக்கிற தீயைப் பார்த்தான்.

எவளோ ஒருத்தி தலை முழுகிக் கூந்தலை ஆற்றுவது போல ஜ்வாலை பின்னிட்டுப் படர்ந்தது. காற்று கத்திரிக்குச் சாணை பிடிப்பவன் பொறி போல் அதைத் துரத்த முயன்றது.

நம்பிக்கை?

அந்தத் தீக் கொழுந்துகளுக்கும் மூங்கில் காட்டுக்கும் இடையே ஒரு காற்றுக் கூடாரத்தில் அது... அதுதான் நம்பிக்கை. கன்னத்தில் கை வைத்துப் படுத்திருப்பது மாதிரி ஒரு மனக் காட்சி எழுந்தது.

எல்லா வட்டமும் ஒரு நம்பிக்கை வட்டம் தான். அதை உடைத்துப் போடுகிற ஒரு பெரிய வட்டம் கூட ஒரு நம்பிக்கைதான்.

நான் பைனான்ஸ் கம்பெனியில் ஏமாந்தது மாதிரி, பாவம் குமாரசாமி! இப்போது... இல்லை... இனி என்ன செய்வான்?

சிந்தனைப் போக்கில் மனம் அபாய விளிம்பில் விழப்போவதை அறிவு இழுத்துப் பிடித்தது.

ஒடுங்கிக் குறுகி, கைகட்டி வாய் பொத்தி உழக்கிற்குள் கிழக்கு மேற்குப் பார்க்கிற வாழ்வு ஒரு வாழ்வா?

வாழ்க்கையென்றால் கொஞ்சம் ரசம் வேண்டாமா? ஜெயிப்பது தோற்பது இருக்கட்டும். ஒரு முயற்சி இல்லை ஒரு சாகசம் வேண்டாமா?

இப்படிக் காட்டுக்குள் வந்து ஒரு குடிசை போட்டு நரியும் ஓநாயும் போடுகிற ஓலத்தில் ஒரு லயம் வந்து, கடைசியில் இப்படி அதற்கும் ஒரு முடிவு வந்து....

சட்டென்று தண்ணீர் சுமப்பவர் வேகம் மட்டுப்பட்டது.

"என்னம்மா... கால் நோகுதா... மந்த நடை போடறீங்களே!"

"இல்லீங்க ஐயா... தீ அவிஞ்சு போச்சு."

மனோகர் நிமிர்ந்து பார்த்தான்.

குடிசையின் கூரை இருந்த இடத்தில் புகை மண்டலம் எரிந்து கருகிய ஏமாற்றங்களின் கையொப்பங்கள் போல.

உடைந்து நொறுங்கி விட்டிருக்கிறது அவன் போட்ட சிறிய வட்டம். அதன் சிதிலங்களில் இருந்து குமாரசாமி எழுந்திருப்பானா?

இனிதான் தெரியும்.

தனக்கு பைனான்ஸ் கம்பெனி ஒரு மோசடி என்று தெரிய வந்த நாள் நினைவு வந்தது.

மனோகர் அன்று முழுவதும் நடைப் பிணமாய் இருந்தான். செய்தியைப் படித்து விட்டு ஓவென்று புலம்பிய மனைவியும் பெண்ணும் அவனைக் கடியத் தொடங்கி, ஒரு கட்டத்தில் அவன் முகத்தில் நிலவிய சூன்யத்தில் பயந்தனர்.

நிறுத்திக் கொண்டனர்.

அலுவலகத்தில் துக்கம் விசாரிக்க முயன்றவர்கள் கூட ஒரு நிலையில் மௌனமாயினர். ஓரிருவருக்கு பயம். வீட்டில் தெரிந்த அதே பயம்.

அன்று மாலை அவன் கடற்கரைக்குப் போனான். வழக்கத்திற்கு மாறாக.

அலைகளைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். இருட்டியது.

தலைக்குக் கீழே, கொடுங்கை வைத்துப் படுத்தான். கூட்டம் துளித்துளியாய்க் கரைந்து அவன் ஒற்றை ஆளாகப்படுத்திருக்கிற தனிமை.

மோசம் போன துக்கம், புண்ணை மொய்க்கிற ஈக்கள் போல பிய்த்துப் பிடுங்கியது. ஒரு நேரத்தில் எழுந்தான். மணலை உதறினான்.

தன் ஏமாளித்தனத்தை சகிக்க முடியவில்லை. பித்தலாட்டமும் பொய்மையும் அதோ அலைகள் போல கைகொட்டிச் சிரித்தன.

பேசாமல் தற்கொலை செய்து கொண்டால் என்ன?

அந்த யோசனை எழுந்தபோதே திடீரென்று ஒரு விசில் ஓசை.

"யோவ்... யாருய்யா அது?"

மனோகர் திரும்பிப் பார்த்தான்.

தூரத்தில் வேறு யாரையோ காவலர் மிரட்டினர்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

ச்சே... என்ன முட்டாள்தனமான நினைப்பு!

அந்த அகாலத்தில் பஸ் இல்லாததால் வீடு வர ஆட்டோ செலவு தொண்ணூற்று ஐந்து ரூபாய்.

தலைக்கு மேல் போயாச்சு.



"ஜர்னலிசம் படிச்சுட்டு ஹோட்டலில் வேலை செய்யறியா?"

"ஆமாம்; அந்த ஹோட்டல் பேப்பர் ரோஸ்டை நான்தான் எடிட் செய்யறேன்!"

– பாலா

சாண் என்ன முழம் என்ன?

ஒரு வாரம் எங்கேயாவது ஓடிப் போனால், துரத்தித் துரத்தி விரட்டும் குளவிக்கூட்டம் போன்ற கையறு நிலையிலிருந்து கொஞ்சம் தப்பித்தால்....

குமாரசாமியை சால்ட் கோட்டர்ஸ் பார்ஸல் ஆபீஸில் தற்செயலாகச் சந்தித்தது நினைவு வந்தது.

அந்தியூர் மலைக்கிராமம். தான் சௌக்கியமாய் இருப்பதாக அவன் சொன்ன திருப்தி.

ஓர் இடம். ஓடிச் சொற்ப காலம் அடைக்கலம் புகலாம்.

ச்சே வெறும் பணம்! அது என்ன பாடு படுத்தி விட்டது. இங்கே குமாரசாமி நிலை? எப்படி மீள்வான்?

தனக்கு பிளாட் இருக்கிறது. வேலை போய் விடவில்லை. மனைவியின் செக்ரட்டேரியட் உத்தியோகம். அவன் வீடு கட்ட லோன் போட்டு சாங்ஷன் ஆகிவிட்டது.



''கண்ணே நாளைக்கு ராத்திரி நாம ரெண்டு பேரும் வீட்டை விட்டு 'நடந்து' போவோமா....?


— நெற்குப்பை சி. மனோகரன்



"லாட்டரியிலே லட்சம் விழுந்திருக்குன்னு சொல்றீங்க... முகத்தில் சந்தோஷத்தையே காணோமே?"

"விழுந்தது என் சீட்டுக்கில்லையே...!"

— சுமதி சண்முகசுந்தரம்



''எங்கப்பாவை லட்சாதிபதி ஆக்கறது தான் என்னுடைய ஒரே லட்சியம்!''

''இப்ப என்னவா இருக்கார்?''

''கோடீஸ்வரரா இருக்கார்!''

— சீர்காழி வி. கௌரி

குமாரசாமி. நீ ஊரை விட்டு வந்து என்ன சம்பாதித்தாய்? என்னென்ன இழந்தாய்?

இது என்னடா யுத்தம்! நம்பிக்கைக்கும் விரக்திக்கும் இடையிலா? ஆசைகளுக்கும் மோசடிகளுக்கும் இடையிலா?

அவன் ஆமை போல் படுத்திருந்த பாறை முதுகில் உட்கார்ந்தான்.

பாத்திரம் பாத்திரமாகத் தண்ணீரை மொண்டு அனுப்பிய கைகள் சலித்தன. வெறுங்காலில் கூழாங்கற்கள் மீது நின்ற கால்கள் உறுத்தின.

மனோகர் கால்களை மெதுவாய் ஓடும் நீரில் அளையவிட்டான்.

நீரோடையில் நீர்த்திவலைகள் சிதறின. வெள்ளிக்காசை வாரியிறைத்தது போல.

வருடக்கணக்காக, ஏன் நூற்றாண்டுக் கணக்காக அந்த நீரோடை நடக்கிற எல்லா யுத்தங்களுக்கும் மௌன சாட்சியாக ஓடுவது போல் தோன்றிற்று.

வெல்கிறாய் தோற்கிறாய். வெல்கிறாய் தோற்கிறாய்.

நீரோடை எந்தெந்த அசட்டுத்தனங்களையோ பார்த்து உல்லாசமாக ஓடிக் கொண்டிருந்தது.

திடீரென்று அவன் எழுந்தான்.

உடனே போக வேண்டும். குமாரசாமியைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். விடிகிற வரை அவனைக் கண்காணிக்க வேண்டும்.

கல்யாணத்துக்குப் போன குடும்பம் திரும்பும் வரை கூட இருந்து, தேவைப்பட்டால் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போய் சில நாள் சென்னையில் வைத்திருக்க வேண்டும்.

அவன் மேடு ஏறும் போது எதிரில் தீயணைக்கத் தண்ணீர் சுமந்த பெண்கள் எதிர்கொண்டு இறங்கினர்.

மனோகருக்கு வழிவிட்டு விலகினர்.

அவன் நடந்தான்.

கீழே இறங்கி நடக்கும் பெண்களின் பேச்சுக்குரல் தெளிவாய்க் கேட்டது.

"அம்மாடி... மனுஷன் 'இல்லான ஆளுடி பொன்னாத்தா... எங்க வூட்டுக்காரர்னா பொம்பளை மாதிரி கதறிட்டிருப்பாரு! என்னா வெறைப்பா நிக்கறாரு மனுஷன்."

"வாய்ச்ச பொண்டாட்டியும் ஓரமாவை. நீ வேணா பாரேன்... எண்ணிப் பத்து நாள்ல இங்கே குடிசை ஏறி நிக்கிலே.. நான் எம் பேரை மாத்திக்கிறேன்."

மனோகர் மேடு ஏறியவாறே திரும்பிப் பார்த்தான்.

பெண் ஆட்களின் தலைகளைக் கடந்து நீரோடை ஓடுவது தெரிந்தது. அது அவ்வளவு தூரமில்லை. மேலே பார்த்தான். புகை மண்டலம் முற்றிலும் நீங்கி விட்டிருந்தது.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1997

கல்கி விலை உட்பட விலைவாசியெல்லாம் எக்கச்சக்கமாக ஏறிவிட்டது! சிறுகதைப் போட்டிக்கான பரிசுத் தொகை மட்டும் ஏறாவிட்டால் எப்படி? ஆகவே

முதல் பரிசு :
ரூ. 2500

இரண்டாவது பரிசு :
ரூ. 2000

மூன்றாவது பரிசு :
ரூ. 1500

ஆக மொத்தம் ரூ. 6000 பரிசுகளாக வழங்கப் பெறும்.




தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 200 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு!

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும் இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி : ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலை ஒட்டிய, சுயவிலாசம் எழுதிய உறையைக் கதையுடன் கூடவே அனுப்ப வேண்டும். பின்னால், தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள், கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் இடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 8 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.



யாருக்கு சாமர்த்தியம்?

இங்கிலீஷ்காரர், ஸ்காட்லாந்துக்காரர், அயர்லாந்துக்காரர் என மூன்று பேர் நண்பர்கள். மூவருக்கும் நண்பனான ஒருவன் திடீரென்று இறந்து விட, அவனது நல்லடக்கத்திற்குச் சென்றனர். சவப்பெட்டியை மூடும் சமயம், அந்த நாட்டு வழக்கப்படி ஏதாவது பணம் போட வேண்டும். அதை நினைத்து இங்கிலாந்துக்காரர் ஒரு ஐந்து பவுண்ட் நோட்டைப் போட்டார். ஸ்காட்லாந்து நண்பரிடம் ஐந்து பவுண்ட் இல்லாததனால் பத்துபவுண்ட் நோட்டைப் போட்டுவிட்டு, ஐந்து பவுண்ட் நோட்டை எடுத்துக் கொண்டார். அயர்லாந்து நாட்டு நண்பரோ செக் புத்தகத்தை எடுத்தார். பதினைந்து பவுண்டுக்கு செக் எழுதிப் போட்டுவிட்டு, பத்து பவுண்ட் நோட்டை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டார்!

தகவல்: கே.ஆர். உதயகுமார்

“ஐயா இப்படி திடீர்னு போயிட்டாரே...”

வெளியே பண்ணையாட்கள் திமுதிமுவெனக் குழுமிவிட்டார்கள்.

தலைமாட்டில் உட்கார்ந்திருந்த கனகம் நரைத்த முன்முடியை ஒதுக்கிக் கொள்கிறாள். நெடிய உருவமாய் கண் மூடிக்கிடக்கிறார் ராஜாங்கம். இனி இவளை உருட்டு விழியாலும் உறுமலாலும் அச்சுறுத்த மாட்டார்.

தீனமான அழுகுரல் ஒன்று தனியாகக் கேட்டது. வராந்தாவின் மூலையில் குன்றிப் போய் உட்கார்ந்திருந்த உருவம் கண்ணில் பட்டது.

லட்சுமியா அது? கண் சுருக்கிப் பார்க்கிறாள் கனகம். லட்சுமியேதான். பார்த்துப் பல வருஷமாச்சு. உழைப்பிலே கடைந்தெடுத்த உருவமாய் எப்படி இருப்பாள்?

ராஜாங்கம் ஊரில் இல்லாத ஒரு நாளில் பண்ணையாட்கள் கூலிவாங்க வீட்டுக்கே வந்தபோதுதான் கனகம் அவளைப் பார்த்தாள்.

வரிசையில் தன் முறைக்காகக் காத்திருந்தவள், தடாலென இவள் காலில் விழுந்து, "அம்மா என்னை மன்னிச்சுக்கங்கம்மா" என்று கதறிய விநாடியில் எல்லாம் புரிந்து போயிற்று.

கனகத்துக்கு இது ஒன்றும் புதிய விஷயமில்லை. தெற்குத் தெருவிலே சில வீடுகளுக்கு இவளது கெம்புக்கல் அட்டிகையும், வளையல்களும் சமர்ப்பணமாகியிருக்கிறது. அவர்களின் சாகசமெல்லாம் இந்த லட்சுமிக்கு வராது. பாவம், இந்த குடியானவப் பெண். எஜமான் என்பதால் எதிர்ப்புத் தெரிவிக்க பயந்திருப்பாள்.

விஷயம் ஊகித்தாயிற்று. லட்சுமியின் வாழ்க்கை எந்த மாற்றமும் காணவில்லை. தன் உழைப்பை நம்பி வாழும் தனிக்கட்டை வாழ்க்கை.

“எப்படி அழுறா பாரு! ஏதோ இவ கூட குடித்தனம் பண்ணினாப்போல!" - கனகத்தின் காதில் விழ வேண்டும் என்றே உரக்கச் சொன்னாள் பவானி.

மகன்கள் சரவணனும் மோகனும் லட்சுமியை எரிச்சலுடன் பார்த்தார்கள். இவள் அவர்களின் கண்களைச் சந்திக்க நேரிட்ட போது, அதிலிருந்த கடுமை தாக்கியது.

"இப்படி அழாமல் இடிச்சப்புளி மாதிரி உட்கார்ந்து எங்க மானத்தை வாங்கறியே" என்று பார்வைகள் குற்றம்சாட்டின.

எப்படி வரும் அழுகை? எத்தனை ருத்திரதாண்டவங்களைப் பார்த்திருப்பாள்! நண்டும் சிண்டுமாய் நின்றதுகளைக் கரையேற்ற எத்தனை பாடுபட்டிருப்பாள்?

மகள் பவானியின் கல்யாணத்தில் சம்பந்திகளைப் பற்றியா கவலைப்பட்டாள்? முறைத்துக் கொண்டு நின்ற ராஜாங்கத்தை எப்படிச் சமாளித்து சபை கெடாமல் காப்பாற்றுவது என்றல்லவா திணறிப் போனாள்?

சரவணனுக்குப் புனிதாவையும் புனிதாவுக்கு சரவணனையும் பிடித்துப் போன விஷயம் இவளுக்குத்தான் முதலில் தெரியும். பெண் வீட்டிலிருந்து வந்தவர், கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து விட்டார் என்று எத்தனை ரகளை செய்தார்! நின்று போன கல்யாணப் பேச்சைத் தொடர வைக்க எவ்வளவு சாகசம் செய்ய வேண்டியிருந்தது!

பாரதி

சுயம்

ஆமாம் சாகசம்தான். தன் குழந்தைகளின் வாழ்க்கைப் பிரச்னையில் கூட தன்னையே முன்நிறுத்திக் கொண்டு மூர்க்கம் காட்டுபவரைச் சமாளிக்கிற சாகசம்!

'உங்களைக் கேட்டுக்கிட்டு சொல்லலாம்னு இருந்தேன்; உங்களுக்குப் பிடிக்குமேன்னுதான்... நீங்க செய்தா சரியாத்தான் இருக்கும்' என்று தானும் இவரையே முன்நிறுத்தி பதாகை பிடித்து காரியம் சாதித்த சாகசம்! தெற்குத் தெரு பெண்களைச் சொல்வானேன்? இவள் பிழைப்பு மட்டும் வேறென்ன?

இப்படித்தான் தம்பி கோபுவிடம் ஒருநாள் சொல்லப் போக, அவனுக்குக் கோபமே வந்துவிட்டது.

"யாரோட உன்னை ஒப்பிட்டுக்கறே? நீ உன் குடும்பத்துக்காக, புருஷனை அனுசரிச்சு நடந்துக்கற. இதுவும் அதுவும் ஒண்ணா?"

கனகத்தின் அக்கா கூட இவளின் ஆதங்கத்தை ஏற்கவில்லை. "நூத்துக்குத் தொண்ணூறு பெண்கள் இப்படித்தான் வாழறாங்க. நீ சொல்றியே சமாளிக்கிற சாகசம்னு, இதையே தங்களோட சாமர்த்தியமா, சாதனையா நினைக்கறாங்க. உன் பார்வைலதான் கோளாறு."

எத்தனை சமாதானம் சொன்னாலும் இவளுக்குத் தன் வாழ்க்கையைப் பற்றி பெருமைப்பட்டுக் கொள்ள முடியவில்லை. 'ச்சே!' பாவனைகள் நிறைந்த ஈனப் பிழைப்பு!' நெஞ்சில் கரித்துக் கொண்டு வந்ததை கஷ்டப்பட்டு விழுங்கினாள்.

லட்சுமியின் அழுகுரல் ஓய்ந்ததாகத் தெரியவில்லை. விசித்து விசித்துத் தொடர்ந்தது. ஏன் இவள் அழுகிறாள்? சாவு என்றால் அழவேண்டியது ஒரு மரபு என்பதாலா? இறந்தவருக்காகவா? இல்லை தனக்காகவா? இந்தச் சாவுச் சம்பவம் அவளது சொந்த துயரத்தைக் கிளறி விட்டிருக்குமோ? தன் இழப்புகளுக்காகத்தான் இப்படி அழுகிறாளோ? கனகத்தின் மனம் கசிந்தது.

யார் யாரோ வருகிறார்கள். கூட்டம் நிறைய ஊர்ப் பெரிய மனிதர்கள். பிள்ளைகளிடம் துயரம் விசாரித்துவிட்டு சம்பிரதாயமாய் இவளை நெருங்கி சங்கடத்துடன் ஒருபக்கமாக ஒதுங்கி நிற்கிறார்கள்.



சரவணனுக்கும் மோகனுக்கும் முகம் இறுகிக் கிடக்கிறது. கனகத்தின் அக்கா அருகில் வருகிறாள். கையில் காப்பி தம்ளர்.


"இந்தா கனகம், ஒருவாய் காப்பியாவது சாப்பிடு. அவருக்கு வேளை வந்திருச்சு. போயிட்டாரு. பிள்ளைகளுக்கு இனிமே எல்லாம் நீதானே! அவுங்களுக்காகவாவது தேத்திக்க. காலையிலிருந்து பல்லுல ஈரம்படாம உட்கார்ந்திருக்கே."

'இல்லையே! காலைல காபி சாப்பிட்டேனே' என்று சொல்லவந்தவள், அக்காவை ஏறிட்டாள். சூழ்நிலையை ஒப்பேற்றுகிற வார்த்தைகள்! கெஞ்சுகிற கண்கள்! சாப்பிடம்மா, என்று சரவணனும் ஒப்புக்குத் தேற்றினான்.

மௌனமாக காப்பி தம்ளரை வாங்கிக் கொண்டாள் கனகம். உடம்பின் ஒவ்வொரு அணுவும் எதிர்ப்புத் தெரிவித்தது. இல்லை. இனி யாருக்காகவும் பாவனைகள் வேண்டாம்!

அவள் மெல்ல எழுந்து வராந்தா பக்கம் போனாள். மூலையில் அழுது கொண்டிருந்த லட்சுமியிடம் காப்பித் தம்ளரை நீட்டினாள்.

'கால் இல்லாத மான்
வேரில்லாத புல்லைத்
தானே தின்னும்?
எனக்கும் அதுதான்
நிலை
என்பது தெரியாதா?'
— கனகா கேட்கிறாள்.



இந்திரா சௌந்தர்ராஜன்

தாமுவின் முடிவால் விதிர்த்துப் போனவர்கள் நெடுநேரம் வரை ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு, அவன் முடிவுக்குச் சம்மதம் தர தயங்கித் தயங்கி நிற்கிறார்கள்.

"டேய் ரொம்ப பயமா இருக்குடா... விவகாரம் பெரிசாயி மதக்கலவரமாவே ஆயிட வாய்ப்பு இருக்குடா." மணியம் மிடறு விழுங்கிச் சொல்வதை "ஆமாம் தாமு, வேற வழி இருக்கா, பார்" என்று படல் கட்டுகிறான் ரேஷன் கடை ஜான் ஆசீர்வாதம்.

"வேற வழி இருக்கு... ஆனா அதுல வழக்கம் போல அந்த மோகன் எழுந்திரிச்சு வந்துடுவான். கிழவனை உள்ள வெச்சாத்தான் நாம நம்ம காரியத்தைப் பண்ணவே முடியும்."

"நீ பண்ணு தாமு... இவங்க கிடக்கறாங்க! கிழவனை உள்ள வெச்சே தீரணும். என்ன ஆனாலும் சரி..." – விரைத்துக் கிடந்த ஜவஹர் பாபு சிலிர்த்து எழுந்து கத்துகிறான்.

"என்னை பண்ணச் சொல்லிட்டு நீங்க விரல் சூப்பிக்கிட்டு நின்னுடக் கூடாது. உங்களுக்கெல்லாமும் ஆளாளுக்கு ஒரு வேலை இருக்கு..."

"டேய்... முதல்ல நீ சொன்னதைச் செஞ்சு கிழவனை உள்ள தள்ளு. அப்புறமா அடுத்ததப்



பத்தி பேசுவோம்..."

"ஆமா இன்னிக்கு வீதில என்ன பட்டிமண்டபமா?"

"ஆமா... 'வாழ்க்கைல முன்னுக்கு வர உதவியா இருக்கறது வாய்ப்பா - உழைப்பா'ன்னு ஒரு புடலங்கா தலைப்பு..."

"சாராயம்தான்னு தெரிஞ்சும் என்ன மாமா இது பெனாத்தல்?"

"அது நமக்குடா முட்டாப் பயலே... எல்லாரும் சாராயத்தால முன்னுக்கு வந்துட்டா, அப்புறம் நாம எங்க போய்டா விக்கறது?"

"அப்ப நாளைக்குத்தானே சிலம்பம்?"

"ஆமாண்டா.... இங்க மோகன்ராமை நான் சுருட்றேன். அங்க நீ கிழவனைச் சுருட்றே."

மணியம் முற்றுப்புள்ளி வைக்கிறான். ஜான் ஆசீர்வாதம் மட்டும் உள்ளூர நடுங்கிக் கொண்டே இருந்தான்.

'ஆதித்ய ஹ்ருதயம்' - சொல்லிக் கொண்டிருந்தார். வக்கீல் பகவந்த ராவ். ஹாலில் பிரம்பு நாற்காலியில் அவருக்காகக் காத்திருக்கும் மோகன்ராமின் காதிலும் அந்த ஸ்லோகத்தின ஒலி அலைகள் மோதிக் கொண்டிருந்தன. கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல் இருந்தது. இப்படி நாமும் நிதமும் ஒரு ஸ்லோகமாவது சொல்லிப் பழக வேண்டும் என்கிற ஆசையும் மூண்டது. கூடவே பொருள் தெரியாமல் சொல்வதால் என்ன லாபம் என்கிற கேள்வியும்.... அதை கலைக்கிறது மணி சப்தம். பகவந்த ராவ் கற்பூரத் தட்டுடன் அறைக்கு

ஆசை விழுது

20

வெளியே வந்து ஹாலில் தொங்கும் படங்களுக்கெல்லாம் அந்த கற்பூர ஆரத்தியைக் காட்டுகிறார்.

நடுவில் 'கொஞ்சம் பொறு வந்துட்டேன்' என்கிற பாவனை காட்டியபடி திரும்ப பூஜை அறைக்குள் நுழைந்து கொள்கிறார்.

கையில் தம்ளருடன் சமையல்கட்டிலிருந்து வருகிறாள் சாரதா. பகவந்தராவின் மனைவி.

"இந்தாப்பா சாப்டு..." என்கிறாள்.

"நான் காப்பி, டீ சாப்பிடறதை நிறுத்திட்டேன்."

"தெரியும்... இது சுக்கு மல்லி காப்பி" என்கிறாள். கையில் சில திருத்துழாய்களுடன் பகவந்த ராவும் பூஜையறையில் இருந்து வெளிப்படுகிறார். லீடிங் லாயர்... உண்மையைப் பொய்யாய் - பொய்யை உண்மையாய்க் காட்ட முடிந்த நா வித்தகர். அவருக்குள்ளும் அழுத்தமான பக்தி. அவர் வீடும் ஒன்றும் பெரிய பங்களா இல்லை. ஆனாலும் மகாலட்சுமியை இழுத்துக் கட்டிப் போட்ட மாதிரி ஒரு நேர்த்தி தெரிகிறது. சுவரில் படங்களை மாட்டுவதற்குக் கூட இலக்கணம் உண்டு போலும். தூசு துப்பு கிடையாது.

ஒரு நெசவாளி வீட்டில் இத்தனை நேர்த்தியை, தூய்மையை எதிர்பார்க்க முடியுமா? அதைக் கொண்டு வந்து நிலைப்படுத்தத்தான் முடியுமா?

"என்னப்பா என்னாச்சு உனக்கு...?" பகவந்தராவின் உசுப்பலில் கலைகிறான்.

"ஒண்ணும் இல்ல சார். இங்க வந்தா நான் என்னையே மறந்துடறேன் - அதான்..."

"இப்ப நான் யாருன்னாவது ஞாபகம் இருக்கா?"

"ஐயோ என்ன சார் இது கேள்வி... வரச் சொன்னீங்களாமே?"

"ஆமாம்ப்பா... ஆமா பரீட்சைக்குத் தயாரா யிட்டியா?"

"ஆகிக்கிட்டே இருக்கேன்..."

''முப்பது வருடமாய் ஒருநாள் கூட என்னைப் பாராட்டாத என் மாமியார் இன்று என்னை ரொம்பப் பாராட்டினார்!''

''அப்படியா? என்னன்னு?''

''மாட்டுப் பெண்ணை படுத்துறதுலே நீ என்னையும் மிஞ்சிட்டேன்னு!''

– வசந்தி ரவிச்சந்திரன்



"அதோ பார்... அதுதான் உன் சீட். இப்பவே ரெடியா இருக்கு."

– மோகன்ராம் அவர் சுட்டிக்காட்டிய நாற்காலி மேஜையை அதன் பின்புறத்து செந்நிறப் புத்தகக் கூட்டத்தை அந்த மேஜைக்கு மேல் ஆசீர்வதித்தபடி படத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் காஞ்சிப் பெரியவரை என்று சகலரையும் ஒரு பார்வை பார்த்து முடித்துப் பரவசமாகிறான்.

"அப்புறம் மோகன், பாரதியை உனக்குத் தெரியும்தானே?"

"என்ன சார் கேள்வி இது... மகாகவியைத் தெரியாமலா?"

"தெரியும் சரி.. புரியுமா?"

"புரியும்னா...?"

"அவன் எப்படி... அவனது குணம் எதிர்பார்ப்பு இவை, அப்புறம் அவனது ஆசைகள் - மனிதம் - சமூகம் - இயற்கை... இது பத்தி எல்லாம் அவன் வைத்திருந்த அபிப்ராயங்கள்..."

"நல்லாவே புரியும் சார்..."

"நானும் நீ சொல்றதை நம்பறேன். அந்த மகாபுருஷன் பேரால ஒரு மன்றம் தொடங்கலாம்னு இருக்கேன். தலைவர் அவன்தான். ஆனா செயலாளன் நீ...!"

"சார் என்ன இது திடீர்னு..."

"திடீர்னுதான்... பானுங்கற பொண்ணோட பாட்டி செத்துப் போய் வசூல் அது இதுன்னு நடந்து, கடைசில அந்த சாராயக்கார தாமு வந்து மூக்கை நுழைச்சு காக்கா விரட்டினதா கேள்விப்பட்டேன். உன் தறிஎரிஞ்ச விஷயம் ஏற்கெனவே தெரியும். தெருவுல ஒரு விளக்குக் கூட எரியலைங்கறதும் தெரியும். சின்னதும் பெரிசுமா நிறைய பிரச்னைகள்...

"ஒண்ணாங்கிளாஸ்லையே மாடுகள் கதை நமக்குச் சொல்லித் தந்தும் நாம அதை சரியா புரிஞ்சுக்கலை. நாலு மாடுகள் தனித்தனியா மேயும் போது அடிக்கச் சாப்பிட வந்த புலி, நாலும் ஒண்ணாயிட்டப்போ ஓடி ஒளிஞ்ச கதைதான் உனக்குத் தெரியுமே..."

"புரியுது சார்... நல்ல சிந்தனைகள் சமூகப் பார்வைகள் கொண்டவங்க தனித்தனி கூரைக்குக் கீழ் இல்லாம ஒரு கூரையின் கீழ இருந்தா பலம்னு சொல்ல வர்றீங்க... ஆனா என்னைப் போய் செகரட்ரியா..."

"இதோ பார் இத ஒரு பதவியாவோ, உன்னை பதவி ஆசை பிடிச்சவன்னு சிலர் நினைச்சுடுவாங்கங்கற தயக்கமோ வேண்டாம். சில காரியங்களைச் செய்ய சில பொறுப்புகள் அவசியம். இது உனக்கு நான் கொடுக்கற ஆயுதம்.

"என்னைக் கேட்டா ஒரு நல்லது செய்ய ஆசைப்பட்டவனுக்கு பதவி ஆசை இருந்தா அது தப்பு இல்லேம்பேன்... எங்கேயும்

விளைவுதான் முக்கியம்."

அரை மனதாய் தலையசைக்கிறான் மோகன்ராம்.

"உன் நண்பர்களை உறுப்பினர்களா சேரு. மாதம் ஒரு கூட்டம் போடுவோம். பொறுப்புல இருக்கற பெரிய தலைகளைக் கூப்பிடுவோம். கைகுலுக்குவோம். அவன் லஞ்ச ஊழல் பேர் வழியா இருந்தாலும் உத்தமன்னு சொல்லு வோம்! நாம சொன்னதுக்காகவாவது அவன் உத்தமனா நடந்துக்க அப்புறமா முயற்சி செய் யணும். அப்படி செயல்படுவோம். அப்பவும் மாறலேன்னா இருக்கவே இருக்கு உண்ணா விரதம் மறியல்னு ஆயிரம் அகிம்சை வழி."

"இப்போதைய அரசியல்வாதிங்க, அதி காரிங்க இந்த உண்ணாவிரதம் மறியலுக் கெல்லாமா மசியறாங்க...?"

"தெரியும் நீ எங்க வரேன்னு.... ஒண்ணு நல்லா தெரிஞ்சுக்க. சில புத்திசாலித்தனமான விஷயங்கள் கொண்ட அணுகுமுறை தோற் கவே தோற்காது.

"கேரம் போர்டு விளையாட்டு மாதிரிதான் பிரச்னைகளோட நாம உறவாட்றதும்! சில காயினை நேரா போடலாம். சிலது கவுண்டர் பண்ணி.... இன்னும் சிலதை எதிரியோட காயினை வெச்சே போடணும். நடுவுல அவன் காயின்களை கலைக்கணும். நிறைய இருக்கு... அதை எல்லாம் நான் உனக்கு சொல்லித் தரேன்."

முகுந்தன் கூட அன்று முதலில் நம்மை நாம் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என் றான். இன்று அதை நோக்கித் திரும்ப இருக் கிறது பாதை...

"இந்தா மோகன் இந்த ஆயிரம் ரூபாய வெச்சுக்கோ... இதோட நாலாயிரம் ஆகுது... மாசம் ஐநூறு ஐநூறா சம்பளத்துல கழிச்சுக் கறேன்..." - பகவந்த ராவ் சற்றும் எதிர்பாரா மல் ஒரு தொகையை நீட்டுகிறார்.

"சார் எப்படி சார் நன்றி சொல்வேன்..."

"உயிர் போற நிலையிலேயும் நேர்மையை இழந்துடாம இருந்து..."

மோகன் அவர் கால்களை நோக்கிக் குனிகிறான்.

மீட்டர் ரீடிங்கிற்காக மின்வாரிய ஆள் வந்திருந்தான். ஆனால் பதிவுக் கார்டை காண வில்லை. தேடி அலுத்துப் போய் வந்தவன் எதிரில் பரிதாபமாகப் பார்க்கிறாள் மகா லட்சுமி.

"என்னங்க இது... தேடி எடுத்து வைங்க - நாலு வீடு பார்த்துட்டு வரேன். இப்படியா பொறுப்பில்லாம இருப்பீங்க..."

- அவன் அபிப்ராயம் மகாலட்சுமியை விட கனகாவை அதிகம் காயப்படுத்துகிறது.

"அத்தே... நீங்க இருங்க நான் தேட்றேன்"



"போலீஸ்காரர் வேடத்தில் நடிச்ச அந்த நடிகருக்கு பேசியபடி முன்னாலேயே சம் பளம் கொடுத்துட்டீங்கல்ல... அப்புறம் ஏன் மறுபடியும் வந்து நிற்கிறார்!"

"மாமூல் வேணுமாம்!"

– **வலங்கைமான் நூர்தீன்**

என்று ஒரு இடம் பாக்கி விடாமல் கட்டைக் காலுடன் தேட ஆரம்பிக்கிறாள். மகாலட்சுமி பட்டுப் பிசிறுகளை சுருட்டிச் சுருட்டி கூரை மூங்கில் இடுக்குகளில் செருகி வைத்திருக் கிறாள். அங்கங்கே ஜரிகைப் பிசிறுகள்.

ஓர் ஓட்டு இடைவெளியில் ரேஷன் கார்டு - இன்னொரு இடத்தில் பழைய கல்யாணப் பத்திரிகைகள்...

ஒரு பத்திரிகை பெரிதாக பளிச்சென்று கண்டி இழுக்கிறது.

எடுத்துப் பார்க்கும் ஆசை வருகிறது.

'இதைவிட பெரிதாக அப்பா தனக்குப் பத்திரிகை அடிப்பார்' என்று உள்குரல் ஒலிக்க, மருதாணி விரல்களால் பத்திரிகையைப் பிரிக் கிறாள். மீட்டர் ரீடிங் கார்டு தேடும் எண்ணம் சற்று ஒதுங்கி நின்று கொள்கிறது. முகுந்தனின் தங்கைக்கான கல்யாணப் பத்திரிகை என்று கவர் மேலேயே முகாந்திரங்கள். உள்ளே அந்த மஞ்சள் நிற மங்கலத் தாள் விரியும் போது ஒரு புகைப்படத்தையும் உள்ளடக்கி இருந்தது அது.

யாருடைய புகைப்படம்...? நான்கு பெண் கள். இதற்கு மேல் போட முடியாத மேக்கப் புடன் பட்டு உடுத்திக் கொண்டு ஸ்டுடியோ விற்கே போய் எடுத்துக் கொண்ட போட்டோ....

நடுவில் பானுவும் நிற்கிறாள். பளிச்சென்ற சிரிப்புடன்! கனகாவின் விரல்கள் அநிச்சை யாய் நடுங்க ஆரம்பிக்க, அந்த புகைப்படம் கவிழ்ந்து கீழே விழுகிறது.

பின்னால் ஏதோ எழுத்துக்கள்...

எடுத்து வாசித்த போது நெஞ்சை அடைத் தது. இதயம் கரணமடித்து வாய் வழியாக வெளியே வரும் போல கூடத் தோன்றியது.

இரண்டு கண்களின் பாப்பாக்களையும் இருட்டு வர்ணம் பூசினது போல் வந்து மூடியது.

'நடுவில் இருப்பவளே....



"மத்தவங்க சுரண்டியனதால இவர் பணக்காரர் ஆயிட்டாரா... ஆச்சரியமாயிருக்கே!"

"பின்னே. இவர்தான் சுரண்டல் லாட்டரி ஏஜென்சி நடத்தறவராச்சே!"

– கீழை அ. கதிர்வேல்

என் இதயக் குடுவையில் இருப்பவனே...
கொஞ்சம் பொறு.. கல்யாணப் படத்தில் நான்தான்
உன் அருகில் நிற்பேன். மாப்பிள்ளையாக!

மோகனின் கையெழுத்துதான் அது... இந்தப் புகைப்படத்தை பற்றித்தா[ன்] டயரியில் குறிப்பிட்டிருந்தானா?

பானுவால் எழுந்திருக்க முடியவில்லை. அவன் நினைப்பு அழுத்துகிறது.

"என்னம்மா கிடைச்சிடிச்சா?" என்று கேட்டு வரும் மகாலட்சுமி எதிரில் தடுமாறத்தான் முடிகிறது.

"ஐய இங்கல்லாம் இருக்காது... அந்த மீட்டர்கிட்டேயே தேடிப் பாரு.."

"எதை?" என்கிற கேள்வியோடு உள்நுழைகிறான் மோகன்ராம்.

"வாடா... எங்கடா கரண்ட்டு கார்டு?"

"என்கிட்ட கேட்டா?"

"அத காணாமதான் தேடிக்கிட்டு இருக்கேன். இவளும் தேட்றா. ஆனா கிடைச்ச பாட்ட காணலை. அளவெடுக்கறவன் வந்து மூக்க சிந்திட்டுப் போறான்."

மகாலட்சுமி புலம்பிக் கொண்டே சுற்று முற்றும் பார்க்க, மோகன்ராம் கச்சிதமாகக் கனகாவின் கையில் பத்திரிகையை – கூடவே மறைந்த நிலையில் இருக்கும் போட்டோவை- அப்படியே அவன் நொடித்துப் போய் பிரமை பிடித்து நிற்பதை என்று சகலத்தையும் ஒரு பார்வையில் பார்த்து முடிக்கிறான்.

எப்படித் தொடங்குவது? என்கிற நெருடலான விஷயம் இங்கே தொடங்கி முடிந்து விட்டிருக்கிறதே?

ஒரு வகையில் நல்லதுதான்...

இன்னொரு வகையில்..?

கனகா அதற்குப் பதில் சொல்லும் ஆசையுடன் கொல்லைப்புறம் நோக்கி சமிக்ஞை செய்தபடி நடக்கிறாள்.

வெளிப்பகுதி ஆதலால் தெருக்குழாயின் அலறலில் ராசாவை சித்தெறும்பு அன்றைய தினத்தில் மட்டும் ஏழாவது முறையோ எட்டாவது முறையோ கடித்துக் கொண்டிருக்கிறது.

"என்ன கனகா?"

"கங்ராஜுலேஷன்ஸ்..."

"..............................."

"ஒரு தேங்க்ஸ் கூட சொல்ல மாட்டீங்களா?"

"அதால உன் மனசு நிரம்பாதுன்னு எனக்குத் தெரியும்."

"இனி எதாலையும் நிரம்பாது அத்தான்..."

"அப்படிச் சொல்லாதே... உன் அழகுக்கும் சுறுசுறுப்புக்கும் நான் சாதாரணம். என்னைவிட ஒசந்தவன் உனக்குக் கிடைப்பான்."

"தேங்க் யூ... அத்தான் ஒரு ரிக்வெஸ்ட்.."

"என்ன கனகா?"

"அப்பாகிட்ட உங்களைப் பிடிக்கலைன்னு பொய் சொல்லப் போறேன். தப்பா எடுத்துக்கக் கூடாது நீங்க.."

"அது உண்மையா இருந்தாலே தப்பா எடுத்துக்க மாட்டேன் கனகா."

"நீங்க தப்பையே தப்பா எடுத்துக்காதவர்ங்கறது எனக்குத் தெரியும். ஆனா அப்பா நேர் எதிர். அவரை வேற விதமாத்தான் சமாளிக்கணும்."

"இதுல சமாளிக்க என்ன இருக்கு.... எக்ஸ் இல்லேன்னா ஒரு ஒய்ன்னு போகத் தெரியாதவரா உங்க அப்பா..?"

"அவர் வரைல எக்ஸ், ஒய் எல்லாமே நீங்க மட்டும்தான். அதோட நீங்க என்னை விரும்பலைங்கறதை விட பெரிய விஷயம் பானுவை விரும்பறது. அதை அவரால ஜீரணிக்கவே முடியாது. இந்த விஷயத்துல அவர் கட்சியில தான் உங்க அம்மாவும் சேருவாங்க. நீங்க அப்புறமா தனி நபரா ஆகி கஷ்டப்படணும். ஆகையால.."

"ஆகையால..."

"இப்போதைக்கு உங்க காதல் வெளிய தெரிய வேண்டாம். என் கல்யாணம் முடிஞ்ச பிறகு தெரியட்டும்.."

"உன் கல்யாணமா?"

"ஆமாம்... நான் உங்களை விரும்பின மாதிரி இங்க என்னை ஒருத்தர் விரும்பிக் கிட்டு இருக்காரு. தான் விரும்பற நபரை விட தன்னை விரும்பற நபர்தான் ஒரு பெண்ணுக்கு ஏற்றவன்னு ஒரு பழமொழி கூட இருக்கே."

"யார் அது?"

கனகா அந்த நபரின் பெயரைச் சொன்ன போது, மோகன்ராமுக்குச் சுரீர் என்றிருந்தது.

(தொடரும்)

GURUDEV

சுரானா! சுரானா!

இரும்பு போன்ற உறுதி,
தங்கம் போன்ற
நாணயம் கொண்ட
குழுமத்தின்
ஒரு அங்கம்.

சுரானா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

அளிக்கும் முதலீடு திட்டங்கள்

ஆண்டுக்கு வட்டி விகிதம் 15%

CARE
மதிப்பீட்டாளர்களால்
"போதுமான பாதுகாப்பு"
சான்றிதழ் பெற்றது.
(B B B +)

சுரானா நிறுவனங்கள் 1971 முதல் இயங்கி வருபவை. 25 ஆண்டு அனுபவம் பெற்றவை.

சுரானா நிறுவனங்கள் இரும்பு உற்பத்தி, இரும்பு வியாபாரம் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளன. இக்குழுமம் தென்னகத்தில் இரும்பு வியாபாரத்தில் முதலிடம் வகிக்கிறது.

குழுமத்தின் மொத்த விற்பனை அளவு ரூ.125 கோடி.

சுரானா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட் (SFCIL), ஹயர் பர்ச்சேஸ், லீசிங், பில் டிஸ்கௌண்டிங், ஃபாரின் எக்ஸ்சேஞ், பப்ளிக் டிபாசிட் போன்ற பல வகைப்பட்ட நிதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது.

SCHEME 1 - FIXED DEPOSITS

Period (Months)	Rate of Interest per annum
12 24 36 48 60	15.00% (Monthly) 15.19% (Quarterly)* 15.48% (Half-yearly)*

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Minimum Amount of Deposit for Monthly Interest is Rs.10,000/-
* Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 2 - GURUDEV CERTIFICATE
(Cumulative Deposit)

Period (Months)	Minimum Amount (Rs.)	Maturity Value (Rs.)	Maturity Value for Rs. 1,000/-	Annual Yield% (Simple Interest)
12	3,000	3,482	1,161	16.06
24	3,000	4,042	1,347	17.36
36	3,000	4,692	1,564	18.80
48	3,000	5,446	1,815	20.38
60	3,000	6,321	2,107	22.14

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Addition in Multiples of Rs.1,000/-
3. Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 3 - SURYODAY CERTIFICATE
(Cumulative Deposit)

Period (Months)	Principal (Rs.)	Maturity Value (Rs.)	Annual Yield% (Simple Interest)
12	862	1,000	16.01
24	742	1,000	17.38
36	639	1,000	18.83
48	551	1,000	20.37
60	474	1,000	22.19

Interest at 15% Compounded at Monthly rests.

சுரானா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

குரூப் ஆப் சுரானா

நெ. 16, ஒயிட்ஸ் சாலை, இரண்டாவது மாடி,
சென்னை - 600 014.
போன் : 8543145 / 8522684 / 8525596 / 8525396 / 8525694
ஃபாக்ஸ் : (044) - 8520587.

கிளைகள் : திருச்சி போன்: 461821, கொச்சி போன்: 77454, சங்கரன்கோவில் போன்: 85423, 85536, பெங்களூர் போன்: 228143, எர்ணாகுளம் போன்: 374617, கோயம்புத்தூர், ஆகிய இடங்களில் உள்ளன.

29.9.96 தேதியிட்ட மக்கள் குரல், Trinity Mirror நாளிதழ்களில் வெளியான சட்டபூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி

ADWAVE/SFC/5420

☐ ரூ. 50 பரிசு பெறுபவர் :
விஜயலட்சுமி சுவாமிநாதன்,
பிளாட் எண் : 74
ஃபாத்திமா நகர்,
உறையூர், திருச்சி - 620 003.

● ப. சுகுமார், தூத்துக்குடி – 1.

? உட்கட்சித் தேர்தலை நடத்த காங்கிரஸ் ஏன் இத்தனை தாமதம் செய்கிறது?

! உயர் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை மட்டமான தலைவர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். இந்த நிலை மாறி உயர்தரமானவர்கள் தலைமை ஏற்க வந்துவிடப் போகிறார்களே என் அச்சம்தான் காரணம். இருப்பதை விட் கொடுக்க யாருக்கு மனசு வருகிறது? தே நடந்தாலும் நேர்மையாக நடக்காது!

● பா. ராஜாமுகமது, திருத்துறைப்பூண்டி.

? கல்கி எந்தக் கட்சிங்க...?

! எப்போதும் தேச நலன் கட்சி.

● ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் – 1.

? 'இந்தியன்' கமலுக்கு தேசிய விருது கிடைத்திருப்பது குறித்து...?

! டெக்னீஷியனான மேக்-அப் கலைஞர் மைக்கேல் வெஸ்ட்மோர் பொறுத்தருள்க!

● எஸ். இலங்கேஸ்வரன்,
வாலாஜாபேட்டை.

? அசாருதீன் நீக்கம் சரியான முடிவு தானா?

! அவருக்குக் காதல் பிரச்னை ஏற்பட்டதிலிருந்தே கவனம் பிசகிவிட்டது. வயதும் கூடிவிட்டது. பெயர் நிலைக்க சாதனைகள் பல புரிந்தாகி விட்டது. இன்னும் என்ன..? சில காலம் முன்பே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

● எம். கதீஜா ஹனிஃபா, திருச்சி – 8.

? தமிழகத்தில் மேலவை அமைத்தால், ஒன்றும் தெரியாதவர்களும் கட்சிக்காரர்களும் குண்டர்களும்தான் வருவார்கள் என டாக்டர் ராம்தாஸ் கூறியுள்ளாரே?

! ராம்தாஸ் சொல்வதை ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு, முதல்வர் செயல்படட்டுமே... முதல்தர மூளைகளை மேல்சபைக்குக் கொண்டு வருவார் என்று நம்புவோமே!

● ச. உமாதேவி, நெய்வேலி.

? நம்மை எப்பொழுதும் சந்தோஷமாக வைத்துக் கொள்ள ஒரு வழி இருக்கிறதா? அது என்ன...?

! மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடக்க வேண்டும்; கடுமையாக உழைக்க வேண்டும்... சந்தோஷம் தானாகவே வந்து சூழ்ந்து கொள்ளும்.

* ஒருதலைப் புகார்!



● ஆரூர் அரசு, பவித்திரமாணிக்கம்.

? ஊழல் மன்னர்கள் நிறைந்துள்ள ஐக்கிய முன்னணியில் குஜ்ரால் தாக்குப்பிடிப்பாரா...?

! ஊழல்கள் நிறைந்து கிடப்பது ஐ.மு.வில் அல்ல... அதில் அங்கம் வகிக்கும் ஜனதா தளத்தில்தான். ஆதரவு தரும் இ. காங்கிரஸில்தான்! இவர்களுக்கு இடையில் மாட்டிக் கொண்டிருக்கும் குஜ்ரால் தூயவராக இருந்து புண்ணியமென்ன...? தாக்குப்பிடிப்பது வேறு; நல்லாட்சி வழங்குவதென்பது வேறு அல்லவா?

● வி. ரெங்கநாதன், சென்னை – 49.

? கட்சியிடம் கடனாக வாங்கிய தொகையில் பத்து லட்சத்தை முதல் தவணையாக ஜெயலலிதா திருப்பித் தந்து விட்டாரே?

ிந்த மூன்று மாதங்களுக்குள் அவர் புதிதாகப்) லட்சம் ரூபாய் எப்படிச் சம்பாதித்தார் ிற கேள்வியை வருமான வரித் துறையினர் ..கட்கலாம்.

● தி. பாலசுப்பிரமணியன்,
திருவண்ணாதபுரம்.



* முதல் தவணை

பத்து லட்சம் கடனைத் திருப்பி விட்டாரே ஜெ..?

? கொடைக்கானல் பஸ் விபத்து பரிதாப உணர்வை நெஞ்சில் தோற்றுவித்தாலும் ஒரு மலைப் பாதையில் இவ்வளவு 'ஓவர் லோடா...?' என்ற உறுத்தலும் எழத்தானே செய்கிறது...?

! சரியாகச் சொன்னீர்கள். பஸ்கள் – தனியாரோ, அரசுத் துறையோ – நல்ல நிலையில் பராமரிக்கப்படவும் ஓவர்லோடு முதலியன தவிர்க்கவும், ஓட்டுனர்கள் சிறப்புப் பயிற்சி பெறுவதுடன் ஆரோக்கியமும் நல்லொழுக்கமும் கொண்டவராக விளங்கவும், அந்த ஓட்டுனர்களைக் கசக்கிப் பிழிந்து, நீண்ட நேரம் வேலை செய்ய வைக்காமல், முறையான



* தாமதமான நடவடிக்கை

ஷிஃப்டுபடி அமர்த்தவும் சட்டதிட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டியது அவசியம்.

● வாசுதேவன், மும்பை - 86.

? ஒப்பிடுக - கோபம், கெட்ட கோபம்...?

! கோபம் : பீஹாரில் மாட்டுத் தீவன ஊழல் பற்றி அறியும்போது வருவது.
கெட்ட கோபம் : அதைத் தொடர்ந்து லல்லு பேசும் அபத்தங்களைக் கேட்கையில் வருவது!

● **விஜயலக்ஷ்மி சுவாமிநாதன், திருச்சி - 3.** ❑

? டீ.வி.யின் செல்வாக்கு எதை வைத்துக் கணக்கிடப்படுகிறது...?

! உங்க வீட்டுல டீ.வி. பார்த்துக்கிட்டிருக்கிற ஒருத்தருடைய முகத்தைக் கொஞ்ச நேரம் உத்துப் பாருங்க. செல்வாக்கைக் கணக்கிட அதுவே போதும்.

● லெ. நா. சிவகுமார், போரூர்.

? கர்நாடகாவில் ஒரு மடத்தின் தலைவர் துறவறத்தை விடுத்து இல்லறத்துக்கு வந்திருக்கிறாரே...?

! துறவறத்தையே கேவலப்படுத்தும் போலிச்சாமியார்களைவிட உண்மையை ஒப்புக் கொண்டு செயல்பட்ட இந்த நேர்மையாளர் எவ்வளவோ தேவலாம்.

● கே. ஆர். உதயகுமார், சென்னை - 1.

? சுதந்தரக் கோப்பை யாருக்கு...?

! முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்தின் மகத்தான வெற்றியும் இரண்டாம் ஆட்டத்தில் ஸ்ரீலங்காவின் எதிர்பாராத தோல்வியும் மூன்றாவதில் டெண்டுல்கரின் சரவெடி ஆட்டத்தால் இந்தியா கண்ட இனிய வெற்றியும் நிமிர்ந்து உட்காரச் செய்கின்றன. இன்னும் என்னென்ன ஆச்சரியங்களோ...!

● ஏ. கஸைப், நாகூர்.

? 'மக்களிடையே அறிவை வளர்க்க வேண்டிய சக்திமிக்க சாதனமான தொலைக்காட்சி நிறுவனங்கள், புராதனக் குப்பையை ஒளிபரப்பி மக்களின் புத்தியை மழுங்கடிக்கின்றன' என்று வீரமணி குற்றம் சாட்டியிருக்கிறாரே...?

! புராதனம் எல்லாமே குப்பை இல்லை. நவீனம் எல்லாமே நல்லதுமில்லை. நவீன குப்பைகளும் நிறையவே ஒளிபரப்பாகின்றன. எனவே, தரம் என்ற சொல்தான் முக்கியமே தவிர புராதனம், நவீனம் என்ற வார்த்தைகள் அல்ல.

● டி. கலைவாணி, கரூர் - 5.


? மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஜாதி அடிப்படையில் தனிப்பட்ட நபரின் பெயரை வைப்பதால்தானே கலவரங்கள்... அழகான பூக்களின் பெயர்களை வைக்கலாமே!

! தனிநபர் பெயர்களை நகர்களுக்கும் மாவட்டங்களுக்கும் சாலைகளுக்கும் கூட வைப்பது என்பது காலம் காலமாக உலகெங்கும் இருந்து வரும் வழக்கம்தான். ஆனால் அந்த நபர்கள் சர்ச்சைக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த மனிதர்களாக இருக்க வேண்டும். ஜாதி அடிப்படையில் திருப்திப்படுத்தி, வோட்டுப் பெறும் நோக்கில் காரியங்கள் செய்யப்படும் போதுதான் பிரச்னைகள் எழுகின்றன.

● ஏ. காதர், நாகூர்.

? அரசியல்வாதிகளுக்கு முக்கியமானது தொகுதியா? தகுதியா?

! முதலில் தகுதி... அது இருந்து விட்டால் அவர்களே தொகுதியை முக்கியமாக நினைத்து விடுவார்கள்.



• புண்ணியமென்ன...?



• டபுள் கோபம்!




• 'மேலான' எச்சரிக்கை





• ரிவர்ஸ் கியர்!

• விருது விசாரம்...



இறக்குமதிச் செய்திகள்:

குழந்தைகளே பெற்றுக் கொள்ளுவதில்லை என்று தீர்மானமாக இருந்துவிடுகிற தம்பதிகள் ஹாங்காங்கில் பெருகி வருகிறார்கள்!

சிசிலியாவுக்குப் பெரிய அலுவலகம் ஒன்றில் நல்ல வேலை; கணவன் டாக்டர். "எங்கள் தினசரி வாழ்க்கையில் குழந்தைகளை வைத்துக்கொண்டு அவஸ்தைப்பட எங்களால் ஆகாது" என்று அடித்துச் சொல்லுகிறார்கள் இவர்கள்.

சமுதாயத்தில், குழந்தைகளற்ற தம்பதி என்று என்று இவர்கள் கருதப்பட்டாலும், இவர்களைச் சுயநல தம்பதிகள் என்றே பெண்ணியவாதிகள் முத்திரை குத்தி விடுகிறார்கள்! அதனாலேயே இது போன்ற தம்பதிகள், வெளிப்படையாக, தங்களுக்குக் குழந்தைகள் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புவதில்லை. "இது அசாதாரணமானது; அல்லது எங்களிடம் ஏதோ குறை இருக்கிறது என்று எல்லோரும் நினைத்து விடுகிறார்கள்!" என்கிறார் ஒரு பெண்மணி.

"ஒரு தாய்க்கு உண்டாகக் கூடிய உணர்ச்சிகள் எதுவும் உங்களுக்கு உண்டாவதில்லையா?" என்று கேட்டால், "அப்படி எதுவுமே எனக்கு இது வரை உண்டானதில்லை!" என்கிறார் சிசிலியா.

"நல்ல வேலையையும் வைத்துக்கொண்டு குழந்தைகளையும் பராமரிப்பது நடக்காத காரியம்" என்கிறார் இன்னொரு பெண்மணி. 'ஆயா பார்த்துக் கொள்ளுவாள்' என்று விட்டு விட இவர் தயாரில்லை. "மோசமான சகவாசங்களால் கெட்டுச் சீரழிந்துபோன குழந்தைகளை நான் நிறையவே பார்த்துவிட்டேன்" என்கிறார் இவர்.

"இதில் என்ன சுயநலம் இருக்கிறது?" என்று திருப்பி அடிக்கிறார் ஒரு பெண்மணி. "ரொம்ப அமைதியான வாழ்க்கையை நாங்கள் அனுபவிக்கிறோம்! உங்களுக்கென்ன போச்சு?"

வேலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கொஞ்சம் சுதந்தரமாக வாழ நினைக்கும் எந்தப் பெண்ணும், கல்யாணத்தின்போதே 'குழந்தைகளே வேண்டாம்!' என்று தீர்மானமாக முடிவு எடுத்து விடுகிறாளாம்.

"வேலைக்குப் போகிற பெண்கள் அதிகரித்து வருகிறார்கள். குடும்பச் செலவு அதிகமாகிக் கொண்டு போகிறது. எனவே குழந்தைகளே வேண்டாம் என்று முடிவு எடுத்து விடுகிறார்கள்!" என்கிறார் ஹாங்காங் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர்.

பிடிவாதமாக, குழந்தைகளே இல்லாது இருப்பது என்ற இந்தக் கொள்கை மேற்கேயும் தொடர ஆரம்பித்திருக்கிறது. அமெரிக்க நூலாசிரியர் லெஸ்லி லஃபாயெட்டின் 'ஏன் குழந்தைகள் வேண்டாம் என்கிறீர்கள்?' (Why Don't You Have Kids) என்ற புத்தகம் பிரபல

குழந்தைகளா? வேண்டாமே!

மாகிக் கொண்டு வருகிறது. சைல்ட் ஃப்ரீ நெட்வொர்க் என்ற ஓர் அமைப்பையே இந்தப் புண்ணியவான் நடத்தி வருகிறார். 'குழந்தைகளில்லாத வாழ்க்கை முறை' என்று நியூஸ் லெட்டர் ஒன்று வெளியிடுகிறாராம்!

குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பே சிலருக்கு இருப்பதில்லை. "தாய்ப்பாசம் என்பதும் பலவகை உணர்ச்சிகளில் ஒன்றுதான். அது அப்படி ஒன்றும் உசத்தி இல்லை!" என்று அனைவரையும் அதிர்ச்சியடைய வைக்கிறார், மிஸ் ஸடுவர்ட்.

"கல்யாணம் பண்ணிக் கொள்ளும்போதே 'குழந்தையே வேண்டாம்டா சாமி!' என்று தீர்மானமாய் இருந்துவிட்டேன். குழந்தை இருந்ததோ, தொலைந்தேன்!" என்கிறார் மிஸஸ் வோங். "உலகத்தில் வேண்டுமளவுக்குக் குழந்தைகள் இருந்து கொட்டமடிக்கிறார்கள். எனவே, என்ன அவசியம்? அவசரம் - குழந்தைகள் பெற்றுக் கொள்ள?" என்கிறார் படு கூலாக.

"அப்படித்தான் குழந்தைகளுடன் கொஞ்ச வேண்டும் என்றால் சொந்தக் குழந்தைகள்தாம் இருக்கணும் என்று எங்கே சொல்லியிருக்கிறது? இருக்கவே இருக்கிறார்கள் - நண்பர்களின் குழந்தைகள். சொந்தக்காரக் குழந்தைகள்! அதனால் குழந்தைகள் இல்லாதது பெரிய குறையாக இல்லை!"

"சொந்த சுகத்தைவிட, குழந்தை ஒன்றும் பெரிய சந்தோஷத்தைத் தந்து விடாது!" என்று ஒரு போடு போடுகிறார் ஒரு பெண்மணி. நிதி ஆலோசகர் வேலை. அடுத்த வருஷம் கல்யாணம்!

உடற்கூறு காரணமாகக் குழந்தைகள் பெறாமல் இருந்து வருவது வேறு விஷயம். ஆனால் இனி வரும் தலைமுறையில், குழந்தைகளே இல்லாத குடும்ப வாழ்க்கை என்பதுகூட இன்னொரு லைஃப் ஸ்டைல் ஆகி விடும் அபாயம் ஏற்பட்டுவிடும்போல் இருக்கிறது.

நெருப்புக் கோழியில் முதலீடு செய்யுங்கள்!

நம்மூரில் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, அட - கூடிப் போனால் தேக்கு மர வளர்ப்புத்தானே பக்கம் பக்கமாய் அடிபடும்?

ஆஸ்திரேலியாவில் நெருப்புக்கோழி வளர்க்க வாருங்கள் என்று கூவுகிறது விளம்பரம்.:

'கூடுதல் வருமானம் தேவையா?

பள்ளிக்கூடச் சம்பளம் கட்டப் பணம் தேவையா?

எதில் முதலீடு செய்வது என்று முழிக்கிறீர்களா?

நாலு வருடங்களில் அபரிமித லாபம் காணுங்கள்.

நாற்காலியில் உட்கார்ந்தபடியே பணம் பண்ணலாம், வாருங்கள்!'

தென்னாப்பிரிக்காவிலிருந்து ஆரம்பித்து, அமெரிக்கா வழியாக ஆஸ்திரேலியாவில் பரவி வருகிற இந்த நெருப்புக்கோழி வளர்ப்பு, இப்போது ஐரோப்பாவையும் பிடித்துக் கொண்டு ஆட்டுகிறது.

நெருப்புக் கோழி மாமிசம், குறைவான கொழுப்புச் சத்து உள்ளதாம்!


இரண்டு வயதில் முட்டையிட ஆரம்பிக்கும் பெண் நெருப்புக்கோழி, வருடத்தில் 75 முட்டைகள் இடும். நாற்பது வருடங்களுக்கு இது உத்தரவாதம். 80 வருடங்கள் உயிர் வாழுமாம் நெருப்புக்கோழி.

'ஆறு மாதமே ஆன நெருப்புக் கோழிகளை வாங்கிக் கொள்ளுங்கள். வளர்க்கிற பாடு எங்களைச் சேர்ந்தது!' என்கிறது ஒரு விளம்பரம்.

பிரபல அக்கவுண்டென்டுகள், வழக்கறிஞர்கள், பெரிய பெரிய தொழிலகங்கள் எல்லாம் இதில் முதலீடுகள் செய்திருக்கின்றனவாம்.

உணவாகவும், தோல் ஆகவும், சிறகுகள் ஆகவும் சேர்த்து ஒரு பன்னிரண்டு மாத நெருப்புக் கோழியின் இன்றைய மதிப்பு 700 டாலர்கள்!

தொகுப்பு: **சித்தார்த்**



'வற்றிப் போன' எண்ணெய்க் குளம்!

பெட்ரோல், டீசல் விலை மீண்டும் உயரப் போகின்றது என தினம் தினம் நாளிதழ் பயமுறுத்துகிறது. 'ஓராண்டுக்குள் திரும்பவும் விலையேற்றமா?' என்று கேட்கும் சாதாரணர்களுக்கு "Oil Pool Account"ஐ எப்படியும் அட்ஜஸ்ட் பண்ணியாகணுமே'' என்று 'அசாதாரண' பதில் அரசு தரப்பில் தரப்படுகிறது.

இந்த 'எண்ணெய்க் குளம்' என்பது என்ன...? வாரத்துக்கு ஒருமுறை மொபெட்டுக்கு இரண்டே இரண்டு லிட்டர் பெட்ரோல் போடும் அப்பாவிகளை அது ஏன் ஆட்டி வைக்க வேண்டும்.

விளக்குவதானால் கொஞ்சம் பழங்கதை பேசியாக வேண்டும்: சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பு, நம் நாடு சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய பொருட்களாகவே (மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல்) இறக்குமதி செய்தது. அந்த காலகட்டத்தில் இங்கே எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படாததால் இந்த ஏற்பாடு. அப்போது பெட்ரோலிய பொருட்களின் விலையும் மிதமாகவே இருந்தது. எனினும் கொஞ்சம் தீர்க்கதரிசனத்துடன் நமது அரசு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை பம்பாய், சென்னை, விசாகப்பட்டினம், கொச்சின் போன்ற கடலோர நகரங்களில் நிறுவியது. கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்து நாமே சுத்திகரித்துக் கொள்ளவும், நமது நாட்டிலேயே அஸ்ஸாம், பம்பாய், ஆந்திரா, தமிழகம் போன்ற இடங்களில் கிடைக்கின்ற கச்சா எண்ணெய்யைச் சுத்திகரிக்கவும் இந்த ஆலைகள் உதவின.

உள்நாட்டில் கிடைக்கும் கச்சா எண்ணெய் நமது தேவையைப் பூர்த்தி செய்யாததால் சுமார் 34 மில்லியன் டன் அளவுக்கு நாம் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். (இது மொத்த தேவையில் 56 சதவிகிதம்!)

பெட்ரோலிய மார்க்கெட் முழுதும் அரசுக் கட்டுப்பாட்டில் இருப்பதால், இந்த இறக்குமதி- சுத்திகரிப்பு- விற்பனையை

பெரும்பாலும் பொதுத்துறை நிறுவனங்கள் மட்டுமே செய்கின்றன. இந்தியன் ஆயில் கார்பரேஷன், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம், ஓ.என்.ஜி.ஸி போன்ற அந்த நிறுவனங்கள், இறக்குமதிக்கோ அல்லது மாநிலங்களிலிருந்து பெறும் கச்சா எண்ணெய்க்கோ விலை தருவதுடன், சுத்திகரிப்புச் செலவு, வினியோகத்துக்கு ஆகும் போக்குவரத்துச் செலவு போன்றவற்றையும் ஏற்க வேண்டும்.

ஆனால், முடிவாக, சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலுக்கோ டீசலுக்கோ, மண்ணெண்ணெய்க்கோ இந்த நிறுவனங்கள் விற்பனை விலையை நிர்ணயிக்க முடியாது. அரசாங்கம் குறிப்பிடும் விலைக்குத்தான் அதை விற்க வேண்டும்.

இந்தப் பொதுத்துறை பெட்ரோலிய கம்பெனிகளின் லாபத்திலிருந்து ஒரு பகுதியைச் சேமிப்பாக முடிவு செய்து, அதை Oil Pool Account என்று அழைத்தது மத்திய அரசு.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தக் கணக்கில் ஐயாயிரம் கோடி ரூபாய் இருந்தது. கச்சா எண்ணெயின் சர்வதேச விலை கட்டுப்பாட்டில் இருந்தது இதற்கு ஒரு காரணம். இன்னொரு காரணமும் உண்டு. வளைகுடா போரின்போது பெட்ரோல் பொருட்கள் பேரில் ஒரு 'சர்ஜார்ஜ்' விதித்தது அரசு. போர் முடிந்த பிறகும் 'சர்சார்ஜ்' நீக்கப்படாமல் தொடர்ந்ததால் Oil Pool கணக்குக்குக் கூடுதலாக வருமானம் கிடைத்தது.

இந்த ஆயில் பூல் கணக்கு நிதியைக் கொண்டு அவசர காலங்களிலும், விலையுயர்வு காலங்களிலும் நம் ஏழை எளியவர்களுக்குக் கட்டுப்பட்ட விலையில் பெட்ரோலிய பொருட்களை வழங்கலாம் என்பது திட்டம்.

ஆனால், அந்தக் கணக்கில் சேர்ந்த ஐயாயிரம் கோடி ரூபாய் அப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கெல்லாம் உதவவில்லை...

கடைத் தேங்காயை வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக, கடந்த நரசிம்மராவ் ஆட்சியின்போது ஒரு காரியம் நடந்தது. சில நல்லெண்ணம் படைத்த எதிர்க்கட்சிக்காரர்கள் கதறக் கதற, ஐயாயிரம் கோடியும் அரசாங்கப் பொதுக்கணக்குக்கு மாற்றப்பட்டு சமுத்திரத்தில் பெருங்காயமாகக் கரைந்து போயிற்று!

இதற்குள் சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை தமிழ்நாட்டு வெயில் போல் உக்கிரமாய் ஏறி விட்டது!

உள்ளூர் எண்ணெய் நிறுவனங்களோ, தங்கள் இஷ்டத்துக்கு விலையையும் உயர்த்த முடியாமல் ஆயில் பூல் கணக்கிலிருந்து பணம் எடுத்து அட்ஜஸ்ட் செய்யவும் முடியாமல், விழி பிதுங்கி நிற்கின்றன!

தேவேகௌடா ஆட்சியின்போது ஒரு முறை பெட்ரோல் பொருட்களின் விலையை ஏற்றியாகிவிட்டது. இதனால் ஆயில் பூல் கணக்கின் பற்றாக்குறை நிலை சற்று மாறியிருக்கிறது. ஆனால், அது தாற்காலிக நிம்மதிதான். ஓராண்டுக்கு முன் பதினேழு டாலருக்குக் கிடைத்த ஒரு பீப்பாய் பெட்ரோல் இன்று 24 டாலர் விலை ஆகிறது! (ஒரு டாலர் = 36 ரூபாய்!)

இவ்வளவு தூரம் நஷ்டமானால் 'யார் தாங்குவது...?' 'ஏற்றுவோம் பெட்ரோல் விலையை...' என்கிறது அரசு. இடதுசாரி கட்சிகளுக்குப் பயந்து இந்த முடிவை ஒத்திப் போட்டாலும் இது எடுத்தே ஆக வேண்டிய முடிவுதான்.

இந்த விஷயத்தில் இன்னொரு வேடிக்கையான முரண்பாடும் இருப்பதைச் சுட்டிக்காட்டியாக வேண்டும். ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்க்கு அரசு 5.50 ரூபாய் மானியம் தருகிறது. ஒரு லிட்டர் டீசலுக்கு இரண்டு ரூபாய்; ஒரு சமையல் காஸ் சிலிண்டருக்கு அறுபது ரூபாய் அரசு செலவழிக்கிறது! ஆனால் பெட்ரோலுக்கு மட்டும் மானியம் கிடையாது. உற்பத்தி விலையைக் காட்டிலும் பலமடங்கு அதிகம் பெட்ரோலின் விற்பனை விலை.

பெட்ரோல், வசதியானவர்கள் மட்டுமே பயன்படுத்தும் சாதனம் என்பது இந்த முடிவுக்குத் தரப்படும் விளக்கம்.


ஆனால் வசதியானவர்கள் பெட்ரோலுக்கான காசை கையை விட்டுத் தருவது மிகவும் அபூர்வம். பெரும்பாலும் கம்பெனி அல்லது அரசுக் கணக்கில்தான் பெட்ரோல் செலவு எழுதப்படுகிறது. பெட்ரோல் விலை ஏற்றத்தால் அரசு செலவுகள் அதிகரித்தாலோ தனியார் நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்கள் விலை ஏறினாலோ மீண்டும் நடுத்தர வர்க்கத்தினரும் ஏழைகளும்தான் பாதிக்கப்படுவார்கள்!

எங்கேயோ இடி இடித்தால் இங்கே மழை பெய்வானேன் என்பது போல், நமக்கு நேரடியாகச் சம்பந்தமில்லாத எண்ணெய்க் கணக்கில் மடமோசிங் கை வைக்கப் போக... தினமும் காலை எழுந்து பயந்து கொண்டே பேப்பரைப் பிரிக்க வேண்டியிருக்கிறது!

— வி.கோபாலன்

கனவான்டளி கல்வி

TOP ANGLE



படம் : பெ. கிருஷ்ணமூர்த்தி

இணைவதும் பிரிவதும் அரசியலில் மட்டுமா..!

படித்ததில் பிடித்தது:

ஒரு கொத்து சோகத்தை எப்போதாவது ஏற்க வேண்டுமானால் படிப்பேன் புதுக்கவிதை!

சமயத்தில் அந்த "சோகம்" கூட – "சுகம்!"

அப்படித்தான் படித்தேன்...

எஸ். வைதீஸ்வரனின் "விரல் மீட்டிய மழை!"

என்ன கற்பனைகள்!

அவற்றில் எத்தனை மெல்லிசும் ஒல்லிசுமான சிலந்தி நூல் கனவு இழைகள்!

"மணித்துளிக் கைகள்
பல்லாயிரம் பிணைந்து,
ஈரச் சங்கிலிகள் வெளியில்
வானுக்கும், ஊருக்குமாய்,"

என்று எனக்கு மழை காட்டி–

"நசநசவென்று சரத்துக்
கழிவு நீரோடு கைகோத்து
நாரிசுக் கசடாய் தேம்புகிறது
நகரவாசனை கலந்து!"

என்று என் நாகரிகத்தை நகையாடி–

"மறந்து வைத்த பிளாஸ்டிக் பையாய்
மரத்தின் மேல் ஒரு தேன் கூடு!"

என் ஆசையைக் காண்பித்து;
என் திமிரை அடக்கி–

"உடல் திறந்து
உனை நாடும் மார்மத்தில்
பட்டதெல்லாம் இன்பமாச்சு!"

என்று என் கற்பனையில், ஆசைக்குத் தீ மூட்டி–


"உடல் – கைப் பொம்மை
நீ தான்
கை கோத்த – புயல்கள்!"

என்று அந்தப் புயல்களை எனக்குக் காட்டி–

"கம்பத்தில் தொங்கும்
குழல் விளக்குகளுக்கு
இருட்ட இருட்ட
அப்படி என்ன ஒரு இறுமாப்பு?"

என்று தெருவில் என்னைப் போக வைத்து, குழல் விளக்குக்குப் புது விளக்கம் காட்டி–

"உச்சியிலிருந்து



விரல் மீட்டிய மழை!

"சாய்ந்த ஒளிக்
கோலொன்று
அவள் உருவத்
தில் பாய்கிறது!"

என்று அந்த மடலை என்னைப் பார்க்க வைத்து, அவள்

"அங்கங்களின் அழுத்தமான பூரிப்பு"

என்று என் மனத்தைக் கொஞ்சம் திசை திருப்பி விட்டு, இங்கும் அங்குமாய் எங்குமாய்த் திரிந்து, இஷ்டப்படி கிடைத்த எதிலும் கவிதைப் பொட்டு வைத்து–

"என் வருஷங்களைத் தள்ளி
என்னை உள்ளே பார்க்க வைத்து
சோகம் போல் செத்து நிற்கும்"

என் பழைமை, 'நிகழ்'காலம், 'வரும்'மை மூன்றிலும் சோகம், சோகம், சோகமே தான்! என்று எனக்கு அதை எடுத்துக் காட்டி,

எல்லாம் படித்து முடித்துக்
கனத்துவிட்ட என் மனத்தை
'அம்போ' என்று விட்டு விட்டுப்
போகிறீரே, இது தகுமா?
ஈஸ்வரா, வைதீஸ்வரா!

— புஷ்பா தங்கதுரை

(விரல்மீட்டிய மழை/எஸ்.வைதீஸ்வரன், வெளியீடு: ஸ்நேகா, 348, டி.டி.கே. சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. விலை ரூ.40/-)

பார்வைக்கு வந்தவை...

சிந்தனையாளர் வ.ரா.ஞா. மாணிக்கவாசகன்/ வானதி பதிப்பகம், 13 தீனதயாளு தெரு, சென்னை - 17/ ரூ.28

உரைநடைத் தமிழுக்குப் புது உருவம் தந்த வ.ரா. வின் அரசியல், சமூக, இலக்கிய முகங்களைப் பெரும்பாலும் அவர் மொழியிலேயே காட்டும் நூல். ஆசிரியர் பேசும் இடங்களில் மட்டும் சில கருத்துப் பிழைகள். (உதா: "பி.எஸ்.ராமையாவின் வடிவேலு வாத்தியார், நாலு வேலி நிலம் எல்லாம் ஓரளவு பிரசாரம் தானே?"– இரண்டு நாடகங்களும் ஜானகிராமனுடையவை.)

ஆர்டர், ஆர்டர்/கே.சந்துரு/தமிழ்ப்புத்தகாலயம், 11. சிவப்பிரகாசம் தெரு, பாண்டிபஜார், சென்னை - 17/ ரூ.30.00

ஒரு வழக்கறிஞர் பார்வையில் நீதிமன்ற நடவடிக்கைகளைப் படம் பிடிக்கும் சுவாரசியமான நூல். சினிமா கோர்ட்டுக்கும் நிஜ கோர்ட்டுக்கும் தான் எத்தனை வித்தியாசம்!

சாக்ரடீஸ் முதல் ரூசோ வரை/ஏ.இருதயராஜ்/ பிரயத்னா பதிப்பகம், 22E தெற்கு அவென்யூ, காமராஜ் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041/ ரூ. 25.00

மேதைகள் சிலரின் அரசியல், பொருளாதாரச் சிந்தனைகளை விளக்கிக் கூறும் நூல். மிக உபயோகமான முயற்சி.

வைரமுத்துவரை/டாக்டர் க. சண்முகசுந்தரம்/ காவ்யா, 16, 17th E Cross, Indra Nagar II Stage, Bangalore - 38/ ரூ.125.00

மதுர பாஸ்கரதாஸ் தொடங்கி இன்றைய சினிமாக் கவிஞர்கள் வரை ஒரு நீளமான பட்டியலும் அவர்களது பாடல் முயற்சிகளும் கேள்விப்பட்டிராத பல கவிஞர்களையும் தேடிப்பிடித்துத் தொகுத்திருப்பது பாராட்டத்தக்க முயற்சி.

அண்ணா சாலையில் ஒரு இந்தியன்/வானதி பதிப்பகம், சென்னை - 17/ ரூ.35.00

சென்ற ஆண்டின் சிறந்த கதைகளாக இலக்கியச் சிந்தனை தேர்ந்தெடுத்துள்ள பன்னிரெண்டு கதைகளின் தொகுப்பு. லா.ச.ராமாமிருதத்தின் நீண்ட முன்னுரையுடன். மிகச் சிறந்த கதையாக அவர் தேர்ந்தெடுத்திருக்கும் தலைப்புக் கதையைக் காட்டிலும் சிறந்த இரண்டு கதைகள் தொகுதியில் உள்ளன. (பாவண்ணன், சங்கர நாராயணன்).

சத்தியா.ரங்கநாயகி அம்மாள்/ இமயப்பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகைப்பட்டினம் - 611 001.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட நாவல் இது. எழுத்தாளர் ஆர். சூடாமணியின் பாட்டி எழுதியது. சாதாரண குடும்ப நாவல்தான் எனினும் கையாளப்பட்டுள்ள மொழி நடை யாருக்கும் வியப்புத் தரும்.

2000 பொது அறிவு வினாடி வினா-விடைகள்/ மணிமேகலை பிரசுரம், த.பெ.எண் 1447, சென்னை - 17/ ரூ.54.

குவிஸ் மாஸ்டர்களுக்கும் குழந்தைகளுக்குமான நூல்.

பொய்யாய் புதுக் கனவாய்/சு.சமுத்திரம்/ கங்கை புத்தக நிலையம், சென்னை - 17/ ரூ. 35.

தீவிரமான சமூகப்பார்வையுடன் எழுதப்பட்ட தெருப்புச் சிறுகதைகள். நடையின் விறுவிறுப்பை ரசிக்க முடியாமல், கருப்பொருட்களின் உக்கிரத்தில் அமிழ்ந்து போய் விடுகிறோம் படிக்கும்போது.


வெளிச்சத்தின்
விலாசம் - 7
பொன்

வலம்புரி ஜான்

கன்றுக்குட்டி

செங்கடலைக் கடந்த இஸ்ராயேல் மக்கள் சூர் என்கிற பாலை வனத்திற்கு வந்தார்கள். பார்க்கும் இடமெல்லாம் மணல் நீக்கமற நிறைந்திருந்தது. மூன்று நாட்கள் இரவும் பகலும் அவர்கள் நடந்தும் நாக்கை நனைப்பதற்கு ஒரு சொட்டு தண்ணீர் கிடைக்கவில்லை. மாராஹ் என்கிற இடத்தில் நீர்நிலை ஒன்று தென்பட்டது. ஆனாலும் வாயில் வைக்க முடியாத கசப்பு. ஆகவே இஸ்ராயேலர்கள் ஒன்றுகூடி மோசேவிற்கு எதிராக முணுமுணுக்க ஆரம்பித்தார்கள்: "அடிமைகளாக இருந்து, எகிப்திலேயே நாங்கள் மாண்டு மடிந்திருக்கலாமே! இப்படி கசப்புத் தண்ணீர் கிடைக்கிற வனாந்தரத்திற்கு எங்களை வழி நடத்தி விட்டீரே" என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள். வேதனையின் விளிம்பில் நின்ற மோசே ஆண்டவரிடம் முறையிட்டார். பிறகு கர்த்தரின் கட்டளைப்படியே ஒரு மரத்தின் கிளையைத் தறித்து அந்தக் கசப்பான தண்ணீரில் விட்டெறிந்தார். அதே நிமிடத்தில் குடிக்கத்தக்கதாகவும், இனிப்பாகவும் அந்தத் தண்ணீர் மாறிப்போனது.

பிறகு இஸ்ராயேல் மக்கள் எலிம் என்கிற பகுதியின் வழியாக சின் என்கிற காட்டுப் பகுதிக்கு வந்தார்கள். "பாத்திரம் நிறைய இறைச்சியும், நிறைந்து வழிகிற அப்பங்களுமாக எகிப்தில் மகிழ்ச்சியோடு வாழ்ந்தோம். அடிமைத்தனத்திலிருந்து மீட்கிறேன் என்று சொல்லி, பசிக்கு உரிய உணவுகூட கிடைக்காத பாலைவனத்திற்கு எங்களை அழைத்து வந்து விட்டீரே" என்று மீண்டும் அவர்கள் மோசேயிடம் குறைபட்டார்கள். மோசே அவர்களைப் பார்த்து "நாங்கள் சாதாரணமானவர்கள்; உங்களது குற்றச்சாட்டுகள் எங்கள் மீதல்ல; ஆண்டவரின் மீதே சாட்டப்படுகிறவை ஆகும்" என்றார். அந்த மக்களோ என்னத்தை உண்போம்; என்னத்தைக் குடிப்போம் என்று இருந்தார்களே தவிர, மோசே சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் வேலிக்குள் விழுந்த விதைகளைப் போல ஆயின.

மோசேக்குக் கடவுள் வாக்களித்தபடியே மறுநாள் மாலையில் காடைப் பறவைகள் அவர்களின் உணவுக்காகவே கூடாரங்களுக்கு அருகில் தாழ்வாகப் பறந்து வந்தன. அடுத்தநாள் காலையில் பாலைநிலத்தின் பரப்பெங்கும் மென்மையான, தட்டையான, உறைபனி போன்ற அப்பங்கள் காணப்பட்டன. ஆச்சரியப்பட்ட அந்த மக்கள் 'இது என்ன?' என்று கேட்டதால் அந்த மழை போல் விழுந்த அப்பங்களுக்கு 'மன்னா' என்று பெயர் வந்தது. மன்னா என்றால் இது என்ன என்று அர்த்தம். வேண்டிய மட்டும் ஆனால் இரண்டு படிகள் மாத்திரமே ஒவ்வொருவரும் அள்ளிக் கொள்ள வேண்டும் என்பது ஆண்டவரின் கட்டளையாக இருந்தது. அப்போதும் அந்த மக்கள் ஆண்டவரின் கட்டளைகளுக்குச் செவி சாய்ப்பவர்களாக இல்லை. தாங்கள் அள்ளிய மன்னாவில் அதிகமாக அள்ளிய




வர்களுக்கும், குறைவாக அள்ளியவர்களுக்கும் ஒரே அளவாகவே அமைந்திருந்ததைப் பார்த்து, இஸ்ராயேலர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஏனென்றால் மறுநாள் சாபத் என்கிற ஓய்வு நாள். இதுவே இறைவனின் கட்டளை. இருந்தும் அதை மக்களில் சிலர் ஓய்வு நாளிலும் மன்னா கிடைக்கும் என்று பாத்திரங்களோடு வந்து ஏமாந்து திரும்பினார்கள்.

பிறகு சீன் பாலைவனத்திலிருந்து சீனாய் பாலைவனத்தை நோக்கி மோசேயும், ஆரோனும் இஸ்ராயேல் மக்களை வழி நடத்தினார்கள். இரபிதீப் என்கிற இடத்திற்கு அவர்கள் வந்தபோது குடிக்கத் தண்ணீர் இல்லை என்று அந்த மக்கள் மீண்டும் குற்றம் சாட்ட ஆரம்பித்தார்கள். "நீர் எகிப்திலிருந்து எங்களை இந்தப் பாலைவனத்திற்கு அழைத்து வந்தது, எங்களையும் எங்கள் கால்நடைகளையும் சாகடிக்கவோ" என்று மோசேயைக் கேட்டார்கள். மோசே ஆண்டவரிடத்தில் முறையிட்டார். ஆண்டவரோ, "இஸ்ராயேல் தலைவர்கள் சிலரை அழைத்துக் கொண்டு ஓரேபில் உள்ள பாறையை நைல் நதியை எந்தக் கோலால் அடித்தாயோ அதே கோலால் அடி" என்றார். மோசே ஆண்டவர் தமக்குக் கட்டளையிட்டபடியே செய்தார். வானம் கிழிந்து வருஷிப்பதைப்போல பாறையிலிருந்து வெள்ளம் புறப்பட்டது. அந்த நீரைப் பருகி மகிழ்ந்த இஸ்ராயேலர் ஆண்டவரின் வல்லமையில் முழு நம்பிக்கை கொள்ளவில்லை.

பின்னர் அமலேக்கியர் என்கிற இனத்தார் இஸ்ராயேலர்களோடு போரிட வந்தார்கள். மோசே யோசுவா என்பவரை அழைத்து "இஸ் ராயேலர்களில் தகுதியானவர்களைத் தேர்ந் தெடுத்து நாளைக்குப் போரிடு" என்று அனுப்பி வைத்தார். அவ்வாறே போர் நடைபெற்றது. மலையின் குன்றில் மோசே, ஆரோன், கூர் ஆகியோர் சென்றனர். மோசே தமது கையை உயர்த்திப் பிடித்திருந்தபோதெல்லாம் இஸ்ராயேல் மக்கள் வெற்றி பெற்றார்கள்; களைப்பால் மோசேயின் கைகள் தளர்ந்து கீழே வந்தபோதெல்லாம் அவர்கள் தோற்றார்கள். மோசேயின் கைகள் தாழ்ந்து விடாதபடி ஆரோன் ஒரு புறமும், கூர் மறு புறமுமாக பிடித்துக் கொண்டார்கள். இறுதியாக யோசுவாவின் படைவீரர்கள் மகத்தான வெற்றி பெற்றார்கள்.

எகிப்து நாட்டினின்று புறப்பட்ட மூன்றாம் மாதம் முதல் நாள் இஸ்ராயேலர்கள் சீனாய் பாலைவனத்திற்கு வந்து பாளையம் இறங்கினார்கள். மோசே கடவுளைச் சந்திப்பதற்காக மலையின் மீது ஏறிச் சென்றார். அங்கே ஆண்டவர் மோசேயை நோக்கி, "நீ மக்களிடம் போய் இன்றும், நாளையும் அவர்களைத் தூய்மைப்படுத்து. அவர்கள் தம் துணிகளைத் துவைத்துக் கொள்ளட்டும்; மூன்றாம் நாள் மக்கள் அனைவருக்கும் முன்பாக ஆண்டவர் சீனாய் மலையின்மீது இறங்கி வருவார். மக்களில் எவரும் மலைமீது ஏறி விடக் கூடாது; அதன் அடிவாரத்தைக்கூடத் தொட்டு விடக் கூடாது; மலையைத் தொடுகிறவர்கள் கொல்லப்படுவது உறுதி. கால்நடைகளுக்கும் இதுவே விதி" என்றார். மலையிலிருந்து இறங்கி வந்ததும் மோசே சொன்ன இந்தச் செய்தி காட்டுத்தீயைப் போலப் பரவியது. மக்கள் தங்களைத் தூய்மைப்படுத்துவதிலேயே முனைப்பாக இருந்தார்கள்.

மூன்றாம் நாள் எப்போது விடியுமோ என்று இஸ்ராயேல் மக்கள் அச்சத்தில் மூழ்கியிருந்தார்கள். அன்று பொழுது புலரும் நேரத்தில் பேரிடி முழங்கியது. வானமெங்கும் மின்னல்கள் தென்னை இலைகளைப் போல கிழிந்து புரண்டன. மலை போல் மாபெரும் கார்மேகம் வந்து கவிழ்ந்தது. இதனால் கூடாரங்களில் இருந்தவர்கள் நடுநடுங்க ஆரம்பித்தார்கள். கடவுளைச் சந்திப்பதற்காக மோசே மக்களைக் கூடாரங்களிலிருந்து வெளியே வரச் செய்தார். அவர்களும் மலையடிவாரத்தில் அதைத் தொட்டுவிடாதபடி பயபக்தியோடு நின்றார்கள். சீனாய் மலை முழுவதும் புகை மண்டலத்தால் மறைந்தது. ஏனெனில் ஆண்டவராகிய கர்த்தர் நெருப்பு வடிவமாக மலை மீது இறங்கி வந்தார். மலையோ அதிர்ந்து நடுங்க ஆரம்பித்தது. எத்திசையிலும் எக்காளச் சத்தம் கேட்டது. இடி முழக்கத்தில் பேசிய இறைவன் மோசேயை மேலே ஏறி வரும்படி கட்டளையிட்டார். அப்போது கடவுள், "மோசே, மக்கள் ஆண்டவரைப் பார்க்கிற ஆர்வத்தில் எல்லை மீறி வந்துவிடாதபடி மக்களுக்கு நீ எச்சரிக்கை செய்வாயாக" என்றார். மோசேயும் அவ்வாறே செய்வதாக உறுதி அளித்தார்.



"ஏன்?! அவரை ரயில்வேயில் அக்கவுண்டண்ட் வேலையிலிருந்து நீக்கிட்டாங்க?"

"ரயிலுக்குப் பஞ்சர் பார்த்த செலவு ரூபாய் ஒரு லட்சம்னு கணக்கு எழுதியிருக்கார்...!"

— பெ. பொன்ராஜபாண்டி

அப்போது நெருப்பின் நடுவில் இறைவனின் பேச்சுக்குரல் இடி முழக்கத்தைப் போலக் கேட்டது. ''நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கில்லாமல் போவதாக. எனக்கு இணையாக உருவத்தையோ ஓவியத்தையோ உண்டாக்க வேண்டாம். என் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே. ஓய்வு நாளைத் தூய்மையாகக் கடைப்பிடி; உன் வாழ் நாட்கள் நீடித்திருக்கும்படியாக உன் தகப்பனையும், தாயையும் மதித்துநட; கொலை செய்யாதே; விபசாரம் செய்யாதே; களவாடாதே; பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே; பிறர் மனைவி, வீடு, அடிமை, கழுதை இப்படி எந்தப் பொருளையும் கவர்ந்து விடாதே;'' என்பதான கட்டளைகளைக் கடவுள் பிறப்பித்தார்.



மக்கள் அனைவரும் அச்சத்தால் வியர்த்து நின்றனர். அவர்கள் மோசேயைப் பார்த்து ''நாங்கள் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம்; ஆனால் ஆண்டவர் பேசும்போது எங்களுக்கு அச்சமாக இருக்கிறது. ஆகவே அவரிடத்தில் நீர் பேசி, சாராம்சத்தை எங்களுக்குச் சொன்னால் போதுமானது'' என்றார்கள். மோசே ''அஞ்சாதீர்கள்; நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைச் சோதித்து அறியவே ஆண்டவர் அவ்வாறு செய்கிறார்'' என்றார். பிறகு கடவுள் இடம் பெற்றிருந்த காரிருளை மோசே அணுகினார்; மலை மேலே ஏறினார். பிறகு அடிமைகளை எவ்வாறு நடத்துவது, வன்முறைகளுக்கு என்னென்ன தண்டனைகள், ஈடு தருதல் பற்றிய சட்டங்கள், ஒழுக்க நெறிகள், ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிலத்தை உழாமல் ஓய்வெடுக்க விடுதல், இறை வழிபாடு, குருக்களின் உடைகள், பலிபீடம், தலைக்கட்டு வரி இன்னும் அநேக விதமான சட்டதிட்டங்களைப் பற்றி இறைவன் பேசினார். பல நாட்கள் இவ்வாறு கழிந்தன.

மோசே திரும்பி வருவதற்குப் பல நாட்கள் ஆகவே இருப்புக் கொள்ளாத இஸ்ராயேலர்கள் ஆரோனை நெருக்கினார்கள். எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்த எங்களை விடுவித்து வழி காட்டிய எங்கள் தேவனை ஓர் உருவமாக நாங்கள் வழிபட விரும்புகிறோம். மோசே இனி எங்கே வரப் போகிறார்? நீர்தான் எங்களுக்கு வழி காட்ட வேண்டும் என்று கேட்டார்கள். உடனே ஆரோன் ''உங்களிடமும் உங்கள் மக்களிடமும் உள்ள பொன்னாலான காதணிகளைக் கழற்றித் தாருங்கள்'' என்று கேட்டார்.


''நேற்றிரவு எங்க வீட்டுக்கு வந்த திருடனை என் மனைவியும், எங்கம்மாவும் செமத்தியா உதைச்சு அனுப்பிட்டாங்க.''
''அப்படியா? அவ்ளோ தைரியமா?''
''பின்னே? இவங்க தினமும் பீரோ சாவிக்கு சண்டை போட்டுக்கிட்டிருக்கும் போது முணாவதா அவனும் பீரோ சாவி கேட்டதும் கோபம் வராதா என்ன!''
– வலங்கைமான் நூர்தீன்

எதையாவது தொழ வேண்டும்; கும்பிட்டு விழ வேண்டும் என்கிற இயற்கையான தாகம் உடைய மக்கள் ஒரு மணி நேரத்திற்குள்ளாக பொன் ஆபரணங்களை அவர் முன்னாலே கொண்டு வந்து குவித்தார்கள். ஆரோன் அந்த ஆபரணங்களை உருக்கி எருது வடிவத்தில் ஒரு பொற்சிலையைச் செய்து, கன்றுக்குட்டியைப் போலக் காணப்பட்ட அந்தச் சிலைக்கு முன்னாலே மக்களைத் திரட்டினார். ''இஸ்ராயேலே எகிப்து நாட்டிலிருந்து உன்னை விடுவித்த உன் தேவன் இவரே'' என்று பொன் கன்றுக்குட்டியை அறிமுகப்படுத்தினார்.

இஸ்ராயேல் மக்கள் எந்தத் தயக்கமும் இல்லாமல் அந்தப் பொன் கன்றுக்குட்டிதான் தங்களை விடுவித்த இறைவன் என்று நம்பி வழிபடத் தொடங்கினார்கள். அது மாத்திரம் அல்லாமல் அந்தச் சிலையின் முன்பாக வெறிக்கக் குடிக்கவும், பெண்களோடு சேர்ந்து கூத்தடிக்கவுமாக மகிழ்ச்சியில் திளைத்தார்கள். எங்கு எது நடந்தாலும் அதை அறிந்து கொள்ளுகிற ஆற்றல் படைத்த இறைவன் ''மோசே! நீ திரும்பி வர மாட்டாய் என்று நம்பி உனது மக்கள் எனக்கு இணை வைத்து விட்டார்கள். பொன்னாலான கன்றுக்குட்டி ஒன்றை உருவாக்கி அதை வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்; நீ உடனே திரும்பிப் போ; இந்த நன்றி கொன்ற மக்களின் மீது என் கோபம் அக்னியாகச் சீறும்'' என்றார்.

உடனே மோசே, ''பாரவோனின் அடிமைத்

தனத்திலிருந்து இவர்களைப் படாதபாடுபட்டு மீட்டு, பாலைவனத்தில் அவர்களை வழி நடத்துவது போல நடத்தி கடைசியாகக் கடவுள் கொன்று விட்டார் என்கிற எகிப்தியரின் 'பழி உமக்கல்லவா வரும்''



''என்னங்க நம்ம பையன் அம்மிக்கல்லு மேல ஏறி நின்னு பக்கத்து வீட்டை எட்டி எட்டிப் பார்க்கிறான். எதுக்குன்னு புரியலையே!''

''அவன் அம்மி மிதிச்சு பக்கத்து வீட்டுப் பொண்ணு அருந்ததியைப் பார்க்கிறான்டி!''

— ஔவை ஏ.எஸ். யோகானந்தம்

என்றார். "உமது கோபத்தை மாற்றும்; உமது நல்லடியார்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோரை நினைத்தருளும்" என்று மோசே தொடர்ந்து இறைவனிடம் மன்றாடினார். ஆண்டவரும் அப்போதே தமது தீங்கு செய்கிற எண்ணத்தை மாற்றிக் கொண்டார். மலையில் இறைவன் கைப்பட எழுதி மோசேக்குக் கொடுத்திருந்த இரண்டு சட்டப் பலகைகளையும் தாங்கிக் கொண்டு சமவெளியை நோக்கி மோசே இறங்கினார். கூடாரங்களை அவர்கள் நெருங்கியபோது, அவருக்காகச் சற்றுத் தொலைவில் காத்திருந்த யோசுவா, ''பாளையத்திலிருந்து போர் முழக்கம் கேட்கிறது'' என்று சொன்னார். அதற்கு மோசே "இது போர் முழக்கம் அல்ல; கூத்தடிக்கிற கூக்குரல்தான் எனக்குக் கேட்கிறது" என்றார்.

தொலைவில் மோசே வந்தபோதே கன்றுக்குட்டி பீடத்தில் கம்பீரமாக நிறுத்தப் பட்டிருப்பதையும், அதைச் சுற்றி இஸ்ராயேலர்கள் நடனமாடிக் கொண்டிருப்பதையும் அவர் கண்டார். கோபத்தில் அவரது அணு ஒவ்வொன்றும் ஆட்டம் கொண்டது. மோசே வெறி பிடித்தவரைப் போல' ஆனார். தமது கைகளில் ஏற்றி வந்த ஆண்டவரின் திருச்சட்டங்கள் அடங்கிய பலகைகளை மலையடிவாரத்தில் தூக்கி எறிந்து உடைத்தார். கீழே இறங்கி வந்து பொன் கன்றுக்குட்டியைத் தூக்கி நெருப்பிலிட்டு உருக்கினார். பிறகு உருகிய பொன்னை இடித்துத் தூள் தூளாக்கி, தண்ணீரில் கலந்து இஸ்ராயேலர்களைக் குடிக்கச் செய்தார்.

மோசே, ஆரோன் அந்த மக்களுக்குத் தவறான வழி காட்டியதால் அவரைக் கடிந்து கொண்டார். ஆரோன் "நான் என்ன செய்வது? நீர் திரும்பி வரமாட்டீர்; எங்களை விடுவித்த தெய்வத்தை உருவமாகச் செய்து காட்டும் என்று என்னை இந்தப் பொல்லாத மனிதர்கள் வற்புறுத்தினார்கள்'' என்றார்.

உடனே மோசே "என்னைப் பின்பற்றுகிற உண்மையான இறைத் தொண்டர்கள் என் பக்கத்தில் வாருங்கள்'' என்று குரல் கொடுத்தார். லேவியர் எனப்பட்ட குருவம்சத்தார் அவர் பக்கத்திற்கு வந்தார்கள். அப்போது "கூடார வெளிகளில் எதிர்ப்படுகிறவர்கள் தங்கள் சாதி, சனம் என்று பாராமல் அவர்களை வெட்டிக் கொல்லுங்கள்" என்று மோசே உத்தரவிட்டார். அப்படியே அந்த ஒரே நாளில் மாத்திரம் மூவாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள். பிறகு மீண்டும் 'ஆண்டவராகிய கர்த்தரின் கருணையை நம்பி மோசே மலை உச்சிக்கு நடந்தார். ஆண்டவரிடம் மக்களுக்காகப் பிரார்த்தித்தார். ஏற்கெனவே மோசேயால் உடைக்கப்பட்ட பலகைகளுக்குப் பதிலாக ''இரண்டு கற்பலகைகளை வடிவமைத்துக் கொள். நாளை சீனாய் மலையின்மீது ஏறி வா" என்று கர்த்தர் மோசேக்கு ஆணையிட்டார். அவ்வாறே மறுநாள் இறைவனது சட்டங்கள் மீண்டும் அந்தக் கற்பலகைகளில் இறைவனால் எழுதப்பட்டு மோசேக்கு அருளப்பட்டன.

மோசேயின் அந்திம காலத்தில் ஆண்டவர் அவரை ஒரு மலை உச்சிக்குக் கொண்டு சென்று வாக்குத்தத்தின் பூமியான கானான் தேசத்தைக் காட்டினார். ஆனாலும் அதற்குள் அவர் பிரவேசிக்க முடியாது என்று அறிவித்தார். இறைவனை ஏறத்தாழ நேருக்கு நேர் தரிசித்திருந்தும், அவரது குரலைக் கேட்டிருந்தும், தங்களது மனங்களை அவர்கள் கடினப்படுத்திக் கொண்டதால் இறைவனின் சாபத்திற்கும், தண்டனைக்கும் இஸ்ராயேலர்கள் அவ்வப்போது ஆளானார்கள். இப்படியாக அவர்களின் முன்னவர்களுக்கு இறைவன் வாக்களித்த பூமிக்குச் செல்லுவதற்கு முன்பாக பல ஆண்டுகள் அவர்கள் பாலைவனத்தில் அலைந்தும், திரிந்தும் அல்லலுற்றார்கள். "மனிதர்கள் செய்ததை மறக்கிறார்கள்; செய்யாததை நினைக்கிறார்கள்'' என்பது அவர்களைக் குறித்தே எழுதப்பட்டதோ என்று நினைக்கிற வண்ணமாக பாலைவனம் முழுவதுமே இஸ்ராயேல் இனத்தாரின் கண்ணீரால் ஈரமானது.

(தொடரும்)

✉ நம்ம ஊர் வர்ணாவின் கண், உதடு, மூக்கு, face look - பம்பாய் இறக்குமதிகள் பிச்சை வாங்க வேண்டும். அழகிய வர்ணத்தின் அட்டைப்படம் அழகு.
தூத்துக்குடி, எஸ். ராமசுப்பிரமணியன்.

✉ 'சாராயத்தை ஒழிக்கிறதா? உன்னாலும் முடியாது; உங்கொப்பனாலும் முடியாது' என்பது போதை அடிமையின் போலி வாதம். செங்கை கிழக்கு எஸ்.பி.யிடம் செய்திகளைக் கேட்டறிந்து உடனடியாக குடிகாரர்களைச் சந்தித்து, நடப்புகளை அறிந்து வந்து மீண்டும் எஸ்.பி.யைப் பார்த்தது இலேசான வேலையல்ல; போதை ஒழிப்பு இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை கல்கிக்குத் தருவது நாட்டுக்கு நல்லது.
பொறையாறு, கானா. கணேசன்.

✉ டாக்டர் டி.என். சாயிமீனாட்சி சொன்ன 'ஒரு நள்ளிரவு நாடகம்!' நிகழ்ச்சி, ஒரு திகில் படத்தைப் பார்த்தது போல் இருந்தது.
திருப்பூர், ப.சங்கர்.

✉ மறைந்த கவுன்சிலர் லீலாவதி, தமது மூன்று பெண்களையும் வீரத்தோடு வளர்த்திருக்கிறார்... தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பதை இந்த மூன்று வீராங்கனைகளும் நிச்சயம் நிரூபித்துக் காட்டுவார்கள்.
நிலம்பூர், ஏ.எஸ். இராமசாமி.

✉ 'பெப்ஸி' உமா சிரித்துப் பேசாமல் அளவாகப் பேசினாலும் குறை சொல்கிறார்கள்! அன்பாகக் குடும்ப நலம் விசாரித்துப் பேசினாலும் தப்பென்கிறார்கள்! மத்தளமாகிவிட்ட உமா, ஐயோ பாவம்!
கமுதி, ராஜி.

✉ 'மேஜர் மைனர் ஆனார்!' என்ற கல்கியின் கவித்துவமான தலைப்பே 'நயம்பட உரை'யில் உம்மை யாரும் விஞ்ச முடியாது என்பதைத் தெளிவாக்கியது!.
பாஸ்டின்நகர், பி.எம். வன்னி.

✉ 'மேல்தட்டு வர்க்கத்தில் வாழும் உஷா கிருஷ்ணா, கீழ்த்தட்டு மக்களின் வாழ்வில் அக்கறை கொண்டு இவ்வாறு செயல்படுவது மனத்தை மகிழ்ச்சி கொள்ளச் செய்கிறது. பல சமூக சேவை அமைப்புகளும், மாதர் சங்கங்களும் இது போன்று நலிவுற்ற கலைகள் மேம்பட தங்களின் சிறிது நேரத்தையாவது செலவிடலாமே!
மதுரை-16 வி.பி. மகராசி.

✉ தலையங்கம் சிந்திக்க வைத்தது என்றால், கார்ட்டூன்கள், நச்...நச்... என்று இருந்தன!
பாப்பாரப்பட்டி, அருணகிரி.

✉ மூப்பனாரின் ராஜதந்திரத்தை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். வெளியிலிருந்து ஆதரவு தருவதாகக் கூறி, அவர்களுக்குச் சாதகமாக ஆட்சி இல்லை என்றால் கலைப்பது காங்கிரஸ் சித்தாந்தம். இவர்களை அமைச்சர் அவையில் இடம் பெற வைத்தால் 'கப் சிப்' ஆகிவிடுவார்கள். துள்ளுகிற மாட்டுக்கு மூங்கணாங்கயிறு போல இந்தப் பதவிகள்.
இலவங்கார்குடி, ஆரூர் அரசு.

ஐயோ பாவம் பெப்ஸி உமா!

✉ தலையங்கம் சிறப்பு! காங்கிரஸை ஐ.மு. அமைச்சர் அவையில் சேர்த்தால் காங்கிரஸ் மந்திரியின் கை அரிக்குமே!
மதுரை-9, இரா. கல்யாணசுந்தரம்.

✉ இருபக்கச் சிறுகதைகளைப் பற்றி அக்குவேறாய் ஆணி வேறாய்ப் பிரித்து விமர்சனம் செய்திருக்கிறார் சுஜாதா. சிறந்த விமர்சகர் என்பதை இதன்மூலம் நிரூபித்து விட்டார்.
நாகூர், ஏ. காதர்.

✉ வார்த்தைச் சித்தர் வலம்புரி ஜான் 'கனவுகளின் காவலன்' எழுதும்போது எங்களை எகிப்து தேசத்திற்கே நேரில் அழைத்துச் செல்வதுபோல் இருக்கின்றது. எப்போது அடுத்த வார கல்கி காண்போம் என ஆவலைத் தூண்டுகிறது இந்த அத்தியாயம்.
பரமக்குடி, ஏ.ஜே. ஆலம்.

✉ 'ஜெ' சினிமாவில் நடிக்காவிட்டால் என்ன... அதுதான் டி.வி.யில் நடித்தாரே என்ற தராசின் பதிலில் குசு(று)ம்பு கொப்பளித்தது.
அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

கல்கி-பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

முகூர்த்த நேர ஜோக்

போட்டி - 4

முடிவு

“அரசியல்வாதி வீட்டுல பெண் எடுத்தது தப்புன்னு புலம்பறீங்களே... என்ன ஆச்சு...?”

“அங்கே பாருங்க... கூட்டத்துல துண்டை விரிச்சு வசூல் பண்றார்.”

— எச். ஷேக்தாவூத்

“கல்யாணப் பொண்ணு மாப்பிள்ளையின் பக்கத்திலேயேதான் இருக்கா! புரோகிதர், ‘கல்யாணப் பெண்ணைக் கூப்பிடுங்கோ’ன்னு சொல்றாரே?”

“அதுவா! அவர் 1000 சினிமாவுக்கு மேல முகூர்த்த சீன் புரோகிதரா நடிச்சவரு! அந்த ஞாபகம்!”

— எஸ். திருமலை

“மாப்பிள்ளை தேவேந்திரனோட அ



மானியா இருக்கலாம். அதுக்காக இப்படியா?"

"ஏன்... என்ன செஞ்சார்?"

"முகூர்த்த நேரத்தில மணமேடையிலேயே தூங்கிட்டார்."

– கமால்பாட்சா

"என்ன மாப்பிள்ளை, யாரையோ எதிர்பார்க்கிறாப்பல இருக்கு. முக்கிய நண்பரா?"

"சினிமாவில வர்ற மாதிரி என்னோட முறைப் பெண்ணுக்குத் தாலி கட்ட நீ யாருன்னு வந்தா விட்டுட்டு ஓடிடலாமான்னு பார்த்துக்கிட்டிருக்கிறேன்."

- ஜானகி குமார்

"முகூர்த்த நேரம் முடிஞ்சி அரைமணி நேரம் ஆகப் போகுது. இன்னும் பொண்ணு மணமேடைக்கு வந்து சேரலையே ஏன்?"

"பொண்ணு சதர்ன் ரயில்வேயில் வேலை பார்க்குறா! நாலு மணி நேரம் தாமதமாத் தான் வந்து சேருவா!"

– எஸ். ரவீந்திரநாத்

"முகூர்த்த நேரம் முடிஞ்சு போச்சே... இன்னும் எதுக்காக வெயிட் பண்றீங்க?"

"கல்யாணப் பொண்ணுக்கு இருபத்தொரு வயசு முடிய இன்னும் பத்து நிமிஷம் பாக்கி இருக்காம்!"

– பி. கே. வள்ளல்





"இத பாருங்க... கல்யாணம் கட்டிக்கிறது 'ஆயுள் தண்டனை' மாதிரின்னு யாரோ சொன்னதுக்காக இப்படி கைதி டிரஸ்ஸிலெல்லாம் வந்து தாலிகட்டக் கூடாது!"

– ரா. பிரபு

"என்னதான் பையனோட அப்பா டீவி தொடர்பாளராக இருந்தாலும் இப்படியா?"

"என்னாச்சு?"

"வீடியோவுல 'இந்த முகூர்த்த நேரத்தை உங்களுக்கு வழங்குபவர்கள் 'முனுசாமி அண்டு சன்ஸ்'ன்னு விளம்பரம் செய்யறதைப் பாருங்க!"

– ஈ. எஸ். சம்பத்ராஜ்

"முகூர்த்தத்துக்கு நேரமாச்சு. பொண்ணை கூட்டிட்டு வாங்க."

"பொண்ணு முகூர்த்த பட்டுப் புடைவை கட்ட ப்யூட்டி பார்லருக்குப் போயிருக்கா. இதோ வந்து விடுவா."

– சி. ஆர். நாகராஜன்

"தாலி கட்டாம மாப்பிள்ளை என்னங்க தகராறு பண்றாரு?"

"சினிமா நடிகராச்சே. தாலி கட்டின உடனேயே அடுத்த சீன் முதல் இரவு தானாம்... ஏன் ஏற்பாடு பண்ணலேன்னு சண்டை போடறாருங்க..."

– எஸ். பாலசுப்பிரமணியம்

பிரசுரமாகியுள்ள ஒவ்வொரு ஜோக்கும் ரூ. 100 பரிசு பெறுகிறது...

மதுராந்தகத்தில் உள்ள அந்த மேம்பாலத்தைக் கடக்கும் போதுதான் அந்தப் பெரும் விபத்து நடந்தது.

"பாதி பாலத்தில் ஏறின பிறகுதான் அதை கவனிச்சேன். கரும்புகளை ஏத்திக்கிட்டு வந்த டிராக்டர் ஒன்று மேம்பாலச் சுவரில் பலமாக ஏற்கெனவே மோதிவிட்டிருக்க, அதன் ட்ரெய்லர் தலைகீழாகக் கவிழ்ந்த நிலையில் பாலத்தின் இடது பாதி முழுவதையும் அடைத்துக் கொண்டிருந்தது. வலப்பக்கமாக ஸ்டீரிங்கை வளைத்தேன். அப்போதுதான் எதிர்ப்புறமாக ஒரு பஸ் வேகமாக வருவதை கவனித்தேன். உடனே வண்டியை தன்னிச்சையாக இடப்புறம் திருப்பியதில் அந்த விபத்து நடந்தது. கார் வேகத்துடன் ட்ரெய்லரில் மோதியது.

கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு காரில் திரும்பிக் கொண்டிருந்த ரகுராமனோடு குடும்பமே இருந்தது. காரின் முன் சீட்டில் அவரோடு அவர் மனைவியும், இரண்டு வயது மகனும் அமர்ந்திருக்க, பின்சீட்டில் அவரது அப்பா, அம்மா மற்றும் ரகுராமனின் எட்டு வயது மூத்த மகன் ஆகியோர் இருந்தனர்.

"அம்மா நினைவிழந்த நிலையில் காணப்பட்டார். ஹாண்ட் பிரேக்கும், ஸீட் ரொடேடரும் அவர் தலையில் விசையாக மோதியிருக்க, ரத்தம் நிறைய வெளியேறிக் கொண்டிருந்தது. என் மனைவியும் சின்னப் பையனும் டாஷ் போர்டுக்கடியில் மாட்டிக் கொண்டிருந்தார்கள். மனைவி மெதுவாக வெளியில் வந்தாள். என் இடது கையில் பலத்த காயம். ஸ்டீரிங்கில் இதயம் வேகமாக மோதக் கூடாதென்பதற்காக என் கையை நடுவே வைத்துத் தடுத்ததினால் ஏற்பட்ட விளைவு.

"மோட்டார் பந்தயங்களில் எல்லாம் கலந்து கொண்டிருக்கிறேன். 1992 ல் மோட்டார் ரேஸ் குழுவிற்கு மானேஜராகவும் பணியாற்றியிருக்கிறேன். இதற்காக எடுத்துக் கொண்ட பயிற்சியின் காரணமாகத்தான் அந்த பயங்கர நேரத்திலும் என் கையைப் பயன்படுத்தி இதயத்தைப் பாதுகாக்க வைத்தது!" என்று வலி மிகுந்த அந்தக் கணங்களை நினைவு கூர்ந்தார் ரகுராமன்.

தொடர்ந்து அவர் கூறிய விஷயத்தைக் கேட்டபோது நம் மனத்திலும் பெரும் வலி. அந்த நெடுஞ்சாலையில் எதிர்ப்பட்ட வண்டிகளையெல்லாம் கைவீசி, "உதவி உதவி" என்று கதறியிருக்கிறார் அவர் மனைவி. ஆனால் அடுத்தடுத்து அவரைக் கடந்துபோன 20, 25 கார்களில் ஒன்றுகூட நிற்கவில்லை. அப்போது இரவு சுமார் ஒன்பது மணி.

அந்த சமயத்தில்தான் 'மனிதாபிமானம் உலகில் குறைந்திருக்கலாம்; அழிந்துவிடவில்லை' என்பதை உணர்த்தும் சம்பவம்



• விபத்தான குடும்பம்: கட்டுகளுடன்...



• முரளிதரன்

நடந்திருக்கிறது. அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்த முரளிதரன் தம் காரை நிறுத்தினார்.

"அலுவலக வேலை தொடர்பாக பாண்டிச்சேரி போயிட்டு திரும்பி வந்துக்கிட்டிருந்தேன். அப்போதுதான் வழியில் விபத்தில் சிக்கிக் கொண்ட இவர்களைப் பார்த்தேன். ஏதோ என்னால் முடிந்த உதவியைச் செய்தேன்!" என்றார் முரளிதரன் நம்மிடம்.

"அது 'ஏதோ' உதவியல்ல. கடவுளே நேரில் வந்து உதவியதாகத்தான் நான் நினைக்கிறேன். மதுராந்தகத்திலிருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு எங்களை டாக்சியில் அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு, பின்னாலேயே அவரும் தம் காரில் வந்தார். அங்கே அம்மாவின் நிலை ஓரளவு சீரடைந்தது. என் சின்ன மகனின் தொடை எலும்பு பாதிக்கப்பட்டிருந்தது. உள்ளுக்குள்ளேயே ரத்தம் வெளியேறிக் கொண்டிருக்கலாம்

போலீஸின் மெத்தனம்: ஒரு குடும்பமே விபத்தில்!

என்று கருதிய மருத்துவர் அவனுக்கு டிரிப்ஸ் ஏற்றிவிட்டு, 'ஏதாவது ஸ்பெஷலைஸ்டு மருத்துவமனையில் அவனைச் சேர்ப்பது நல்லது' என்றார்.

"என் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. ஒரு தொட்டில் கட்டு போட்டார்கள். ரியர் வ்யூ மிரர் என் தலையின் பின்புறத்தில் மோதியதில் தலையில் காயம் ஏற்பட்டு, ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அந்தப் பகுதியில் மூன்று தையல்கள் போட்டார்கள். அங்கிருந்து சென்னைக்குப் பயணமானோம்" என்றார் ரகுராமன்.

"டாக்ஸியில் ரகுராமன் குடும்பத்தவரை செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டு, பின்னால் சென்றபோதே, கருங்குழி செக்போஸ்டில் இந்த விபத்து பற்றி போலீஸிடம் தெரிவித்தேன். 'விபத்து நடக்க முக்கியக் காரணம் பாலத்தில் கவிழ்ந்து கிடந்த வண்டியிலிருந்து வெளியேறிய எண்ணெயும் கரும்புச் சக்கைகளும்தான்' என்று கருதியதால், வேறு வண்டிகள் அங்கு ஸ்கிட் ஆவதையாவது போலீஸ் தடுக்கலாமே என்று கருதித்தான் தகவல் சொன்னேன். செங்கல்பட்டு மருத்துவமனையில் ஓரளவு திருப்திகரமாகவே ரகுராமன் குடும்பத்தினருக்கு முதலுதவி செய்தார்கள் என்றாலும் அரசு மருத்துவமனைக்கே உரிய இலக்கணப்படி பலருக்கும் இனாம் தர வேண்டியிருந்தது. ரகுராமனிடம் அப்போது ரொக்கமாக எதுவுமில்லை என்பதால் நான் உதவினேன். இதற்குள் அவர் வேலை செய்த நிறுவனத்துக்கு இது பற்றி தகவல் அளிக்கப்பட்டதால், அங்கு பணிபுரிபவர்கள் உடனடியாகச் செயல்பட்டார்கள். ஒரு குழு பொதுமருத்துவ மனைக்கும், இன்னொரு குழு வண்டலூரில் உள்ள நெடுஞ் சாலையிலுமாகப் பிரிந்து நின்றது" என்று க்ளைமாக்ஸை சுட்டிக் காட்டினார் முரளிதரன்.

நல்லவேளையாக விபத்தில் சிக்கியவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டு விட்டன. இவர்களின் உடல்நிலை படிப்படியாகத்தான் குணமாகி வருகிறது என்றாலும் மனத்தில் இரண்டு கேள்விகள் உறுத்துகின்றன.

முரளிதரன் போன்று உதவிக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போவது ஏன்?

மேம்பாலத்தில் மாலை சுமார் நான்கு மணிக்கே கரும்பை ஏற்றி வந்த டிராக்டர் விபத்தில் அந்தர் பல்டி அடித்திருக்கிறது என்றாலும் அந்த இடத்தில் நின்று எந்தப் போலீஸும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவில்லை. இது ஏன்?

— ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : ஸ்ரீஹரி

சென்னை மெட்ரோ ரயில் திட்டம் தொடங்கப்பட்ட போது, ஆமை (அல்லது நத்தை) வேகத்தில் வேலைகள் நடந்தன. காரணம், திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மிக மிகக் குறைவு. (பத்துக் கோடி ரூபாய்தான் என்று ஞாபகம்.)

சமீபத்திய செய்தி ஒன்றைப் பார்த்தால் சிரிப்புப் பொத்துக் கொண்டு வரும்!

கேரளத்தில், அங்கமாலி - சபரிமலை ரயில்வே திட்ட மதிப்பு (இப்போதைக்கு!) ஐநூற்று ஐம்பது கோடி ரூபாய்.

ரயில்வே பட்ஜெட்டில் எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது தெரியுமோ? நூறு கோடி? ஊஹூம். அட, ஐம்பது கோடி? அல்ல. போகட்டும், பத்துக் கோடி? அதுதான் இல்லை.

'பிசாத்து' என்பார்களே அந்த வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளுங்கள், முதலில்.



பாரபட்சம் பார்க்கிறார் பாஸ்வான்!

ஒரு லட்ச ரூபாய்!

550 கோடி ரூபாய்த் திட்டத்தில்,

ஒரு லட்ச ரூபாயை வைத்துக் கொண்டு ஒரு துண்டு தண்டவாளம் போட முடியுமா?

ஆனால், நாடாளுமன்றத்தில் எம்.பி.க்கள் எம்பி எம்பிக் குதித்துக் கேள்விகள் கேட்டால், 'அங்கமாலி - சபரிமலை ரயில்பாதைக்கு 550 கோடி ரூபாய்த் திட்டம் போடப்பட்டிருக்கிறது' என்று சொல்லி, வாயை அடைத்து விடுகிறார் பாஸ்வான்! எம்.பி.க்களும் நாடாளுமன்ற காண்டீனில் லஞ்ச் சாப்பிடப் போய் விடுவார்கள்.

குற்றிப்புரம் - கோழிக்கோடு இரட்டை ரயில் பாதைத் திட்டச் செலவு 57 கோடி ரூபாய். ஒதுக்கீடு எவ்வளவு தெரியுமோ?

கொஞ்சம் பரவாயில்லை - முன்னதைப் பார்க்கையில்! ஒரு கோடி ரூபாய்.

இந்த அகலப் பாதை, இரட்டைப் பாதை விஷயங்களில் அதிகம் பணம் பண்ண முடியாது. ஆனால் திருவனந்தபுரம் ரயில்வே ஸ்டேஷனை அழகுபடுத்த 40 லட்ச ரூபாய் ஒதுக்கீடாம். (இங்கே பணம் பண்ணலாமே!)

ஆனால், மத்திய அமைச்சர்களைக் கண்டு விட்டால் தலை கால் தெரியாமல், சால்வை போர்த்தி, மாலை போட்டு இந்திரன்-சந்திரன் என்று புகழ்ந்து தள்ளுகிற நம்மூர்த் தலைவர்கள், அமைச்சர்கள் ரகமல்ல கேரளத்துக்காரர்கள். அதிலும் முதல்வர் நாயனார் பாஸ்வானை முன்னால் வைத்துக் கொண்டே, ரயில்வே இலாகா எப்படியெல்லாம் கேரளத்துக்குப் பாரபட்சம் காட்டுகிறது என்று பட்டியல் போட்டு ஒரு பிடி பிடித்து விட்டார்!

—எஸ்.வி.என்

வெயிலுக்கு இதமாகச் சாப்பிடுங்கள்!

கடும் வெயிலில் வெளியே வேலையாகச் சுற்ற வேண்டும் என்று இருந்தால் தயிரையும், பழைய சோற்றையும் நன்றாகப் பிசைந்து அதில் இரண்டு ஸ்பூன் அக்மார்க் நல்லெண்ணெய்யைக் கலந்து சாப்பிட்டு விட்டுச் செல்லுங்கள். வெயிலின் கடுமை தெரியாது. ஆனால் பழைய சோறு சாப்பிட்ட பின்பு சூடாக எதையும் உண்ணக் கூடாது.

— கோவி. இராஜேந்திரன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு)


கிசுகிசுவுக்கு
அப்பாஸின் விளக்கம்!